89% வாக்குறுதிகள் கிடப்பில் பக். 11

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 கதிர் 222 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 21. செவ்வாய்க்கிழமை 05.07.2016

## எமது கடலில் இந்திய மீனவர் மீன்பிடிக்க அனுமதிக்கோம்

### மீன்பிடி அமைச்சரின் கருத்துக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 5
இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்க முடியாது என்று வடக்கு மாகாணக் கடற்றொழில் இணையச் செயலாளர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.
குறிப்பிட்ட சில நாள்களுக்கு இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்று இந்திய அரசு யோசனை முன்வைத்திருந்தது. இது குறித்துப் பரிசீலிக்கப்படுகின்றது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர ஆகியோர் கூறினர்.
கடற்றொழில் இணையச் செயலாளர் அதனைக் கண்டித்தார். "எமது கடல் வளம் இந்திய மீனவர்களால் அழிக்கப்படுகின்றது. நாம் ஒருபோதும் இந்திய அரசின் கோரிக்கையை செயற்படுத்த அனுமதியோம்" என்றும் அவர் தெரிவித்தார்.
(விரிவு 8 ஆம் பக்கத்தில்)

## புலிகள் நட்ட தேக்குகளை வெட்டி விற்கும் கொழும்பு

### வரலாறே அழிகிறது என மக்கள் விசனம்

முல்லைத்தீவு, ஜூலை 5
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் உருவாக்கப்பட்ட தேக்கு மரக்காடுகள் வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தால் அழிக்கப்படுகின்றன என்று ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். "அடுத்த சந்ததியினரின் காதுகளுக்கு எமது வரலாற்றைக் கொண்டு செல்வதற்காவது இந்தக் காடுகளைப் பாதுகாக்கவேண்டும்" என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.
"தற்போது அந்தப் பகுதியில் உள்ள தேக்கு மரங்கள் உரிய வளர்ச்சியை அடைந்துள்ளன. அவற்றை வெட்டி விற்றுவிட்டு அந்த இடத்தில் புதிதாக மரங்கள் நடப்படவுள்ளன" என்று கூறுகின்றனர் முல்லைத்தீவு மாவட்ட வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினர்.
(விரிவு: பக்கம் 04)

# இராணுவம் கொத்துக் குண்டு பயன்படுத்தியதில் தவறில்லை

### 2010 ஆம் ஆண்டுக்கு முன் அது சட்டவிரோதமில்லை என்கிறார் காணாமற்போனோர் ஆணைக்குழுத் தலைவர் பரணகம

கொழும்பு, ஜூலை 5
2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை இராணுவம் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தியிருந்தால் அது சட்டத்துக்கு முரணானதல்ல என்று தெரிவித்தார் மக்ஸ்வெல் பரணகம.
இலங்கையில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் தலைவர் அவர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ச இந்த ஆணைக் குழுவை நியமித்திருந்தார்.
கொத்துக் குண்டு தடை வெளிப்படுத்தல் 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதியே நடைமுறைக்கு வந்தது, போர் நடந்து கொண்டிருந்தபோது அது கட்டாயம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாக இருக்கவில்லை என்றும் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.
"அதனால், இலங்கை இராணுவத்துக்குத் தேவை இருந்து, அது கொத்துக் குண்டுகளைப் பயன் படுத்தி இருந்தால் அந்த நேரத்தில் பக்.25

## தமிழ் தேசிய கீத சர்ச்சை வழக்கு செப்ரெம்பரில் விசாரணைக்கு

கொழும்பு, ஜூலை 5
சுதந்திர தினத்தன்று தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டமை சட்டவிரோதமானது என்று தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்ட மனு செப்ரெம்பர் முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
உயர்நீதிமன்ற நீதியரசர்கள் மூவர் அடங்கிய குழு முன்னிலையில் விசாரணை இடம்பெறுமெனப் பிரதம நீதியரசர் கே.சிறீபவன் மற்றும் நீதியரசர் ஈவா வனசுந்தர ஆகியோர் தெரிவித்தனர்.
மனுவைப்பேலியகொடையைச் சேர்ந்த மூவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். (த-5)

## மத்திய வங்கி ஆளுநரின் நியமனம்: விமல் சாடல்

கொழும்பு, ஜூலை 5
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவாகச் செயற்பட்டு அமெரிக்காவில் சிறைத் தண்டனை அனுப வித்து வரும் ராஜ் ராஜரத்தினத்துக்குச் சொந்தமான நிறுவனத்தின் ஆலோசகராகப் பணி புரிந்தவர் இந்திரஜித் குமாரசுவாமி. அவரை மத்திய வங்கியின் ஆளுநராக நியமித்ததைக் கண்டிக்கின்றோம் என்று மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக இந்திரஜித் குமாரசுவாமி பக்.25

## அமைச்சர்களை நேற்று சிறை வைத்த மைத்திரி



கொழும்பு, ஜூலை 5
புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட மாத்தறை மாவட்ட மதுவரித் திணைக்களக் கண்காணிப்பாளர் பணியகத்தில், சந்தேக நபர்களை அடைத்து வைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள இரும்புக் கூண்டுக்குள், அமைச்சர்களை அடைத்து வைத்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
மாத்தறை மாவட்ட மதுவரித் திணைக்களக் கண்காணிப்பாளர் பணியகத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் திறந்து வைத்தார்.
இதையடுத்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த இரும்புக் கூண்டுக்குள், அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன மற்றும் தென்மாகாண முதலமைச்சர் சான் விஜேலால் உள்ளிட்ட அமைச்சர் களை ஜனாதிபதி மைத் பக்.24

## விசாரணைகளை முடிக்க மேலும் ஒருவருட அவகாசம்

### கோருகிறது பரணகம ஆணைக்குழு

கொழும்பு, ஜூலை 5
காணாமற்போனோர் தொடர் பில் விசாரணை நடத்தி வரும் பரணகம ஆணைக்குழு, தமது பணிகளை இறுதிப்படுத்துவதற்கு மேலும் ஒரு வருடகால அவகாசத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரவுள்ளது. இதற்கான கடிதம் வார இறுதிக் குள் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டது. பக்.25

## லஞ்ச ஊழல் ஆணைக்குழு தமிழ் அதிகாரிக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5
யாழ். மாவட்டச் செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளரைஎதிர்வரும்8ஆம் திகதி, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.
2014 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆயிரம் துவிச்சக்கர வண்டிகள் விநியோகம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் கடந்த ஆண்டு மேற்கொள்ளப் பட்ட பக்.23

## கடவுளர்களும் கைவிட்டால் எமது நிலை அதோகதிதான்

### மருத்துவர்கள் போராட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் நேற்றுப் பரிதாபக் குரல்

யாழ். ஜூலை 5
கடவுளும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டால் மக்களுடைய நிலை அதோகதிதானா? நாங்கள் மீண்டும் வருவதென்றால் அதற்கான பணம் எங்களுக்கு எங்கிருந்து கிடைக்கும்? இவ்வாறு, யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகக் காத்திருந்த நோயாளர்கள் நேற்று கேள்வி எழுப்பினர்.
நாடு முழுவதும் நேற்று மருத்துவர்கள் 4 மணிநேரப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பக்.23

## ஓ.எல். கூடச் சித்தியெய்தாதவர்களை அமைச்சர்களாக்கியது மக்களின் தவறு

### இப்படிச் சொல்கிறது அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜூலை 5
கல்விப் பொதுத் தராதரச் சாதாரண தரத்தில் சித்தியடையாதவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி அவர்களை அமைச்சர்களாக்கியது பொதுமக்களின் தவறு என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் நவின் சொய்சா தெரிவித்தார்.
மாலபே வைத்தியக் கல்லூரி, எட்கா உடன்படிக்கை உள்ளிட்ட ஆறு விடயங்களை முன் வைத்து வைத்தியர்கள் நேற்று நான்கு மணி நேரப் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டம் தொடர்பில் சொய்சா ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:
மாலபே தனியார் வைத்திய கல்லூரி, வைத்தியர்களை உருவாக்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது என்று சொல்வதை விட பணம் சம்பாதிப்பதற்கான ஓர் இடமாகவே அறியப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் தொடர்பில் சிந்திக்காத அரசியல்வாதிகளே இங்கு காணப்படுகின்றனர். பக்.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சிக்கு வரும் ஜனாதிபதி காணிகளை விடுவிக்க வேண்டும்

## இல்லையேல் தொடர் உணவு தவிர்ப்பு; பரவிப்பாஞ்சான் மக்கள் எச்சரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 5

கிளிநொச்சிக்கு அடுத்த வாரமளவில் ஜனாதிபதி வருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவர், இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள எமது காணிகளை விடுவித்துத் தரவேண்டும். இல்லையேல் நாம் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம்.



இவ்வாறு பரவிப்பாஞ்சான் மக்கள் நேற்று இராணுவத்தினருக்கு நேரில் சென்று எச்சரிக்கை விடுத்தனர்.

கிளிநொச்சி நகருக்கு அருகிலுள்ள பரவிப்பாஞ்சான் கிராமத்தில் தனியாருக்குச் சொந்தமான 180 ஏக்கர் காணிகளை இராணுவம் கையகப்படுத்தியுள்ளது. காணிகளின் உரிமையாளர்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

கடந்த வாரமும் இராணுவ முகாமுக்குச் சென்ற பொதுமக்கள், தமது காணிகளை விடுவிக்குமாறு கேட்டிருந்தனர். ஒரு வாரத்தில் முடிவு தெரிவிக்கவேண்டும் என்று இராணுவத்தினருக்கு கடிதம் கொடுத்திருந்தனர். ஒரு வாரம் நேற்றுடன் முடிந்தது. மீளவும் இராணுவ முகாமுக்குச் சென்ற மக்கள் தங்கள் காணிகளை விடுவிக்குமாறு இராணுவத்தினருடன் தர்க்கப்பட்டனர்.

இராணுவ முகாம் அமைந்துள்ள காணியை விடுவிக்க முடியாது. காணி விடுவிப்புத் தொடர்பில் அரசுதான் தீர்மானம் மேற்கொள்ளவேண்டும். பெயர் விவரங்களைத் தாருங்கள். நாங்கள் உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துகின்றோம் என்று இராணுவத்தினர் நேற்றுத் தெரிவித்தனர்.

"காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். கிளிநொச்சிக்கு வருகை தரும் ஜனாதிபதி எங்கள் காணிகளை விடுவிப்பார் என்று நம்புகின்றோம். இல்லாவிடின் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நாம் நடத்துவோம்"- என்று பரவிப்பாஞ்சான் மக்கள் இராணுவத்தினருக்கு எச்சரிக்கை விடுத்துவிட்டுத் திரும்பினர்.

மே மாதம் 10ஆம் திகதி பரவிப்பாஞ்சான் இராணுவ முகாம் அமைந்துள்ள ஒரு பகுதிக் காணி விடுவிக்கப்பட்டது. இன்னமும் 54 குடும்பங்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. 20 குடும்பங்கள் தற்போது கிளிநொச்சியில் வயல்வெளிப் பகுதிகளில் கொட்டில்களிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றன. (ற-5-21-ரி3)

## நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

வலி. கிழக்கு பிரதேச சபையில் நிறுவைகள், அளவுகள் கருவிகளுக்கு முத்திரையிடப்பட உள்ளது என்று பிரதேச சபையின் செயலாளர் யு.ஜெலீபன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வர்த்த நிலையங்கள், கூட்டுறவு சங்கங்களில் உள்ள நிறுவைகள், அளவுகள் கருவிகளுக்கு பிரதேச சபையால் முத்திரையிடப்பட உள்ளது.

வியாழன், வெள்ளி, திங்கள் ஆகிய நாள்களில் அச்சுவேலியில் உள்ள வலி.கிழக்கு பிரதேச சபை உப அலுவலகத்திலும், எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை, 15ஆம் திகதி வெள்ளிக்கிழமைகளில் கோப்பாயில் உள்ள வலி.கிழக்கு பிரதேச சபை உப அலுவலகத்திலும், 25ஆம் திகதி திங்கள், 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமைகளில் உரும்பிராயில் உள்ள வலி. கிழக்கு பிரதேச சபையின் உப அலுவலகத்திலும் காலை 9 மணி முதல் 3 மணிவரை முத்திரையிட முடியும் - என்றார். (ற-21)


## இந்திய மீனவர்கள் கைது

மன்னார், ஜூலை 5

மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பாம்பனைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மாலை கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டு புத்தளம் கற்பிட்டி கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

மீனவர்கள் பயணித்த நாட்டுப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. மீனவர்கள் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவித்தனர். (ற-5)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆண்டு தோறும் நடத்தப்படும் 'அரும்பு' கல்வி செயற்றிட்டத்தின் கீழ் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச பயிற்சிப் பரீட்சைகள் மற்றும் வழிகாட்டல் கருத்தரங்குகள் நடைபெற்றுவருகின்றன. மகாஜனக்கல்லூரி மற்றும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரிகளில் 12 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 300க்கும் அதிகமான மாணவர்கள் அதில் கலந்துகொண்டு வருகின்றனர். (ற-ஜ)

## பிரதமரின் சூழ்ச்சிகளை முறியடிப்போம் - வாசுதேவ

கொழும்பு, ஜூலை 5

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சூழ்ச்சிகளை முறியடிப்பதே கூட்டு எதிரணியின் பிரதான கடமை என மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் ரணில் மூலமாகவே தற்போதைய ஆட்சி நடைபெற்று வருகின்றது. பிரதமர் ரணில் முயற்சித்த சூழ்ச்சிகரமான செயற்பாடுகள் தோல்வியடைகின்றன. அதனால் ரணில் தனது தனிநபர் ஆட்சியைச் செயற்படுத்துவதற்கு காத்திருக்கின்றார் - என்றார். (ற-5)

## வல்வை. தோட்டத்திலிருந்து வெடிபொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

வல்வெட்டித்துறையில் காணியொன்றில் இருந்து ஒரு தொகுதி வெடிபொருள்கள்நேற்று மீட்கப்பட்டன.



வல்லை வீதியிலுள்ள நெசவுசாலை ஒன்றின் பின்புறம் உள்ள தோட்டக்காணியிலிருந்தே குறித்த வெடி பொருள்கள் மீட்கப்பட்டன.

தோட்டக்காணியின் உரிமையாளர் நேற்றுமுன்தினம் தனது காணியைத் துப்புரவு செய்தார். அப்போது நிலத்தில் புதையுண்டு இருந்த வெடிபொருள்களை அவர் இனம் கண்டார். இது குறித்து வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு நேற்று விசேட அதிரடிப்படையினர் வெடிபொருள்களை அகற்றினர். 11மோட்டார் எறிகணைகள், 25 மோட்டார் பரா எறிகணைகள் மற்றும் 69 கைக்குண்டுகள் மீட்கப்பட்டன என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (ற-101)

## அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி நகரில் நேற்றுக் கையெழுத்து வேட்டை

யாழ்ப்பாணம், ஜூலை 5

சகல அரசியல் கைதிகளையும் விடுவிக்குமாறு கோரி முன்னிலை சோசலிசக் கட்சியால் யாழ்ப்பாணத்தில் நேற்று கையெழுத்துப் போராட்டம் நடத்தப்பட்டது.



யாழ்ப்பாண பஸ் நிலையத்தின் முன்பாக முற்பகல் 10.30 மணி தொடக்கம் மதியம் வரையில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இராணுவத்தை இராணுவ முகாம்களுக்குள் முடக்குவது, மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவது, கைப்பற்றப்பட்ட காணிகளை இராணுவத்தினர் திருப்பி வழங்குவது, போர்க்கால இழப்பீடுகளை வழங்குவது, அரசியல் கைதிகளை விடுவிப்பது போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்தக் கையெழுத்துப் போராட்டம் நடத்தப்பட்டது.

மூவின மக்களையும் ஒன்றுதிரட்டி இந்தக் கையெழுத்துப் போராட்டம் நடத்தப்படுகின்றது என்று முன்னிலை சோசலிசக் கட்சியினர் தெரிவித்தனர். (ஜ-5-101-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மீனவர் 6 பேர் கைது

மன்னார், ஜூலை 5

மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பாம்பன் பகுதி மீனவர்கள் அறுவர் இலங்கை கடற்படையினரால்கைது செய்யப்பட்டனர். நேற்று மாலை இவர்கள்கைதுசெய்யப்பட்டார்கள்.

இவர்கள் புத்தளம் கற்பிட்டி கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தினிடம்பாறப்படுத்தப்பட்டனர். அவர்களின் நாட்டுப் படகு கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவர்.

(உ-21)

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வரை: 017 | சீட்டிழுப்பு திகதி: 2016.07.04
வெற்றி இலக்கங்கள்: 09 12 47
இல்லை இலட்சாதிபதிகள்: 053
வழங்கப்பட்ட மொத்த பரிசு: 9,882,400/=
Web: www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வரை: 1276 | சீட்டிழுப்பு திகதி: 2016.07.04
வெற்றி இலக்கங்கள்: 13 56 57 62 K
ரூ. 18,713,480/=
Web: www.dlb.lk

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது நிறுவனத்தின் ஆலோசகரும்
ஆங்கில மொழிமூல
விஞ்ஞான பாட ஆசிரியருமான
**திரு.அ.கஜேந்திரன்**
அவர்கள் இலங்கை தேசிய அதிபர்கள் சேவை தரம் III (SLPS-III) இற்கு நியமனம் பெற்றமையை பாராட்டி வாழ்த்துவதுடன்,
அவர் மென்மேலும் பல பதவிகள் பெற்று உயர்வடைய குரும்பசிட்டி முத்துமாரியம்பாளின் அருளை வேண்டி நிற்கின்றோம்.
A.S.N. Institute,
English Medium,
Palaly Road, Urumpirai.
இயக்குநர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

தவறிவிட்டது
திறப்புக் கோர்வை அடங்கிய கறுப்பு துணிப்பை ஒன்று மானிப்பாய் மருதடி வீதியில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 980 6919

வேலையாள்கள் தேவை
யாழ். நகரில் உள்ள குளிர்பான நிலையம் ஒன்றுக்கு வேலை ஆள்கள் உடன் தேவை.
வேலை நேரம்:
காலை 8.30 - மாலை 5.00 மணிவரை
தொடர்புகளுக்கு: 076 9424 798

வேலையாள்கள் தேவை
• றொட்டி, கொத்து தயாரிப்பவர்
• வெயிற்றர்
279, ஸ்ரான்லிவீதி யாழ்
077 410 3245

காணி விற்பனைக்கு
A9 வீதி, அரியாலை சந்தியிலிருந்து நாவலடிக்குச் செல்லும் பாதையில் 900m தூரத்தில் (புகையிரதப் பாதைக்கு அருகில்) அமைந்துள்ள 40 நெற்பரப்பு மண்காணி விற்பனைக்குண்டு.
A9 வீதி, (TATA மோட்டார் கம்பனி அருகில்) பொன்னம்பலம் வீதி, 1ஆம் குறுக்குச் சந்தியில் 250m தூரத்தில் அமைந்துள்ள 5 நிலப்பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு
தொடர்புக்கு: 0777 392415

சிறுநீரகம் தேவை
35 வயது மதிக்கத்தக்க சிறுநீரக நோயாளி ஒருவருக்கு (O+) இரத்த வகை உடைய சிறு நீரகம் தேவை. நல் உள்ளம் கொண்டோரிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு
076 8871068 / 076 542 1781

பதவி வெற்றிடம்
எமது கட்டுமான நிறுவனத்துக்கு கீழ்க்காணும் பணியாளர்கள் தேவை.
1. தொழில்நுட்ப உத்தியோகத்தர்
(தகைமை NCT Civil)
(வேலைத்தளம் - பூநகரி)
2. வேலை மேற்பார்வையாளர்
(தகைமை A\L - வேலைத்தளம் - பளை)
அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
மேலதிக விவரங்களுக்கு
dandevakumar@gmail.com.
077 744 4098 (வன்னன் கட்டட நிர்மாணம்)

வீடு விற்பனைக்கு
இருபாலை அரசடி ஒழுங்கையில் 02 பரப்புக் காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு
(பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு அருகில்)
தொடர்புக்கு:
077 4976 815, 077 9317 674

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
மாபெரும் கருத்தரங்கு
வணிகக் கல்வி
ஆசிரியர் :-
சக்திவடிவேல் பிரதீபன்
(M.COM)
ஆரம்பம் :-
09.07.2016 சனிக்கிழமை
நேரம் :- 1.00 P.M
இரண்டு நாள்கள் நடைபெறும்.
* வெளி மாணவர்களும் பங்குபெற்றலாம்.
(சி/24103)
(11.17)
தொடர்புகளுக்கு:-
ஆசிரியர் - 077 602 7511

புதிய பிரிவுகள் ஆரம்பம்
aat [Sri Lanka]
Foundation, Intermediate, Final
[AA1, AA2, AA3]
Qualification :- G.C.E O/L 6 Passes
Medium - Tamil & English
Batch I :- Week end days
Batch II :- Week days
Note:- 2015ஆம் ஆண்டு G.C.E O/L பரீட்சை எடுத்த மாணவர்களும் இணைந்து கொள்ளலாம். பதிவுகளை முன்னர் மேற்கொள்ளவும்.
External Degree
யாழ். பல்கலைக்கழகம்
BA Part I, Final இற்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
Further Details:-
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
0212223382 / 0212229149

## மரண அறிவித்தல்

### திருமதி ஜீவா தர்மலிங்கம்



கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜீவா தர்மலிங்கம் கடந்த (01.07.2016) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா தனலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பாக்கியன் தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், சந்திரபோஸ் (ஜேர்மனி), ஜிக்கிநிமல் (ஜேர்மனி), தயாநதி (ஜேர்மனி), யோகசீதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கபில்ராஜ் (ஜேர்மனி), தர்சிகா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான புஸ்பமாலா, கணேசலிங்கம் மற்றும் ஆனந்தன், குமார் (இரட்டை மார்க் அப்பள உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், மயூரன், சௌமியா ஆகியோரின் அன்பு மாமியும், டினேஸ், அனிசன், கயானா, கீர்த்திகா, சுபஸ்திகா, கமல்ராஜ் ஆகியோரின் பெரியம்மாவும், சியானின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கட்டப்பிராய் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

தேர்தல்கள் ஆணைக்குழு

வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்காக நலன்புரிச் சங்கங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல்

★ வருடாந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் நடவடிக்கையின்போது பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து சங்கங்கள், அமைப்புகள் என்பவற்றின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதுடன், இதற்கு மேலதிகமாக மாநகரசபை, நகரசபை பிரதேசங்களைப் போன்றே மக்கள் செறிந்துவாழும் பிரதேசசபை அதிகார எல்லைப் பிரதேசங்களில் அந்தந்தக் கிராமங்களில், வீதிகளில் அல்லது பிரதேசவாரியாக அங்கு வதிகின்ற மக்களால் அமைத்துக்கொள்ளப்பட்ட நலன்புரிச் சங்கங்கள், அந்நியோன்ய உதவிச் சங்கங்களின் (உதாரணமாக கல்கிஸை பழைய கல்வல வீதி குடியிருப்பாளர்களின் சங்கம், சந்தானம்பிட்டி மூன்றாம் ஒழுங்கை நலன்புரிச்சங்கம்) ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

★ வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் நடவடிக்கைகளின் போது தகைமை பெற்றுள்ள அனைத்து பிரஜைகளும் கணக்கெடுக்கப்பட்டனரென்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளக்கூடிய ஒத்துழைப்பை வழங்கக்கூடிய மாநகரசபைகள், நகர சபைகள் மற்றும் மக்கள் செறிந்துவாழும் பிரதேச சபை எல்லைப் பிரதேசங்களில் அமைந்திருக்கும் நலன்புரிச் சங்கங்கள், அந்நியோன்ய உதவிச் சங்கங்கள், உதவி வழங்குவதற்கு முன்வரும் அமைப்புகள் இருக்குமாயின் அவை தொடர்பான தகவல்களை குறிப்பிட்ட அமைப்பின் நிறைவேற்று அதிகாரியொருவரின்பெயர் மற்றும் தபால் முகவரி, தொலைபேசி இலக்கம், அத்துடன், இருக்குமாயின் மின்னஞ்சல் முகவரியுடன் கீழே காட்டப்பட்டுள்ள முகவரிக்கு 2016.07.15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்குமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (நாடாளுமன்றத் தேர்தல்கள்)
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

எச்.எம்.டீ.ரீ. ஹேரத்,
செயலாளர்,
தேர்தல்கள் ஆணைக்குழு.

தொ.பே: 011-2868441, 42,43
பக்ஸ்:011 -2868426
E-mail : info@slelections.gov.lk
Web site : www.slelections.gov.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளால் நடப்பட்ட தேக்கு மரங்கள் பெருவாரியாக அழிக்கப்படுகின்றன

## ஒட்டுசுட்டான் மக்கள் குற்றச்சாட்டு



முல்லைத்தீவு, ஜூலை 5

"தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் உருவாக்கப்பட்ட தேக்கு மரக் காடுகள் வனவள பாதுகாப்புத் திணைக்களத்தால் அழிக்கப் படுகின்றன. அடுத்த சந்ததியினரின் காதுகளுக்கு எமது வரலாற்றைக் கொண்டுசெல்வதற்காவது இந்தக் காடுகளைப் பாதுகாக்க வேண்டும்."

இவ்வாறு ஒட்டுசுட்டான் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முல்லைத்தீவு - மாங்குளம் வீதியில், 9 ஆம்கட்டைப்பகுதியில்அமைந்துள்ள தேக்கு மரக் காடுகள் தற்போது வேகமாக அழிக்கப்படுகின்றன.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:

இந்த மரங்கள் ஏன் அழிக்கப் படுகின்றன, எதற்காக அழிக்கப்படுகின்றன என்பது தெரியவில்லை. தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகின்றன. வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினரே பெருவாரியாக அழித்து வருகின்றனர். காடுகளை அழிக்கும் இவர்கள் தேக்கம் குற்றிகளை வாகனங்களில் ஏற்றி கொண்டு செல்கின்றனர். அவற்றை எங்கு கொண்டுசெல்கிறார்கள்என்பது கூடத் தெரியவில்லை.

வனவள பாதுகாப்பு என்ற போர்வையில் அழிக்கப்படும் இந்தக் காட்டின் வரலாறுகளை யாரும் அறிந்திருக்க மாட்டார்கள். அவ்வாறு அறிந்திருந்தால் இதற்கு அனுமதி வழங்கியிருக்கமாட்டார்கள். எமது இனத்தின் காவலர்களால், தமிழீழ விடுதலைப் புலிகளின் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் சூழலுக்கு நன்மை பயக்க கூடிய வகையில் உருவாக்கப்பட்டவைகளே இவை. இன்னும் 10 அல்லது 20 ஆண்டுகள் கழித்து இந்த தேக்கம் காடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டு வெறும் நிலமாக இந்த மண் காணப்படும் போது எமது சந்ததிகளுக்கு வரலாற்றைக் கூறமுடியாது. எமது போராட்ட வரலாற்றுப் பொக்கிசங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன. நாம் ஆண்ட மண் என்று சொல்வதற்கு இங்கு எதுவுமே இல்லை. அடுத்த சந்ததியினரின் காதுகளுக்கு எமது வரலாற்றைக் கொண்டு செல்வதற்காவது இந்தக் காடுகளைப் பாதுகாக்க வேண்டும். இதற்கு எமது மக்கள் பிரதிநிதிகள் முன்வரவேண்டும்.

ஒரு மரத்தை வெட்டி வேறு இடங்களுக்கு கொண்டு சென்றால் அதற்குத் தண்டப் பணம், சிறை என்று ஏகப்பட்ட சட்டங்களை வகுத்திருப்போர் வனவள திணைக்களத்தால் ஒரு காடே அழிக்கப் படுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்க போகின்றார்கள் - என்று கேள்வி எழுப்பினர்.

"தற்போது அந்தப் பகுதியில் உள்ள தேக்க மரங்கள் உரிய வளர்ச்சியை அடைந்துள்ளன. அவற்றை அழித்து அந்த இடத்தில் புதிதாக மரங்கள் நடப்படவுள்ளன. தேக்க மரங்கள் சந்தைப் படுத்தக் கூடிய இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இது வழமையாகச் செய்யும் செயற்பாடே" - என்று முல்லைத்தீவு மாவட்ட வன வளப் பாதுகாப்புத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (5-21-ரி7)

# வைத்தியரின் மாலையை திருடியோருக்கு மறியல்

திருகோணமலை, ஜூலை 5

திருகோணமலைப்பிரதேசத்தில் வைத்தியர்ஒருவரின்மாலையை அபகரித்துச் சென்ற குற்றச்சாட்டுடன் தொடர்புடைய இருவரை இந்த மாதம் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எல்.ஜி.விஸ்வனந்த பெர்ணாண்டோ நேற்று உத்தரவிட்டார்.

கடந்த மாதம் திருகோணமலை பிரதேசத்தில் வைத்தியர் ஒருவரின் மாலையை அபகரித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பித்துச் சென்றமை தொடர்பில், திருகோணமலை குற்றத் தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சந்தேகநபர்கள் ஒரு மாதமாகத் தலைமறைவாக இருந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

திருகோணமலை-விஜித்தபுரப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரும், மற்றவர் சமன்புர-சீனக்குடா பகுதியைச் சேர்ந்த 20 வயதுடையவருமே விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இவர்களிடம் திருமலைப் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (ற)

**விற்பனைக்கு**

8 அடி சோக்கேஸ் - 03 ,
4 அடி மிக்ஸர் சோக்கேஸ் - 03
நெஸ்கொபி மிஷின் - 01, குளிரூட்டி -02

**077 998 1896**

**தவறிவிட்டது**

யாழ்ப்பாணத்தில் இருந்து நெல்லியடிக்கும் நெல்லியடி ஊடாக வல்வெட்டித்துறைக்கும் இடையில் 20.06.2016 அன்று Wpkx 0782 இலக்க வாகன இலக்கத் தகடு தொலைந்து விட்டது. கண்டெடுத்துக் கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (ச/21367)(12)

**077 711 1662, 077 101 2079**

**பதவி வெற்றிடம்**

யாழ். நகரில் இயங்கி வரும் DSI மொத்த விற்பனை நிலையத்திற்கு வாகனத்தில் பொருள்கள் கொண்டு சென்று விநியோகிப்பதற்கு பணியாளர்கள் ஆண்கள் தேவை. (Delivery Boys) விரும்புபவர்கள் எதிர்வரும் 12.07.2016 இற்கு முன்பாக தங்களது சுயவிவரக் கோவையை கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**DSI மொத்த விற்பனை நிலையம்**
**154,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**





# பொங்குதமிழுக்கு ஈடாகத் தமிழ் விழா; யாழ். தமிழர்கள் தனித்துவமானவர்கள்

## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் புகழாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

அன்றைய பொங்குதமிழுக்கு ஈடாக இன்றைய உங்களின் தமிழ்த்தினவிழாவைக் காண்கின்றேன். உலகத் தமிழர்களில் தனித்துவமானவர்கள் யாழ்ப்பாணத் தமிழர்கள். இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தமிழ்த் தின விழா நேற்று கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அன்றைய பொங்கு தமிழுக்கு ஈடாக உங்களின் தமிழ்த் தின விழாவை நான் காண்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். தமிழ்மொழிக்கு எங்கெல்லாம் அழிவு ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் தமிழை வளர்ப்பவர்களாக யாழ்ப்பாணத் தமிழர்களே இருக்கின்றனர். இதை நாம் மறக்க முடியாது. உலகத்தில் பத்துகோடி தமிழன் இருந்தாலும், யாழ்ப்பாணத் தமிழனையே பன்னாடுகளும் விசேடமாகக் கவனிக்கின்றன.

வடக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்காக பெருந்தொகைப்பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள பாடசாலைக்கு சிறந்த பாடசாலைத் திட்டத்தின் கீழ் 4 ஆயிரத்து 300 மில்லியன் ரூபாவும், தேசியப் பாடசாலைகளுக்கு ஆயிரம் மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண சபையின் ஊடாகவும் 2 ஆயிரம் மில்லியன் ரூபா என்று 7 ஆயிரத்து 300 மில்லியன் ரூபா மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் நல்லாட்சி அரசின் 5 ஆண்டு ஆட்சிக் காலத்துக்குள் கல்வியில் ஒரு மறு மலர்ச்சியை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

தமிழ்மொழியையும் தமிழனையும் யாரும் அழித்துவிட முடியாது. போர் இடம்பெற்ற போதும் நீங்கள் சளைக்காமல் அதனைச் செய்து காட்டினீர்கள். தமிழை அடக்கி ஆள்வதற்கு முற்பட்டவர்கள் இன்று மக்களிடம் செல்லாக்காசாக உள்ளதை அவதானிக்கலாம்.

ஜனாதிபதி மைத்திரிபால, எப்போதும் தமிழர்களின் உள்ளத்தை எவ்வாறு கொள்ளை கொள்வது என்பதில் ஆர்வமாக உள்ளார்.

நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே பிரச்சினையாகவுள்ளது. அரசின் வேகம் போதாது எனவும் கூறுகின்றனர். தாமதம் ஏற்பட்டாலும் தமிழர்களுக்கு நல்ல தீர்வு வழங்குவார் என்று நம்புகின்றேன் - என்றார். (ற-5-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியைக் கவிழ்க்க சேவையாற்றிய கலைஞர்களுக்கு இப்போது வெறுப்பு

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 5
என்னுடைய ஆட்சியைக் கவிழ்க்க சேவையாற்றிய கலைஞர்களுக்கும் தற்போதைய நல்லாட்சி மீது வெறுப்பு வந்துவிட்டது.



இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
எம்பிலிப்பிட்டிய நகரில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டார். அதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: கலைஞர்களுக்கு நல்லாட்சியின் நிலை இப்போது புரிகிறது. மக்களுக்குச் செய்த குற்றங்களும், மக்களுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள இடர்கள் தொடர்பிலும் கலைஞர்கள் தெளிவுபெற வேண்டும்.
புதிய அரசமைப்பைக் கொண்டு வரும்போது மக்கள் தெளிவாக இருக்கவேண்டும். நல்லாட்சி அமைக்கத் துணையாக இருந்த கலைஞர்கள் இன்று நல்லாட்சிக்கு எதிராகப் பதாகைகளை ஏந்தும் நிலை உருவாகிவிட்டது- என்றார்.
மேல் மாகாண அரச நாடக விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதற்கு அரசு அனுசரணை வழங்கவில்லை என்று குற்றஞ்சுமத்திய கலைஞர்கள் அன்றைய தினம் கறுப்புப் பட்டி அணிந்திருந்தனர். மேடையில் பரிசுகள் வழங்கப்படும்போது எதிர்ப்பை வெளிப்படுத்தும் பதாகைகளையும் தாங்கிப் பிடித்திருந்தனர். (ற-ஐ-5)

# பிரதிப் பொலிஸ்மா அதிபர் தொடர்பான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

விசேட அதிரடிப் படையின் பொறுப்பதிகாரி, பிரதிப் பொலிஸ்மா அதிபர் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அறிக்கை பொலிஸ்மா அதிபரிடம் இன்று ஒப்படைக்கப்படவுள்ளது.
விசேட அதிரடிப் படையின் பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரஞ்சித் பெரேரா ஊடகவியலாளர்களை அண்மையில் பத்திரிகையாளர் சந்திப்பில் அச்சுறுத்தியிருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் ஆறு ஊடகவியலாளர்களிடமும், விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த பத்து அதிகாரிகளிடமும் வாக்குமூலங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.
பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஊடகவியலாளர்களை எச்சரிக்கும் ஒலிநாடாவையும், பொலிஸ் விசாரணைக் குழுவினர் விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர். முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன. இறுதி அறிக்கை பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிடம் இன்று ஒப்படைக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற-ஐ-5)

# மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 5
ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகளுக்கான மீன் ஏற்றுமதி அதிகரித்துள்ளது என்று மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: மீன்மற்றும் மீன் சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதி தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கை மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதன் பின்னர் ஜூன் மாதம் 22 ஆம் திகதியில் இருந்து 29 ஆம் திகதி வரையிலான ஒரு வாரத்துக்குள் 78 தொன் மீன்கள் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்று ஏற்றுமதியாளர்கள் கூறுகின்றனர்.
12 நிறுவனங்கள் மூலமாக இந்த ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டது. பெருமளவில் “ரூனா” வகை மீன்களும், பாரை, இறால் மற்றும் சிங்க இறால் ஆகியன உள்ளடங்கியிருந்தன. மேலும் பல நிறுவனங்கள் மீன் ஏற்றுமதி தொடர்பான அனுமதிக்குக்கு விண்ணப்பித்துள்ளன.
ஐரோப்பிய ஒன்றியத்தால் 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் மீன் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டதன் பின்னர், இதுவரையிலும் நாட்டுக்கு ஏற்பட்டிருந்த இழப்பு ஆயிரத்து 600 கோடி ரூபா ஆகும். தற்போது மீண்டும் ஐரோப்பிய ஒன்றியத்தின் மீன் வர்த்தகச் சந்தைக்கு மீன்களை ஏற்றுமதி செய்வது நாட்டுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும் – என்றார். (ற-ஐ-ரி2,22)

# ஐ.நா. தீர்மானம் தொடர்பில் உடன்பாடுகள் ஏதும் இல்லை

## தமிழ்க் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 5
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு, அமெரிக்கா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது என்று வெளியாகியுள்ள தகவல்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்தது.
தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ள பொறுப்புக் கூறல் விடயத்தில், உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. அதனை கூட்டமைப்பு தனது அறிக்கையின் மூலம் மறுத்தது.
ஜெனிவாத் தீர்மானம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் இதனையே வலியுறுத்தி வந்துள்ளது. இந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. எதிர்காலத்தில் இந்தத் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்- என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (ற-ஐ-5)


முழங்காவில் அருள்மிகு ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகர் ஆலய
சித்திரத் தேர் வெள்ளோட்ட நிகழ்வு

காலம்: 06.07.2016 (புதன்கிழமை)
நேரம்: மாலை 3.00 மணி
தேர்உற்சவ தினம் 09.07.2016 (சனிக்கிழமை)



ஆசிச்செய்தியும் ஆலய வரலாறும்

இலங்கை திருநாட்டின் வடபால் அமைந்துள்ள கிளிநொச்சி மாநகரின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் முழங்காவில் என்னும் கிராமத்தில் A32 சாலையில் மேற்கு நோக்கியவாறு அமையப் பெற்றிருப்பது அருள்மிகு ஸ்ரீ செல்வயோக சித்திவிநாயகர் தேவஸ்தானம் (முழங்காவில் பிள்ளையார்). இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் ஆகியன ஒருங்கே அமையப் பெற்றதும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் ஆகம முறைப்படி மகோற்சவம் நடைபெறும் திருத்தலமாகவும் விளங்குகின்றது.
இற்றைக்குப் பல நூறு வருடங்களுக்கு முன்பான வரலாற்றைக் கொண்ட மிகப் பழமையான ஆலயமாகவும் திகழ்ந்து வருகின்றது. இவ் ஆலயத்தின் அற்புதம் இங்குள்ள முழங்காவில் ஊற்று என்னும் புனித தீர்த்தமாகும். முழங்காவில் பிரதேசம் மிகவும் ஆழமான நீர் ஊற்றைக் கொண்ட நில அமைப்பைக் கொண்டது. இங்கு நீர் எடுப்பதானால் குழாய்க் கிணறு மூலமே நீர் பெற்றுக் கொள்ள முடியும். 19ஆம் நூற்றாண்டின் முற்பட்ட காலப்பகுதியில் கோயிலுக்குப் பூசை செய்து வந்த பூசாரியார் நீருக்காகப் பெரிய இடர்பாட்டைச் சந்தித்து வந்தார். இத்தருணத்தில் அருகே அரச அதிகாரிகள் பொதுமக்களின் உதவியோடு பாறைகளை வெட்டிக் கிணறு அமைக்கப்பட்டது. அதில் மாரி காலத்தில் மட்டும் சிறிதளவில் நீர் காணப்படும், மிகுதி நாள்கள் நீர் இன்றியே கிணறு காணப்பட்டது. இவ்வாறான காலப்பகுதியில் பூசைக்கு நீர் இன்றி மிகவும் துயரத்தோடு பூசகர் ஆலயத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது எம்பெருமான் கனவில் தோன்றி நீர் தந்தோம் கவலை கொள்ளாதே உன் பணியைச் செய் என அசரீதி அவர் காதில் ஒலித்தது. உடனடியாக விழித்தெழுந்த பூசகர் கோயில் கிணற்றைச் சென்று பார்த்தார். என்ன அதிசயம் அவ் அருங்கோடை காலத்தில் கிணறு முட்டி நீர் நிறைந்திருந்தது. உடனே நீர் எடுத்து எம்பெருமானுக்கு அபிஷேகம் செய்தார். முழங்காது இடி இடித்து அந்த இடத்தில் நீர் ஊற்று எடுத்தமையால் அன்று முதல் இக்கிராமம் முழங்காவில் என்றும் இங்கு உள்ள ஆலயம் முழங்காவில் பிள்ளையார் எனவும் பெயர் பெறலாயிற்று. அதனைத் தொடர்ந்து கோயில் ஆகம முறைப்படி அமைக்கப்பெற்று மூன்று கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. 1987இல் அலங்கார திருவிழாவும் அதைத் தொடர்ந்து 1997 ஆம் ஆண்டு தொடக்கம் கொடியேற்றத் திருவிழாவும் நடைபெற்று வருகின்றது. இதுவரை கட்டுத்தேர் மூலம் தேர் உற்சவம் நடைபெற்று வந்தது. அடியவர்களின் பெரும் முயற்சியால் இவ்வருடம் திராவிட முறையில் அமையப்பெற்றதும் முகப்பத்திர சிந்தாமணித் தேர் புதிதாக அமைக்கப்பட்டு 06.07.2016 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு நடைபெறவுள்ளது. இச் சித்திரத் தேர் அமைப்பதற்கு உதவிக்கரம் கொடுத்த உள்நாட்டு, வெளிநாட்டு அடியவர்களுக்கும் இத்தேரை அமைத்துத் தந்த ஸ்ரீ காளிகா சிற்பக் கலையகத்தினர் அனைவருக்கும் நன்றியைக் கூறுவதுடன் இப்பணியில் எம்மோடு இணைந்து செயலாற்றிய அனைத்து உள்ளங்களுக்கும் எம்பெருமானின் ஆசிகளை வேண்டி நிற்கின்றேன்.

ஆ.பரதன்
(தேர்த்திருப்பணிசபை பொருளாளர்)

அனைத்து அடியார்களையும்
கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிநிற்கின்றோம்

ஆலய பரிபாலன சபை,
தேர்த்திருப்பணி சபை.

கிளிநொச்சி முழங்காவில் ஸ்ரீ செல்வயோக சித்திவிநாயகர் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்.

மகாலக்ஷ்மி புடைவையகம்
வாடியடி, பூநகரி Ph-021 2060 828 / 077 1937 196
www.facebook.com / mahalax my tex

ஐங்கரன் கடைச்சல் தொழிலகம்
பிள்ளையார் கோயிலடி, முழங்காவில்.

செ.மகேந்திரராசா
பாரம்தூக்கி உரிமையாளர்
முழங்காவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் துறைசார் அதிகாரிகள் புதிய நுட்பத்துக்கு மாறவேண்டும்

கொழும்பு, ஜூலை 5
தொழில்துறைசார் அதிகாரிகள் மாட்டு வண்டி யுகத்திலிருந்து விடுபட்டு, தொழில்நுட்ப யுகத்துக்கு மாறவேண்டும். இல்லாவிட்டால் நாட்டுக்கும், பொருளாதாரத்துக்கும் முதுகெலும்பாகத் திகழும் தனியார் துறை வீழ்ச்சியடையும்.

இவ்வாறு தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்தார்.

நாரகேன்பிட்டி சாலிகா மண்டபத்தில் அரச சேவை ஊழியர் உத்தியோகத்தர் சங்கத்தின் 65 ஆவது வருடாந்த மாநாடு நடந்தது. அதில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த 7 வருடங்களாக எந்தவொரு தொழில்துறைசார் அதிகாரிகளும், தொழில் அமைச்சுக்குள் இணைத்துக் கொள்ளப்படவில்லை. 202 வெற்றிடங்கள் தொழில் திணைக்களத்தில் நிலவுகின்றன. வெகு விரைவில் தமிழ் மொழி மூலம் தொழில் துறைசார் அதிகாரிகள் 26 பேர் இணைத்துக் கொள்ளப்படுவர். அத்துடன் 202 வெற்றிடங்களும் நிரப்பப்படும்.

தொழில்துறைசார் அதிகாரிகள் நாட்டின் பொருளாதாரத்துக்கு பரந்தளவில் தமது பங்களிப்பை வழங்குகின்றனர். இவர்கள் தனியார் துறையின் உயர்வுக்கும், வழி நடத்தலுக்கும் பங்களிப்பை வழங்கி, நாட்டின் பொருளாதார உயர்வுக்கு வழி வகுக்கின்றனர். இவ்வாறானவர்கள் தமது தொழில்சார் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக வீதியில் இறங்குவது கேலிக் கூத்தாக அமைந்து விடும்.

நாட்டின் உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளுக்காக சேவை புரிவோர், தமது உரிமைகளுக்காக வீதியில் இறங்கக் கூடாது. உங்களுக்கு எதுவும் பிரச்சினைகள் இருப்பின் என்னிடம் முறையிடுங்கள். அதற்கு நிச்சயம் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பேன்.

உலகம் இன்று நவீன தொழில்நுட்ப யுகத்துக்குள் பிரவேசித்துள்ள நிலையில் நாம் மாட்டு வண்டி யுகத்திலிருந்து விடுபட்டு நவீன யுகத்துக்குச் செல்ல வேண்டும் - என்றார். (ஐ-ஜ-5)

## இலங்கை மத்திய வங்கியின் கௌரவத்தை பாதுகாப்பேன்

### புதிய ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 5
இலங்கை மத்திய வங்கியின் கௌரவம் மற்றும் நம்பகத் தன்மையைப் பாதுகாப்பதே எனது முதன்மையான பொறுப்பு.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியிடம் இருந்து நேற்றுக் காலை பெற்றுக் கொண்டார். அதன் பின்னர் மத்திய வங்கி உத்தியோகத்தர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்ள சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக மத்திய வங்கி காணப்படுகின்றது. அனைத்து சந்தர்ப்பங்களிலும், மத்திய வங்கியின் கௌரவம் மற்றும் நம்பகத் தன்மையைப் பாதுகாப்பதற்கு பாடுபடுவேன். இதனைச் செய்வதற்கு வங்கி ஊழியர்களின் ஒத்துழைப்பு அவசியம்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நாடு திரும்பக் கிடைத்தமை குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். எனது கொள்கைகள் நேரானவை. கடமைகளை மேற்கொள்ளும்போது யாருக்கும் அச்சமடையப்போவதில்லை. பிரதமரின் பொருளாதாரத் தூரநோக்குக்கு ஆதரவு வழங்குவேன். இந்த விடயத்தில் மத்திய வங்கிக்கு முக்கிய பங்கு உள்ளது - என்றார். (ஐ-ஜ-5)


முடிவில்லாத் துயரலையின்
16 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
கந்தையா
மயில்வாகனம்
(பொலிஸ் பப்பா)
(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)
திதி: பிரதமை - 05.07.2016
மலர்வு 01.06.1933
உதிர்வு 03.07.2000

நிலையில்லாப் பூவுலக வாழ்க்கையில்
நிலையான உங்கள் நினைவுகளுடன் வாழும்
பாவியான நான்
ஈர் எட்டு ஆண்டுகள் ஆச்சு உங்கள் பிரிவு
ஆறுமோ என் துயரம் என் தெய்வமே
என் தனிமைக்கு உங்கள் ஆத்மாவின் துணையில்
நான் வாழ்கின்றேன்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனை
வேண்டுகின்றேன்

பழைய பாலத்தடி,
தொண்டைமானாறு.
திருமதி ம.பரமேஸ்வரி
(மனைவி)
(Gm/2635) (11.17)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



கந்தசாமி நாகேந்திரன் (கண்ணன்)
திதி: பிரதமை (05.07.2016)
நினைவுகளுடன் நீள்கின்ற நாள்களுக்குள்
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து
இரண்டாண்டுகள் சென்றிடினும்
ஆறவில்லை எம் துயர் என்றும்
உங்கள் நினைவுகளுடன்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

இல.02, புகையிரத வீதி,
வைரவபுளியங்குளம், வவுனியா.
(ச/21367)(12)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03 . 03 . 1936
உதிர்வு 17 . 06 . 2016

அமரர் தங்கச்சியம்மா தில்லைநடராசா
அம்மா எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
அன்பின் திருவுருவமாய் வாழ்ந்து நீங்கள் எம்மை
விட்டுப் பிரிந்து ஆண்டொன்றானாலும்
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இலகடி, வதிரி,
கரவெட்டி.
(ச/21367)(12)
குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலை ஆசிரியை திருமதி யோகேஸ்வரி
பாலச்சந்திரன் அவர்களின் அன்புத் தாயார்
அன்னப்பிள்ளை வேலுப்பிள்ளை
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஆசிரியர் நல்லுறவுக் கழகம்
யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் - யாழ்ப்பாணம்.
(Gm/2646) (11.17)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
அந்தோனிப்பிள்ளை
திரேசம்மா
"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்"
மலர்வு 19.04.1928
உதிர்வு 06.06.2016

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி நாளை (06.07.2016) புதன்கிழமை காலை 6 மணிக்குப் புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

143/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8363
இவரின் பிரிவால் துயருறும்....
குடும்பத்தினர்.

5 ஆண்டுகள் கடந்த நினைவலைகளும்
27 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்
மகேந்திரசெல்வம் சுரேன்



மண்ணில் 1989.07.05
விண்ணில் 2011.05.14

எங்களது வாழ்வின் முதல் இழப்பு
உன் பிறந்த நாளுக்காக வாங்கியவை
– எல்லாம்
ஓய்வெடுக்கின்றன ஆனால் கண்ணீர் துளிகள்
மட்டும் உன்னருகில்
வழிமாறி சென்றிருந்தால் காத்திருப்போம்
திரும்பி வருவாய் என்று
ஐந்து வருடங்களாகியும் தெரியவில்லை
நீ சென்ற ஒரு வழி பாதை என்று......

குடும்பத்தினர்.
38/4, மணல்தறை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

அந்தியேட்டி சபிண்டீகரணஅழைப்பு



மண்ணில் 05 . 03 . 1955
விண்ணில் 07 . 06 . 2016

அமரர் மாணிக்கம் மாசிலாமணி
கடந்த 07.06.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (06.07.2016) புதன்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் தயவு செய்து இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

அண்ணா சிலையடி,
கரணவாய், கரவெட்டி.
குடும்பத்தினர்.
077 927 6160
077 398 7402


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் திருவிழா ஏற்பாடுகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

"யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் யாவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன'' என்று யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி நல்லூர் கந்தன் ஆலயம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 நாள்கள் திருவிழா நடைபெறும்.

இது தொடர்பான கூட்டம் ஆணையாளர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை மாநகர மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஆலயச் சுற்றாடலில் மேற்கொள்ளப்படும் குடிதண்ணீர், சுகாதாரம், வீதித் தடைகள், பாஸ் நடைமுறைகள், கடைகளை அமைப்பது, பக்தர்களுக்கான பாதுகாப்பு, ஆலயச்சூழலுக்குமண் பரவுதல், மாநகராட்சி மன்றத்தால் ஆலயச் சுற்றாடலுக்கு தினமும் தண்ணீர் அடிப்பது போன்ற முக்கிய விடயங்கள் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட்டன.

ஆலயத்தின் சூழலில் போக்குவரத்துக்கு இடையூறாக எந்தக் காரணம் கொண்டும் கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. இந்த முறை நடைபாதைக் கடைகள் வாடகைக்குக் கையளிக்கப்படும் போது பக்தர்களின் நலன் கருதி மீள் பரிசீலனை செய்தே கொடுக்கப்படும் - என்று ஆணையாளர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பொலிஸார், இந்துமதத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், மாநகர அதிகாரிகள், வர்த்தகர்கள், ஆலய நிர்வாக சபையினர் போன்றோர் கலந்து கொண்டனர்.

(ஐ-ரி,17)



குளக்கட்டை ஆக்கிரமித்திருக்கும் பற்றைகள்

# முறிகண்டிக் குளத்தை உடன் விடுவியுங்கள்

## பிரதேச விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 5

"முறிகண்டிக் குளத்தைச் சீருடையினர் ஆக்கிரமித்துள்ளனர். குளத்தின் ஊடாக முகாமுக்கான பாதையையும் அமைத்துள்ளனர். கடந்த 6 ஆண்டுகளாக சிறுபோகம் கைவிடப்பட்டுள்ளது."

இவ்வாறு முறிகண்டிக் குளத்தை நம்பிக் கடந்த காலங்களில் விவசாயத்தை மேற்கொண்ட விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

"எனக்கும் முறைப்பாடு கிடைத்தது. அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் கையாளப்பட உள்ளது"- என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தெரிவித்தார்.

> முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முறிகண்டிக் குளம், போரின் பின்னர் சீருடையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்தக் குளத்தை நம்பி கடந்த காலங்களில் விவசாயத்தை மேற்கொண்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முறிகண்டிக் குளம், போரின் பின்னர் சீருடையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்தக் குளத்தை நம்பி கடந்த காலங்களில் விவசாயத்தை மேற்கொண்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

"இடப்பெயர்வுக்கு முன்னர் 35 ஆண்டுகள் முறிகண்டிக் குளத்தை நம்பி வேளாண்மையில் ஈடுபட்டேன். இந்தக் குளத்தின் கீழ் காலபோகம், சிறுபோகம் என்று இரண்டையும் நான் செய்தேன். போரால் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னர் 2010 ஆம் ஆண்டு சொந்த மண்ணில் குடியமர்ந்தேன். எம்மை இங்கு குடியமர்த்தினாலும் வாழ்வாதாரத்தை ஆறு ஆண்டுகளாக முன்னெடுக்க முடியவில்லை. வாழ்வாதாரத்துக்கான குளம் சீருடையினரின் ஆக்கிரமிப்பில் உள்ளது. அவர்கள் கொக்காவில் முகாமுக்குச் செல்வதற்கு இலகுவாக, குளத்தின் நடுவே பாதையும் அமைத்துள்ளனர். குளம் பராமரிப்பில்லாமல் காணப்படுகின்றது. குளக்கட்டு முழுவதும் பற்றைகள் சூழ்ந்துள்ளன. ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்னரும் எங்களது குளம் விடுவிக்கப்படவில்லை.

இடப்பெயர்வுக்கு முன்னர் 60 ஏக்கர் நிலப் பரப்பில் வேளாண்மை மேற்கொள்ளப்பட்டது. 6 ஆண்டுகளாக மழையை நம்பியே வேளாண்மையில் ஈடுபடுகின்றோம். அதனால் சீரான இலாபத்தைப் பெறமுடியவில்லை. எங்களை மீளக்குடியமர்த்தியவர்கள் எங்களின் வாழ்வாதாரத்துக்கு வழி செய்து தரவில்லை" -என்று 67 வயதான விவசாயி ஒருவர் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

இதே குற்றச்சாட்டை அந்தப் பகுதியில் வேளாண்மையை முன்னர் மேற்கொண்ட சிலரும் முன்வைத்தனர்.

"இந்தக் குளம் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது தொடர்பில் எனக்கு முறையிடப்பட்டுள்ளது. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக முடிவெடுக்கப்பட இருந்தது. கூட்டம் தற்போது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதற்குரிய சரியான முடிவு எடுக்கப்படும் என்று நம்புகின்றேன்"- என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தெரிவித்தார். (ற-5-101-ரி7)

## விலங்குகளால் கடியுண்டு 131 பேர் சிகிச்சை

அளவெட்டி, ஜூலை 5

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த மாதம் விலங்குகளால் கடியுண்ட 131 பேர் சிகிச்சை பெற்றனர்.

நாய்க் கடிக்கு இலக்காகி 93 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். வளர்ப்பு நாய்களால் கடியுண்ட 60 பேரும், தெரு நாய்களால் கடியுண்டு 33 பேரும் சிகிச்சை பெற்றனர்.

பூனைகளால் கடியுண்ட 30 பேரும், குரங்குகளால் கடியுண்ட 8 பேரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த மாதம் சிகிச்சை பெற்றனர். (ற-ஐ-5-36)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 5

நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் சி.தர்மரத்தினத்தின் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், தலைமை விருந்தினராக யாழ். கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் கலந்து கொள்வார். (ற-ஐ-ரி)

## நிதி அமைச்சுடன் பேச்சுகள் தோல்வி

கொழும்பு, ஜூன் 5

நிதி அமைச்சின் செயலாளருடனான கலந்துரையாடல் தோல்வியடைந்துள்ளது என்று சுங்க ஒன்றியத் தொழிற்சங்கம் தெரிவித்தது.

எந்தவித தீர்மானங்களும் இன்றி இந்தக் கலந்துரையாடல் நிறைவடைந்தது என்று குறித்த சங்கம் குறிப்பிட்டது.

முன்வைக்கபட்டுள்ள சுங்கப் பாதுகாப்புச் சட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலானது வெற்றியளிக்காமையைத் தொடர்ந்து, எதிர்வரும் நாள்களில் தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கபடவுள்ளன என்று சுங்க ஒன்றியத் தொழிற்சங்கம் தெரிவித்தது. (ற)

# ஹுசைனின் அறிக்கைக்கு வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

"இலங்கையின் பொறுப்புக் கூறலையும், நல்லிணக்கத்தையும் வலியுறுத்தும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கையை வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம் வரவேற்கின்றது."

இவ்வாறு வடக்கு முஸ்லிம் சிவில் சமூகத்தின் பிரதம ஒருங்கிணைப்பாளர் ஏ.ஆர்.அப்துல் றமீஸ் தெரிவித்தார். அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரது இலங்கை தொடர்பான அவதானங்கள் எமக்கு நம்பிக்கையூட்டுவதாக உள்ளன. மனித உரிமைகள் சார்ந்த பொறுப்புக் கூறலை வேறு சக்திகளின் நன்மைக்காக அன்றி எமது மக்களின் நன்மைக்காகவே நாம் முன்னெடுக்க வேண்டும். இந்த நிலைப்பாட்டை, அறிக்கை வரவேற்றிருப்பது எமக்கு மன மகிழ்வை ஏற்படுத்துகின்றது.

முழுமையாகத் தீர்க்கப்படாமல் உள்ள அரசியல் கைதிகளின் விவகாரம், காணமற் போனோர் விவகாரம், காணி விடுவிப்புகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் நடைமுறைப்படுத்தல் போன்ற விடயங்களும், அதற்காக அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பிலான மனித உரிமை ஆணைக் குழுவின் அவதானங்களும் வரவேற்கத்தக்கன.

தென்னிலங்கைப் பிரதேசங்களில் பௌத்த தீவிரச் செயற்பாட்டாளர்களால் முஸ்லிம் மக்களும், சிறுபான்மைக் கிறிஸ்தவ மக்களுக்கும் ஏற்படுகின்ற அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

ஐ.நா. மன்றத்தின் மனித உரிமை ஆணைக்குழுவினர் வெறுமனே வடக்கு, கிழக்கு என்ற நிலையில் இல்லாது இலங்கை என்கின்ற நாடு தழுவிய அவதானத்தை வழங்கியிருக்கின்றமையை இது உறுதி செய்கின்றது.

நல்லிணக்கம் சார் செயற்பாடுகளில் நிலைமாறுகால நீதி என்னும் பொறிமுறையினூடாக அடைய முடியுமான பல்வேறு விடயங்கள் உள்ளன என்பதை அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்கு முஸ்லிம்கள் சார்பாக நாம் வெகுவாக இதனை வரவேற்கின்றோம்.

1990 ஆம் ஆண்டுகளிலே வடக்கிலிருந்து இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்ட முஸ்லிம்கள் விடயத்தில், நீதியை நிலை நாட்டுவதற்குரிய பொறிமுறையாக நிலைமாறுகால நீதிப்பொறிமுறையை நாம் வெகுவாக நம்பியிருக்கின்றோம்.

கடந்த கால கசப்பான நிகழ்வுகளை மீண்டும் பேசிக் கொண்டிருப்பதை விடவும், ஆக்கபூர்வமான செயற்பாடுகளினூடாக இழப்புகளை ஈடுசெய்யப்படுவதை நாம் எதிர்பார்க்கின்றோம்.

வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் விடயத்தில் இலங்கை அரசும், வடக்கு மாகாண சபையும் திருப்திகரமான முன்னெடுப்புகள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றம் மற்றும் மீள்குடியமர்வு தொடர்பில் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை நிறுவி அதன் மூலம் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவர்களுக்குரித்தான தீர்வு முன்மொழிவுகளை முன்வைக்க முடியும். அத்தகைய தீர்வு முன்மொழிவுகள் கொள்கை ரீதியானதும், நடைமுறைசார்ந்த திட்டமிடல் ரீதியானதுமாக இருத்தல் அவசியம்.

ஐ.நா. ஆணையாளரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போன்று, இலங்கையின் பொறுப்புக் கூறலையும், நல்லிணக்கத்தையும் மேம்படுத்தும் செயற்பாடுகளில் நம்பிக்கை தரும் விதத்தில், அனைத்துத் தரப்பினரும் தமது பற்றுறுதியோடு செயற்பட வேண்டும். அதனூடாக எமது நாட்டுக்கும், எமது மக்களுக்கும் நன்மை தருகின்ற சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்- என்றுள்ளது. (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன்பிடி விவகாரத்தில்
# இந்தியாவின் திட்டத்துக்கு இடம் கொடுக்க முடியாது
## கடற்றொழில் இணையச் செயலாளர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்க முடியாது. அனுமதியை வழங்குவது தொடர்பில் ஆராயப்படுகின்றது என்று மீன்பிடி அமைச்சர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் தெரிவித்த கருத்துக்களுக்கு எமது கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.வி.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கவேண்டும் என்ற யோசனை இந்தியத் தரப்பால் முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த யோசனையை நிராகரிக்கவில்லை என்றும் இது தொடர்பில் ஆராயப்படுகின்றது என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர ஆகியோர் தெரிவித்திருந்தனர் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.

இது குறித்து கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் கடும் கண்டனம் வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கைக் கடற்பரப்புக்குள் நீண்ட காலமாக, இந்திய மீனவர்கள் அத்துமீறி இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடித்து வருகிறார்கள். எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. எதிர்காலச் சந்ததிக்கு இல்லாமல் போகுமளவுக்குக் கடல்வளமும் அழிக்கப்படுகின்றது. ஆரம்பத்திலிருந்தே இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பில் மீன்பிடிப்பதை நாம் எதிர்த்து வருகின்றோம்.

இலங்கைக் கடலில் மீன்பிடிக்க அனுமதி வழங்குமாறு இந்தியப் பிரதமர் கேட்டார். அவர்கள் இழுவைப் படகைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழில் செய்வதால் இதனைப் பரிசீலனைக்கு உட்படுத்த முடியாது என்று தெரிவித்தேன் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் குறிப்பிட்டிருந்தார். இப்போது இதே விடயத்தை நாங்கள் நிராகரிக்கவில்லை பரிசீலிக்கின்றோம் என்று சொல்கின்றார்கள். ஒருபோதும் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

எங்களுடைய கடல்வளம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காகத்தான் நாம் தினமும் போராடுகின்றோம். எங்களின் எதிர்காலச் சந்ததிக்கும் கடல் வளத்தைக் கொடுக்க வேண்டும். எங்கள் கடலுக்குள் வந்து மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களைக் கைது செய்ய வேண்டும். இப்போது வழங்கும் தண்டனைக்கு மேலதிகமாகத் தண்டனை வழங்க வேண்டும். இலங்கை அரசு ஒரு போதும் இந்தியாவின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது. எங்களது வயிற்றில் அடிக்கும் செயற்பாட்டில் ஈடுபடக் கூடாது.

குருநகர், வல்வெட்டித்துறை போன்ற சில இடங்களில் எங்களது மீனவர்களும் இழுவைப் படகுத் தொழில் செய்கின்றனர். அதனையும் தடுக்க வேண்டும் - என்றார். (ற-ஜ-5-ரி)

# வீடமைப்புக் கடன் திட்டங்கள் இரு மாவட்டங்களில் ஆரம்பம்



மன்னார், ஜூலை 5

வடக்கில் இரு மாவட்டங்களில் நேற்று வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவால் வீடமைப்பு கடன் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் வீட்டுக் கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. நேற்று மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் குறித்த திட்டம் அமைச்சரால் ஆரம்பிக்கப்பட்டது.

மன்னாரில் நேற்றுக் காலை மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமையாளர் தலைமையில் நகரசபை மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. 'செமட்ட செவன' எனும் தொனிப்பொருளிலான இந்தத் திட்டத்தின் மூலம்தேசியவீடமைப்புவேலைத் திட்டத்தின் கீழ், மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 300 பயனாளிகளுக்கு வீட்டுக் கடனுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு சிமெந்துப் பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், ஐக்கிய தேசியக்கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஏ.சமியூ முஹமது பஸ்மி, ஐக்கிய தேசியக்கட்சியின் மன்னார் இளைஞர் அணி செயலாளர் டி.பெர்னாண்டஸ் கூஞ்ஞ, மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள், சர்வமதத் தலைவர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 244 பயனாளிகளுக்கு வீடமைப்புக் கடனுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு முற்பகல் 11 மணியளவில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

தெரிவு செய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கு வீட்டு உறுதிப்பத்திரங்களும், 400 பயனாளிகளுக்குச் சிமெந்துப் பைக்கற்றுக்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலாளர் றோகண புஸ்பகுமார, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள், சர்வமதத் தலைவர்கள், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ஜ-21,56)

# தேங்காய் எண்ணெய் ஆலை நிர்மாணப் பணியில் இழுபறி

யாழ்ப்பாணம், ஜூலை 5

கிளிநொச்சியில் தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை அமைப்பதற்காக முன்னைய அரசால் 2010ஆம் ஆண்டு அடிக்கல் நடப்பட்டது. தற்போது அதன் நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

இதற்குரிய காணியை விடுவிப்பதற்கு கூட்டுறவுத் திணைக்களம் மறுத்துவிட்டது. இந்த விடயம் தொடர்பில் தற்போது ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம்- என்று தெங்கு உற்பத்தி அபிவிருத்திச் சபையின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில், ஏ-9 தேசிய நெடுஞ்சாலையில் 55 ஆம் கட்டைப் பகுதியில், தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை அமைப்பதற்கு 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி அடிக்கல் நடப்பட்டது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அப்போதைய ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, தெங்கு அபிவிருத்தி முன்னாள் அமைச்சர் ஜகத் புஸ்பகுமார ஆகியோர் இணைந்து அடிக்கல்லை நட்டனர்.

தற்போது ஒரு சிறிய கட்டடம் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடமும் முழுமைப்படுத்தப்படவில்லை. கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. ஆறு வருடங்கள் கடந்தும், தேங்காய் எண்ணெய்த் தொழிற்சாலையை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

அந்தக் காணிகூட்டுறவுத்திணைக்களத்துக்குச் சொந்தமானது. கிளிநொச்சி - முல்லைத்தீவு பிராந்திய அலுவலகம் அமைப்பதற்கும், தேங்காய் எண்ணெய்



தொழிற்சாலை அமைப்பதற்கும் காணியை விடுவிக்கக் கூட்டுறவுத் திணைக்களத்திடம் கோரினோம். அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. இந்தக் கட்டடம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தி எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும்- என்று தெங்கு உற்பத்தி அபிவிருத்திச் சபையின் பிராந்திய முகாமையாளர் குறிப்பிட்டார்.

(ற-ஜ-5-101-ரி3)

# வகுப்பு வாதங்களுக்குள் சிக்காது சிந்தித்துச் செயற்படவேண்டும்
## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

தேசிய விடுதலையை அடைய போராடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் வகுப்பு வாதங்களுக்குள் சிக்கிக்கொள்ளக் கூடாது. அது தமிழின விடுதலை உணர்வு கொண்டு போராடி உயிர்நீத்த ஒவ்வொருவரையும் கொச்சைப்படுத்துவதாக அமைந்துவிடும்.

இவ்வாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதில் எழுந்துள்ள பிரச்சினை தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியா மாவட்டத்துக்குரிய பொருளாதார மத்திய நிலையம் 2 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீட்டுக்குரியது. அதை எப்படி பயன்படுத்துவது என்பதை ஆராய வேண்டும். நாம் வகுப்புவாதங்களுக்குள் சிக்கிவிடுவோம் எனின் அபிவிருத்தியையும் இழந்து, எமது விடுதலை உணர்வையும் எம்மை அறியாமலேயே சிதைத்துவிடுவோம்.

பொருளாதார மத்திய நிலையம் அமையுமெனின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய அனைத்து மாவட்ட விவசாயிகளும் பயன் அடைவர். நாம் வடமாகாணத்துக்குரிய ஓர் அபிவிருத்தியைச் சிறுமைப்படுத்தி வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குள் மட்டும் என்ற வகுப்பு வாதத்திற்குள் சிக்கிவிடுவதால் எதனையும் சாதித்துவிடப் போவதில்லை. உலகமயமாக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தியை உலகம் எதிர்கொள்ளும்போது நாம் அறிவியல் ரீதியாகச் சிந்தித்துச் செயற்படுவதே பொருத்தமானதாக அமையும் - என்றுள்ளது. (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் பஸ் மீது தாக்குதல்; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜூலை 5
தனியார் பஸ் மீது கொட்டனால் தாக்கி அதன் கண்ணாடிக்கு சேதம் விளைவித்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டவரணிவாசியொருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.
ஏ - 9 வீதியில் சேவையில் ஈடு பட்டுக் கொண்டிருந்த தனியார் பஸ் மீது தாக்குதல் நடத்தினார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுக் கொடிகாமம் பொலிஸாரால் குறித்த நபர் நீதிமன்றில் முற்படுத்தப் பட்டார்.
வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை எதிர் வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.
(ற-ஐ-9)

## பண மோசடி சந்தேகநபருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜூலை 5
12 லட்சம் ரூபா பணத்தைப் பெற்று, நம்பிக்கை மோசடி செய்த குற்றச்சாட்டில் மீசாலை வாசியொருவரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.
சந்தேகநபர் பணத்தைப் பெற்று மீள வழங்காமல் நம்பிக்கை மோசடி செய்தார் என பணம் கொடுத்தவரால் முறைப்பாடு செய்யப்பட்டது.
பொலிஸார் குறித்த நபரைக் கைது செய் தனர்.
நேற்று முன்தினம் குறித்த நபர் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-ஐ-9)



முல்லைத்தீவு மாவட்டத்தில் முறிகண்டிப்பகுதியில், ஏ - 9 தேசிய நெடுஞ்சாலையிலிருந்து மக்கள் குடியிருப்புக்குச் செல்லும் பாதையே இது. கடந்த மே மாதம் பெய்த மழையின் வெள்ளம் இன்னமும் வற்றவில்லை. இதனூடாகவே மக்கள் தங்கள் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ-5-101)

# காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் உள்ள 59 ஏக்கரையும் விடுவிக்குக

## மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளருக்கு யாழ்.மாவட்டச் செயலர் கடிதம்

> மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு நுழைவாயிலுக்கு அண்மையாக வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகம் அமைந்துள்ளது. அது 59 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது.

யாழ்ப்பாணம், ஜூலை 5
காங்கேசன்துறையில் பொலிஸாரிடம் உள்ள 59 ஏக்கர் காணியை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு நுழைவாயிலுக்கு அண்மையாக வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகம் அமைந்துள்ளது. அது 59 ஏக்கர் நிலப் பரப்பில் உள்ளது. இதனைச் சுற்றி இராணுவத்தினர் வசம் இருந்த காணிகள் கடந்த 25 ஆம் திகதி விடுவிக்கப்பட்டன. பொலிஸ் நிலையம் இன்னமும் அகற்றப் படவில்லை.
பொலிஸ் நிலையம் அகற்றப் படாததால் 59 ஏக்கரில் பொதுமக்கள் மீளக்குடியமர முடியாதுள்ளது.
பொலிஸ் நிலையக் காணியையும் விடுவிக்க வேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுங்கள் எனக் கோரி மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளேன். பொலிஸாருக்கு மாற்றுக் காணி வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை காணியில் 2 ஏக்கரை வழங்க முடியும் என்று அவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.- என்று யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
பொலிஸ் நிலையத்தைச் சுற்றியுள்ள காணிகள் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டிருந்தது. அவற்றைத் துப்புரவு செய்வதற்கு காணி உரிமையாளர்கள் முயன்ற போது பொலிஸார் தடை விதித்தனர். அந்தப் பகுதி கிராம சேவையாளர்கள், காணிகளின் உரிமையாளர்கள் தான் அவர்களுடைய காணிகளைத் துப்புரவு செய்ய முற்படுகின்றார்கள் என்பதை பொலிஸாருக்குத் தெரியப்படுத்திய பின்னரும் பொலிஸார் அந்த மக்களின் காணிகளைத் துப்புரவு செய்வதற்கு இடையூறு விளைவிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-5)

## விஞ்ஞான தினமும் சஞ்சிகை வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூலை 5
புனித பத்திரிசியார் கல்லூரியின் விஞ்ஞான தின விழாவும், 'பரிணாமம்' சஞ்சிகை வெளியீடும் இன்று செவ்வாய்க்கிழமை காலை9.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.
கல்லூரி அதிபர் அருட்பணி எம். ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜாவும், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ரி.ஜெயசீலனும் கலந்து கொள்வர்.
(ற-ஐ-ரி)

## முத்தமிழ் விழா

அச்சுவேலி, ஜூலை 5
இடைக்காடு மகாவித்தியாலய முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடை பெறும்.
மன்றத்தின் தலைவர் கு.வஜிதரன் தலைமையில் நடைபெறும் விழாவில் விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன், கோப்பாய்க் கோட்டக்கல்வி அதிகாரி நா.சிவநேசன், ஓய்வு நிலை அதிபர் அ.அருந்தவநேசன், அதிபர் கு.வாகீசன் ஆகியோர் கலந்து கொள்வர்.
(ற-ஐ-11)

## பொங்கல்விழா

யாழ்ப்பாணம், ஜூலை 5
புங்குடுதீவு 10, கண்ணகைபுரம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பொங்கல்விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (ற-ரி)

## மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 5
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கீழ் குறிப்பிட்ட இடங்களில் மின்சாரம் தடைப்படும்.
யாழ்ப்பாணத்தில் சங்கத்தானை, டச்சு றோட், வல்லிபுரக்கோயிலடி, உபய கதிர்காமம், வல்லிபுரம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகிய இடங்களிலும், வவுனியாவில் ஆதிவிநாயகர் கோவில் பிரதேசத்திலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சாரசபை மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியலாளர் அறிவித்துள்ளார்.
(ற-ஐ-ரி)

# வடக்கு மாணவிகள் சாரணியத்தில் இணைந்து செயலாற்ற வேண்டும்

## வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 5
வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைக்ளில் பெண் சாரணியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அதற்கான செயற்றிட்டங்களை பாடசாலை அதிபர்கள் முன்னெடுக்க வேண்டும். உதவிகளை வழங்க மாகாணக் கல்வி அமைச்சு தயாராகவுள்ளது.
இவ்வவாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண பெண் சாரணிய மாநாடு கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பொன் சுபாபதி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவா இவ்வாறு தெரிவித்தார்.
அவர் இது குறித்துத் தெரிவித்ததாவது-
வடக்கு மாகாணத்தில் 750 பெண் சாரணியர்கள் இருக்கின்றனர். நாட்டில் 52 ஆயிரம் பெண் சாரணியர்கள் இருக்கின்றனர். ஒப்பிடும் போது 750 என்பது மிக குறைவானது. இதற்குக் காரணம் மாணவிகள் சாரணியம் தொடர்பாக புரிந்து கொள்ளவில்லை என்பதே.
இந்தத் துறையில் இருந்தவர்கள் பெரிய பதவிகளில் எல்லாம் இருந்துள்ளனர். பிரதமராகக் கூட பதவி வகித்துள்ளனர்.
வடக்கு மாகாணத்தில் பெண் சாரணியர்களின் தொகையை அதிகரிக்க வேண்டும். அதற்கான செயற்றிட்டங்களை பாடசாலைகளில் உள்ள சாரணிய ஆசிரியர்கள் முன்னெடுக்க வேண்டும். வடமாகாணக் கல்வி அமைச்சின் மூலமாக வழங்கக்கூடிய உதவிகளை வழங்க நாம் தயாராக உள்ளோம்.
வடக்கு மாகாணத்தில் 988 மாகாணப் பாடசாலைகளும் 22 தேசியப் பாடசாலைகளும் என 1010 பாடசாலைகள் காணப் படுகின்றன. அவற்றில் 3 ஆயிரத்து500 ஆண் ஆசிரியர்களும் 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண் ஆசிரியர்களும் இருக்கின்றனர். ஆண் ஆசிரியர்களுடன் ஒப்பிடும்போது வடக்கில் பெண் ஆசிரியர்களின் வீதம் அதிகமாக காணப்படுகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனத்திலும் பெண்களின் வீதமே அதிகளவில் காணப் படுகின்றது.
பெண் சாரணியம் ஊடாக போதைப்பொருள் ஒழிப்பு, எயிட்ஸ் தொற்று, விசேட செயற்பாடுகள் போன்ற விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன- என்றார்.
நிகழ்வில் பெண் சாரணிய சங்கத்தின் தேசிய செயலாளர் டிமந்தி குணவர்த்தன, பெண் சாரணிய சங்கத்தின் உதவி பிரதம ஆணையாளர் விசாக்கா திலகரட்ண, வடக்குமாகாண பெண் சாரணிய சங்கத்தின் ஆணையாளர் றொவீனா பொன்ரா, மாவட்ட ஆணையாளர்கள், மற்றும் சாரணியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.
(ற-21,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பொக்கற்றுகளை நிரப்பவே நல்லாட்சி அரசு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 5

தேசிய அரசை உருவாக்கியது எங்களுடைய பொக்கற்றுகளை நிரப்புவதற்கு அல்ல. மக்களின் பொக்கற்றுக்களை நிரப்புவதற்கே.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை முன்னேற்றப் பாதையை நோக்கி நகர்த்தும் நிகழ்வு பதுளையில் நேற்று முன்தினம் மாலை நடத்தப்பட்டது. அதில் உரையாற்றியபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது–

நல்லாட்சி அரசின் புரட்சி பதுளை மாவட்டத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. அதற்காக அமைச்சர் ஹரின் பெர்ணான்டோவுக்கு நன்றி கூற வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிர்காலம் இல்லை என்று கூறப்பட்ட காலத்தில் தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து மாகாண சபைத் தேர்தலில் இங்கு போட்டியிட்டார். அதில் பெரிய வெற்றியைப் பெற்றார். இதுவே ராஜபக்ச ஆட்சிக் கவிழ்ப்புக்குக் காரணமாக அமைந்தது. இங்கே நாங்கள் வெற்றி பெற்றோம். ஜனாதிபதித் தேர்தல் விரைந்து நடத்தப்பட இது காரணமாகியது. பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவைக் களமிறக்கி வெற்றி பெற்றோம்.

நாடாளுமன்றத் தேர்தல் பின்னர் நடந்தது. தேசிய அரசு அமைக்கப்பட்டது. நாம் எமது பொக்கற்றுக்களை நிறைத்துக் கொள்வதற்கு ஆட்சிக்கு வரவில்லை. மக்களின் பொக்கற்றுக்களை நிறைக்கவே ஆட்சிக்கு வந்தோம். எமக்கு மாளிகை அமைக்காமல் மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுத்தோம். எமக்கு காணிகளை பெற்றுக் கொள்ளாமல் மக்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுத்தோம்.

இளைஞர் – யுவதிகள் முன்னேறிச் செல்வதற்கு புதிய உலகை அமைக்க வேண்டியுள்ளது. பெரிய அபிவிருத்தித் திட்டங்களை தனித்து முன்னெடுத்தால் எதிர்ப்புக்கள் வரும். அதனால் தேசிய அரசு அமைத்து அனைவரது பங்களிப்புடனும் அபிவிருத்தியை முன்னெடுக்கத் தீர்மானித்தோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி என்று



அனைவருடனும் இணைந்து நாட்டை முன்னேற்றவே முயற்சிக்கின்றோம். ஒரு வருட ஆட்சியில் என்ன செய்தீர்கள் என்று கேட்கின்றனர். வளங்கள் திருடப்பட்ட நாட்டை நாம் கையேற்றுக் கொண்டோம். கடந்த காலத்தில் பன்னாடுகள் எம்மை கொலைகார நாடாகவே பார்த்தன. இன்று பன்னாடுகள் எமது பக்கம் திரும்பியுள்ளன. நாட்டை முன்னேற்றுவதற்கான நிதியை நாம் தேடிக் கொண்டிருக்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி என்று அனைத்து தரப்பினருக்கும், தொழில் வாய்ப்புக்களை நாம் பெற்றுக் கொடுக்க வேண்டும். அம்பாந்தோட்டை துறைமுகத்தை இன்னும் இரு வருடங்களில் கப்பல்களால் நிரப்புவோம். மத்தள விமான நிலையத்துக்கு நாள் ஒன்றுக்கு 50 விமானங்கள் வரும் வகையில் நடவடிக்கை எடுப்போம். திருகோணமலை துறைமுகத்தை அண்மித்து பொருளாதார வலயத்தை உருவாக்கவுள்ளோம் – என்றார். (ற–ஐ–5)

## ஓசோன் மண்டலத்தில் துவாரம் குறைகிறது

கொழும்பு, ஜூலை 5

சுற்றாடல் மாசடைதல் மற்றும் காற்று மாசு காரணமாக அந்தாட்டிக்காவுக்கு மேலாகவுள்ள ஓசோன் மண்டலத்தில் ஏற்பட்ட துவாரங்கள் படிப்படியாக குறைகின்றன என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

ஓசோன் மண்டலத்தில் ஏற்பட்டிருந்த இந்த விரிசல் தொடர்பில் பல தசாப்தங்களாக விஞ்ஞானிகளும், சூழலியலாளர்களும் தமது கருத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

விஞ்ஞானிகளால் "துவாரங்கள்" என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், உண்மையில் அது ஓசோன் மண்டலத்தில் ஏற்பட்ட "விரிசல்" என தற்போதைய ஆய்வு விஞ்ஞானிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

ஓசோன் மண்டலம் குணமடைதல் என்ற தொனிப் பொருளில் இந்த ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஓசோன் மண்டலத்தின் துவாரங்கள் குறைவதற்கு காபன்களால் வெளிப்படும் காற்றுமண்டல குளோறின் குறைவடைதலே காரணம் என்று ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். (ற–ஐ–ரி2,22)

## பிரதான இரண்டு கட்சிகளுக்கிடையே கருத்து முரண்பாடு

கொழும்பு, ஜூலை 5

அரசமைப்புத் திருத்த நடவடிக்கை தொடர்பில் தேசிய அரசில் அங்கம் வகிக்கும் இரு பிரதான கட்சிகளுக்கிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

உத்தேச அரசமைப்புத் திருத்தத்தின் போது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் என்ற விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இருவேறு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் வலியுறுத்தியுள்ளார். அது முற்றாக நீக்கப்படக்கூடாது என்றும் மாற்றங்கள் செய்தால் போதும் என்றும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அரசமைப்புத் திருத்தம் பற்றி ஆராய பிரதமர் நியமித்த குழு, அண்மையில் நாடாளுமன்ற வளாகத்தில் கூடியபோது மேற்படி நிலமை வெளித் தெரிய வந்துள்ளது. (ற–ஐ–5)



மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமிக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று வழங்கினார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை இந்த நிகழ்வு நடைபெற்றது. பின்னர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி மத்திய வங்கியில் தனது கடமையைப் பொறுப்பேற்றார். (ற–ஐ–5)

## றம்புட்டான் விதை சிக்கி 3 வயதுப் பாலகன் சாவு

கொழும்பு, ஜூலை 5

றம்புட்டான் விதை தொண்டையில் சிக்கி 3 வயதுப் பாலகன் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

இந்தச் சம்பவம் மிகிந்தலையில் கடந்த சனிக்கிழமை நடந்துள்ளது.

றம்புட்டான் பழங்களின் தோலை உரித்து அதன் சுளையை தாயார் அந்தப் பாலகனுக்கு உண்ணக் கொடுத்தார். அதில் ஒரு பழத்தின் விதை பாலகனின் தொண்டையில் சிக்கியது. பாலகன் மூச்சு விடுவதற்குச் சிரமப்பட்டதை அடுத்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டான். மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கிடையில் அவன் உயிரிழந்தான். இதனை வைத்தியர்கள் உறுதிப்படுத்தினர்.

உயிரிழந்த பாலகன் பெற்றோருக்கு ஒரு பிள்ளை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–ஐ–5)



## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஒற்றுமைப்படுத்தும் முயற்சி தோல்வி

கொழும்பு, ஜூலை 5

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஒற்றுமைப்படுத்த எடுத்த முயற்சி தோல்வியடைந்து விட்டது.

இவ்வாறு அந்தக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலரால் புதிய கட்சியொன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று வெளியான தகவல் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியையோ எவராவது பிரிப்பதற்கு – பிளவுபடுத்துவதற்கு முயற்சித்தால், அவர்களைக் கட்சியிலிருந்து விலக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஒன்றிணைக்கும் பணியில் நான் தோல்வியடைந்ததை ஏற்றுக் கொள்கின்றேன். தற்போது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இருக்கின்ற இடத்திலிருந்து பலப்படுத்தி கூட்டணியாக செயற்பட நடவடிக்கை எடுத்துள்ளேன்.

கட்சியை இரண்டுபடுத்த முனைபவர்களது கோரிக்கை பயனற்றது – என்றார். (ற–ஐ–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை

## வெரிட்டே ஆய்வு அமைப்பு சுட்டிக்காட்டுகின்றது

கொழும்பு, ஜூலை 5
இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கி, நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானத்தில் 89 சதவீதமான வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறு கொழும்பைத் தளமாகக் கொண்டு செயற்படும் வெரிட்டே ஆய்வு அமைப்புத் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கை தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தப் பிரேரணைக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தது. இந்தப் பிரேரணையை முழுமையாக நடைமுறைப்படுத்தி முடிக்க வேண்டிய காலப்பகுதி அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஆகும்.

தற்போது இலங்கை அரசு பிரேரணையில் சொல்லப்பட்ட விடயங்களில் 11 சதவீதத்தை மாத்திரமே நிறைவேற்றியுள்ளது என்று வெரிட்டே ஆய்வு அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

> ஐ.நா.வின் பிரேரணையில் சொல்லப்பட்ட 36 வாக்குறுதிகளில் 4 வாக்குறுதிகள் மாத்திரம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 22 வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பில் மிக மோசமான நிலையே தற்போதுள்ளது. எஞ்சிய 10 வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை

ஐ.நா.வின் பிரேரணையில் சொல்லப்பட்ட 36 வாக்குறுதிகளில் 4 வாக்குறுதிகள் மாத்திரம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 22 வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பில் மிக மோசமான நிலையே தற்போதுள்ளது. எஞ்சிய 10 வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் 2010 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வழங்கப்பட்டது. 189 பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பரிந்துரைகள் 20 சதவீதம் ஆகும். பகுதியளவில் நடைமுறைப்படுத்தப்பட்ட பரிந்துரைகள் 57 சதவீதமாகும். நிறைவேற்றப்படாத பரிந்துரைகள் எஞ்சிய 23 சதவீதம் ஆகும் என்றும் அந்த அமைப்புக் குறிப்பிட்டுள்ளது. (ற-ஐ-5)

# மொஹமட் முஸாமிலின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 5
தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸாமிலின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை கொழும்பு நீதிவான் நீதிமன்றநீதிபதிலங்காஜயரட்ண வழங்கினார்.

மொஹமட் முஸாமில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஜூன் மாதம் 20 ஆம் திகதி பொலிஸ் நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

மீண்டும் கொழும்பு நீதிவான் நீதிமன்றநீதிபதிலங்காஜயரட்ண முன்னிலையில் நேற்று அவர் முற்படுத்தப்பட்டார். மொஹமட் முஸாமிலைப் பிணையில் விடுதலை செய்யுமாறு அவரது சட்டத்தரணி நீதிவானிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

பிணை மனு தொடர்பாக தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸாமில் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்க வேண்டும் என்று நீதிவான் அறிவித்தார். அதனால் விளக்கமறியலை நாளை மறுதினம் வியாழக்கிழமை வரையில் நீடித்து உத்தரவிட்டார்.

தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸாமில் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட வாகனத்தை அரச பொறியியல் கூட்டுத் தாபனத்துக்கு வாடகைக்கு விட்டு 6.2 மில்லியன் ரூபா பணத்தைப் பெற்றார். 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த மொஹமட் முஸாமில் அரச பொறியியல் கூட்டுத் தாபனத்தில் செயற்பாட்டுப் பணிப்பாளராகப் பணியாற்றினார்.

அந்த காலப் பகுதியில் வாகனத்துக்கான வாடகைப் பணத்தைப் பெற்று தனது மனைவியின் வங்கிக் கணக்குக்கு மாற்றியுள்ளார் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. (ற-ஐ-5)

# சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி மைத்திரியிடம் இருப்பது பேராபத்து!

## கோழி, நரிக் கதை கூறுகின்றார் பசில்



கொழும்பு, ஜூலை 5
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி இருப்பது கட்சிக்குப் பேராபத்தானதாகும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சரான பசில் ராஜபக்ச தெரிவித்தார். கோழியைப் பாதுகாக்க நரியைக் காவலுக்கு வைத்த கதையைஉதாரணங்காட்டிஜனாதிபதியை அவர் விமர்சித்தார்.

மகிந்த ஆதரவு அணியின் முதலாவது கூட்டம் பண்டாரவளையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் மீது கடும் விமர்சனங்களை பசில் ராஜபக்ச முன்வைத்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது-
2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு சிக்கல் ஏற்பட்டுவிட்டது. அதன் பாரதூரம் வருங்காலத்தில் தெரியவரும். இதை இலகுமொழியில் கூறுவதாக இருந்தால் கிராமப்புறத்துக் கதையொன்று நினைவுக்கு வருகிறது. கிராமத்திலுள்ள ஒருவர் கோழி வளர்த்து வந்தார். நாளாந்தம் நரியொன்று வந்து ஒவ்வொரு கோழி வீதம் தின்றது. இதுபற்றிக் கிராமத் தலைவருக்கு எடுத்துரைக்கப்பட்டது. பின்னர் கோழிக் கூட்டுக்குக் காவல் பார்க்கும் பொறுப்பு நரிக்கு வழங்கப்பட்டது. இப்படித்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜனவரி 8 ஆம் திகதி கட்சியைத் தோற்கடித்த நபருக்கே கட்சித் தலைமையை வழங்கியுள்ளது.

அந்தக் கிராமத்து நபர், நரி கோழியைப் பாதுகாக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். நாளாந்தம் ஒவ்வொரு கோழியாகக் காணாமல் போனது. சுதந்திரக் கட்சிக்கும் இன்று இந்த நிலை தான் ஏற்பட்டுள்ளது - என்றார்.

பொது எதிரணியின் கீழ்மட்ட அரசியல் இயந்திரத்தைப் பலப்படுத்தவும், அரச எதிர்ப்புப் போராட்டத்தை வலுப்படுத்தவும் நாடுதழுவிய ரீதியில் கூட்டங்களை நடத்துவதற்கு மகிந்த அணி தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக பதுளையில் அரச எதிர்ப்புக் கூட்டம் ஆரம்பமானது. அதில் ஒருங்கிணைப்பாளராக பசில் ராஜபக்சவும் களமிறங்கியிருந்தார். மூன்று நாள்கள் பதுளையில் தங்கியிருந்து சூறாவளிப் பரப்புரையில் மகிந்த ஆதரவு அணி ஈடுபடவுள்ளது. (ற-ஐ-5)

# ஹுசைன் அறிக்கை பாரதூரம் சாடுகின்றார் தயான் ஜயதிலக



கொழும்பு, ஜூலை 5
ஐ.நா.மனிதஉரிமைகள்ஆணையாளர் சயிட் அல் ஹுசைனின் அறிக்கை பயங்கரமானது; பாரதூரமானது. நாட்டின் உள் விவகாரங்களில் அவர் தலையீடு செய்துள்ளார்.

இவ்வாறு முன்னாள் இராஜதந்திரி கலாநிதி தயான் ஜயதிலக சாடினார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், 32ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பித்த வாய்மூல அறிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-
இலங்கையின் அரசமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில்ஆலோசனைவழங்கும் அதிகாரம் ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவுக்கோ அல்லது அதன் ஆணையாளர் நாயகத்துக்கோ கிடையாது.

முப்படையினர் தவறு செய்திருந்தால் உள்நாட்டு சட்டங்களுக்கமையவே விசாரணை நடத்தப்பட வேண்டும். பன்னாட்டுச் சட்டங்களுக்கு அமைய விசாரணைகள் நடத்தப்படும் சம்பிரதாயம் இல்லை.ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நாயகம் இலங்கை தொடர்பாக முன் வைத்த அறிக்கை பயங்கரமானது - பாரதூரமானது என்றார். (ற-ஐ-5)

# பாலித தேவபெருமவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அகில இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 5
மீஹதென்ன ஆரம்பப் பாடசாலைக்குள் நுழைந்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட பிரதி அமைச்சர் பாலித தேவபெருமவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான கடிதம் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் தேவப்பெருமவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் ஆசிரியர் சங்கம் கடும் தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என்று அவர் தெரிவித்தார்.

மீஹதென்ன ஆரம்பப் பாடசாலைக்கு 10 மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு நிர்வாகம் மறுத்தது. அதற்கு எதிராக பிரதி அமைச்சர் வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தியிருந்தார்.

அதற்குப் பயன் கிடைக்காததால் பாடசாலைக்குள் புகுந்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். அதனால் பத்து பாடசாலை மாணவர்களுக்கும் அனுமதி கிடைத்தது. பிரதி அமைச்சருக்கு எதிராகப் பாடசாலை நிர்வாகத்தினர் போராட்டம் நடத்தினர். தற்போது அகில இலங்கை ஆசிரியர் சங்கம் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்துள்ளது. (ஐ-5)

# பொலிஸ் அதிகாரி என்று கூறிப் பணம் சேகரித்தவர் கைது

பொலிஸ் அதிகாரி என்று தம்மை அடையாளப்படுத்தி பணம் சேகரித்த ஆசாமி ஒருவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் தெகிவளைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் தெகிவளை உட்பட பல இடங்களில் தான் பொலிஸ் மற்றும் குற்றப்புலனாய்வு அதிகாரி என்று தெரிவித்து பணம் சேகரித்து வந்தமை விசாரணையில் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பிலியந்தலைப் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கொழும்பு மவுன்ட் லாவின்யா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தக்கதும் நல்லதுமான முடிவு

முப்பது வருடங்களாக நடைபெற்ற போரின் காரணமாக, தமிழர்களைப் பொலிஸ் பதவிகளுக்கு நியமிக்க முடியாமற் போய்விட்டது. அந்த நிலைமையைப் போக்கி--மாற்றி--தமிழ் இளைஞர்களைப் பொலிஸ் பதவிக்கு நியமிக்க ஏற்பாடு செய்ய உள்ளோம்.

இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார், வடக்கின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன.

தாம் யாழ்ப்பாண மாவட்டத்துக்குப் பணிபுரிய வந்தபோது, இங்கு பொலிஸாரின் எண்ணிக்கை மிகவும் போதாக்குறையாக உள்ளதை அவதானித்ததாகவும், அந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்று தீர்மானித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

வட்டுக்கோட்டை, வல்வெட்டித்துறை, அச்சுவேலி, நெல்லியடி ஆகிய பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதை அவதானிக்க முடிகிறது--

குறைந்த எண்ணிக்கையினராக இருந்தபோதிலும் அவர்கள் திறம்பட இயங்குவதைப் பாராட்ட வேண்டும்.

மேலும், பொலிஸ் சேவையில் பணி புரிவதற்கு 900 இளைஞர்கள் விண்ணப்பித்து உள்ளனர். அவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தித் தகுதியான அனைவரும் சேவையில் சேர்க்கப்படுவர் எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல் வெளியிட்டுள்ளார்.

எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டார நாயக்கவின் ஆட்சிக்கு முன்னர், பொலிஸ் திணைக்களத்தில் அதி உயர் பதவிகளில் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் பணி புரிந்தனர். அவர்களில் மிகப்பலர் உயர் பதவிகளையும் வகித்து வந்தனர்.

காலப்போக்கில், அந்த நிலை மிகப்பெரிய அளவில் தேய்ந்து போயிற்று. மிகக் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் முன்னெடுத்த ஆயுதப் போராட்டத்தின்போது, முந்தைய நிலை மிக மெலிந்து விட்டது.

பொலிஸ் சேவை, சிவில் பாதுகாப்புக்கு முதன்மை வகித்த நிலை மறைந்து, ஆயுதப் படை மேலோங்கி உயர்ந்து நின்றது. அதனால் தமிழ்ப் பகுதிகளில் இயங்கிய பொலிஸ் நிலையங்கள் பல மூடப்பட்டன.

காலம் செய்த கோலமடி என்ற நிலையில், வடக்கில் பணி புரிந்த தமிழ்ப் பொலிஸார் பெரும் எண்ணிக்கையில் வேறு மாவட்டங்களுக்கு இடம்மாற்றப்பட்ட அதேவேளை, அவர்களுக்குப் பதில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே தமிழ்ப் பகுதிகளில் பணிக்கு அமர்த்தப்பட்டனர்.

சிவில் நிர்வாகம் பெரும் அளவில் வடக்கு-கிழக்கில் குன்றியதால் பொலிஸாரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. தமிழ்ப் பொலிஸார் பலரும் பெருமளவில் சேவையினின்றும் இளைப்பாறிச் சென்றனர்.

போர் முடிவுற்றதற்குப் பின்னரும், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே வடக்கில் பணிக்கு பெரும் எண்ணிக்கையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

வடக்கின் புதிய பொலிஸ்மா அதிபரின் நிர்வாகத்தில், தமிழ்ப் பொலிஸார் அதிக எண்ணிக்கையில் பதவிக்கு அமர்த்தப்பட உள்ளமை நல்ல சமிக்ஞையே.

போதைப் பொருள் பாவனை, மாணவர்கள் மட்டத்திலிருந்து இளந்தாரிகள் மட்டத்தில் ஓங்கி இருப்பதால், தமிழ்ப் பொலிஸார் பெரும் எண்ணிக்கையில் நியமிக்கப்படுவதால் சட்டம் ஒழுங்கு இங்கு மேலோங்கும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்க வாய்ப்பு உண்டு.

தமிழ்ப் பொலிஸாரின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டாலே, யாழ். மாவட்டம் வாழ் தமிழ் மக்களின் தேவைகளை, முழு அளவில் நிறைவேற்ற இயலும். அவர்கள் உள்ளும் புறமுமாக பொலிஸ் சேவைகளைப் பெறவும், பெரிய அளவில் வாய்ப் புண்டு.

நல்லதே நடக்கட்டும்.

# புதிய ராஜதந்திரப் பாதையைத் தேடும் தமிழர்கள்

சிவா செல்லையா

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் இலங்கை, தொடர்பாக வெளியிட்ட வாய்மூல அறிக்கையின் முழுவடிவமும், 30.06.2016ஆம் திகதிய 'சிலோன் ருடே' பத்திரிகையில் வெளியாகியுள்ளது. அதில் உள்ள முக்கிய இராஜதந்திரக் கருத்துக்களை தமிழ் மக்கள் ஆழ்ந்து அவதானித்தல் வேண்டும்.

முதலாவதாக, இலங்கை அரசு, இலங்கை இராணுவத்தின் மீதும் இலங்கை புலனாய்வுக் கட்டமைப்பு மீதும் போதிய கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை- என்கிறார். இதனையே தமிழ் மக்களும், இனப்படுகொலைக்கான முக்கிய காரணம் எனத்தொடர்ந்து முறையிட்டு வருகின்றனர். அதே வேளை, ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர், இந்த இராணுவத்தை வடித்தெடுத்து ஐ.நா. அமைதி காக்கும் படைகளில் இணைக்க வேண்டும்-என்கி

> ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர், இந்த இராணுவத்தை வடித்தெடுத்து ஐ.நா. அமைதி காக்கும் படைகளில் இணைக்க வேண்டும் என்கிறார். இது பெரியதொரு வேடிக்கையாகும்.

றார். இது பெரியதொரு வேடிக்கையாகும். இதுதான் நிலைமாறும் நீதி யும் நல்லிணக்கமுமா எனத் தமிழ் மக்கள் கேள்வி எழுப்பும் நிலை உள்ளது. மேலும் இலங்கையில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்வதையும், கைதுகள் நடைபெறுவதையும், சாட்சிகளைப் பாதுகாக்க முடியாத சூழல் உள்ளதையும், ஐ.நா. மனித உரிமை ஆணையாளரால் அடையாளம் காணமுடிகின்றது.

இலங்கையின் தேசிய கீதம் தமிழில் பாட அனுமதிக்கப்பட்டதை வரவேற்கின்றார். ஆனால் இது எமது பிரச்சினையின் ஒரு அம்சமாகக் கொள்ளத்தக்கதன்று. வடக்கு முதல்வர் நயினாதீவு விகாரைக்குச் சென்று வழிபட்டதை வரவேற்கின்றார். போர் வெற்றிக் கொண்டாட்டத்தை நினைவு தினமாக மாற்றிக்கொண்டாடியதை நல்லிணக்கமாகப் பார்க்கின்றோம். உண்மையில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் மாறுபட்ட எதிர்பார்ப்பையே ஐ.நா.மனித உரிமைகள் சபை இலங்கையில் இருந்து எதிர் பார்க்கின்றது. அதற்கு ஏற்றால்



போல இலங்கை அரசும் நடிக்கின்றது. அரசமைப்புத் திருத்தச் சட்டம், புதிய பாதுகாப்புச் சட்டம், நல்லிணக்க செயலகம், 11 அங்கத்தவர் கொண்ட விசேட செயலணி என்பவை ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளரின் விசேட வரவேற்பைப் பெற்றமை குறித்து ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

காணாமற் போனோர் தொடர்பாக விசேட சான்றிதழ் வழங்கும் சட்டத்துக்கும் பாராட்டுக் கிடைத்துள்ளது. இதில் எந்தவொரு இடத்திலும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதும், பாதிக்கப்பட்ட தமிழர்களது எண்ணிக்கையும் குறிப்பிடப்படவில்லை. இதனை ஐ.நா.மனித உரிமைகள் சபையின் இலங்கை அரசின் இன அழிப்பை மூடி மறைக்கும் செயலாகவே கருத வேண்டும்.

அடுத்து, ஐ.நா.மனித உரிமைகள் சபை ஆணையாளர், இலங்கை அரசுக்கு சிறந்த ஆலோசனை வழங்குகின்றார். அதாவது பாதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கை பெறும் வகையில் விரைவாக சில விடயங்களைச் செய்யுமாறு வலியுறுத்துகின்றார். அதாவது காணிகள் விடுவிப்பு, கைதிகள் விடுவிப்பில் சில துரித செயற்பாடுகளை வெளிப்படுத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் திருப்தி அடைவர் எனக் கூறுகின்றார்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையும், அதன் ஆணையாளரும் இலங்கையில் தமிழர்கள் இன ரீதியாகப் பாதிக்கப்பட்டனர் என்பதை வெளிப்படுத்தப்படுவதைத் துல்லியமாகத் தவிர்த்து உள்ளதாகவே கொள்ள முடியும். இது நீதிக்காக ஏங்கும் தமிழ் மக்களுக்கு ஏமாற்றமளிக்கும் ஒன்றாகும்.

சர்வதேச பங்களிப்பை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆலோசனையாகவே கருதுகின்றார். இதன் மூலம் சர்வதேச ஆலோசகர்கள் உள்ள பட்சத்திலேயே பாதிக்கப்பட்டவர்கள் முன்வைக்கும் போர்க்குற்றங்கள் நடு நிலையில் விசாரிக்கப்பட முடியும் எனக் கூறுகின்றார். இவை இலங்கைச் சட்டத்துக்கு உட்பட்டே இருப்பதனால் அச்சப்படத் தேவை இல்லை. இதனையே வெளிவிவகார அமைச்சரும், நாம் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு அச்சப்படத் தேவையில்லை என அழுத்தமாகக் கூறி உள்ளார். பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகவும், இலவுகாத்த கிளியின் கதையாகவும் ஜெனிவா மனித உரிமைகள் சபை அமைந்து விட்டது என்பதே உண்மை.

இறுதியாக, இலங்கையில் அரசமைப்பு மாற்றம் நிலைமாறும் நீதி, பொருளாதார மீட்சி, பாதுகாப்புத் துறையின் மறுசீரமைப்பு என்பவை தொடர்பான செயற்பாடுகள் அதிகம் விலை கொடுத்து, காலம் எடுத்து மேற்கொள்ளப்பட வேண்டியவை. அதுவரை பாதிக்கப்பட்டவர்களின் பொறுமையின்மை, பங்களிப்பு என்பனவற்றைச் சமாளிக்கும் அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு வேண்டுகின்றார். ஈற்றில் அரசு செல்லும் நல்லிணக்கப் பாதைக் குத் தேவையான ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கத் தயா ராக உள்ளதாகக் குறிப்பிடு கின்றார்.

எனவே தமிழ் மக்கள் தமது இராஜதந்திர அரசியல் பயணத்தை முன்னெடுப்பதற்கான மார்க்கத்தைத் தேடவேண்டிய நிலைக்கு ஐ.நா.மனித உரிமைகள் சபையால் உந்தித் தள்ளப் பட்டுள்ளனர் என்பதே உண்மை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனந்தன்

# ஆட்டம் காணுமா இறுதித் தமிழ் அரசு?

தமிழர் இல்லாத நாடில்லை; தமிழருக்கு என்றொரு நாடில்லை என்பது தன்மானமும், தமிழ் இன, தாய் மண் பற்றும் கொண்ட, தமிழ்க் குருதி ஓடும் செந்தமிழர்களின் வேதனை கலந்த வார்த்தையாகும். இந்தத் தமிழர்களின் கடலளவு இலட்சிய ஆசையில், கடுகளவாக அமைந்த அரசே வடமாகாண அரசாகும்.

பல வருட போராட்டத்தின் பின்பு, எண்ணற்ற மாவீரர்களின் தியாகத்தின் பின்பு, பல்லாயிரம் மக்களின் இழப்புக்குப் பின்பு, அவர்களது கோடிக்கணக்கான சொத்திழப்புக்குப் பின்பு, தாயகக்கனவு வல்லரசுகளால் சிதைக்கப்பட, இறுதியாகக் கிடைத்ததே இந்த வடமாகாண சபை.

இந்த வடமாகாண சபையே, உலகில் தமிழர்கள் ஆளும் அரசு. உலகில் எங்கு தமிழர்கள் வாழ்ந்தாலும், அங்கு தமிழர்கள் அரச உறுப்பினர்களாக இருக்கின்றார்களே தவிர, அரச அதிகாரம் கொண்டவர்களாக இல்லை. தமிழ்நாட்டில் கூட தமிழரின் ஆட்சி இல்லை.

இவ்வாறாக, தமிழருக்கு ஆளக்கிடைத்த வடமாகாண சபையில் நடக்கின்ற சம்பவங்கள் ஒட்டுமொத்தமான தமிழர்களையும் வேதனைக்குள்ளாக்குகின்றது. ஆளும் கட்சிக்குள் ஓர் எதிர்க்கட்சி என்று வடமாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் கூறும் அளவுக்கு நிலமை மோசமாகியுள்ளது. தமிழர்களிடம் ஆட்சியைக் கொடுத்தால் அவர்கள் தமக்குள்ளேயே சண்டையிட்டு இறுதியாக எம்மிடம் வந்து ஆட்சியை ஒப்படைப்பார்கள் என்றும், தமிழர்கள் ஆளக்கூடிய தகுதியற்றவர்கள் என்றும் சிங்களத் தலைவர்கள் கூறும் அளவுக்கு வடமாகாணசபையினது செயற்பாடுகள் அமைகின்றன.




முதலமைச்சருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவதும் அமைச்சர்கள் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதும் என்று எண்ணற்ற பிரச்சினைகளை எதிர்க்கட்சியல்லாது, ஆளும் கட்சி உறுப்பினர்களே செய்வது தமிழரின் ஆட்சியை, ஆளுமையை உலகமும் சிங்களத் தலைவர்களும் பார்த்துச் சிரிக்கும் அளவுக்குக் கொண்டு வந்துள்ளன.

> வடக்கு, கிழக்கு என்றும், தமிழர் தாயகம் என்றும், தனி நாடு அமைப்போம் என்றும் கூறிச் சிங்கள அரசு களுடன் மோதி முரண்பட்டு, இறுதியில் இந்திய அரசால் 13 ஆவது அரசியல் திருத்தத்தின்படி தரப்பட்ட வடக்கு கிழக்கில் கிழக்கையும் இழந்தோம்.

இந்த உலகனைத்தையும் தமிழன் ஆண்டான் என்பதே வரலாறு. பின்னர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சேர, சோழ,பாண்டியர்கள் ஆண்டார்கள். அங்கே தமிழர்கள் தமக்குள்ளேயே சண்டையிட்டு தாமும் அழிந்து, தமிழ் இனத்தையும் அழித்தார்கள். இதனால் கஜனிமுகமது போன்ற இஸ்லாமியர்கள் அவர்கள் மீது போர்தொடுத்து வென்றார்கள். பின்னர் ஐரோப்பியர்கள் வென்றார்கள். அவ்வாறே இலங்கையிலும் விஜயன் காலடி வைக்கும் வரை தமிழர்களே ஆண்டார்கள். மெல்ல மெல்ல ஆளுமையின்மையாலும் காட்டிக் கொடுப்புகளாலும் தமிழர்கள் இலங்கையை இழந்து வடக்கு கிழக்குக்கு உரிமை கோரி 30 வருடங்களாகப் போர் புரிந்தோம். இறுதியில் இலங்கையரசுடனும், இலங்கை இராணுவத்துடனும் மேற்கொண்ட போரை, வல்லரசுகளுடன் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டு, வல்லரசுகளாலும் காட்டிக் கொடுப்புக்களாலும் அழிக்கப்பட்டோம்.

வடக்கு, கிழக்கு என்றும், தமிழர் தாயகம் என்றும், தனி நாடு அமைப்போம் என்று கூறிச் சிங்கள அரசுகளுடன் மோதி முரண்பட்டு, இறுதியில் இந்திய அரசால் 13 ஆவது அரசியல் திருத்தத்தின்படி தரப்பட்ட வடக்கு, கிழக்கில் கிழக்கையும் இழந்தோம். இவ்வாறு மெல்ல மெல்ல ஒதுக்கித் தள்ளப்பட்டு பல்வகை இழப்புக்களின் பின்னர் வடக்கில் ஒதுங்கி நிற்கும் நாம், இன்னும் 20 வருடங்களில் வடக்கையும் இழக்கும் நிலையில் உள்ளோம். அதற்கான வேலைத்திட்டங்களை சிங்கள, முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மேற்கொண்டு வரும் நிலையில் நாம் எமக்குள் முரண்டுபடுவதும், ஒரு தரப்பினருக்கு மறுதரப்பினர் குழிதோண்ட முனைவதும் பெரும் முட்டாள்த்தனமாகும்.

வெகுவிரைவில் வடக்கு மாகாணத்திலும் சிறுபான்மையினராகி ஆட்சியதிகாரத்தை இழக்கப்போகும், நாம் எமக்குள் இருக்கின்ற தவறுகள் பிழைகளை முட்டிமோதிக் கொள்ளாமல் சுமுகமாகப் பேசித்தீர்த்து எமது ஆளும் திறனை வெளியுலகுக்குக் காட்ட வேண்டும்.எமது ஆட்சிக்காலத்தில். எமது மக்களுக்காக, எதிர்காலச் சந்ததிக்கான, எம்மினத்தின் நிலையான இருப்பைத் தக்க வைப்பதற்கான செயற்பாடுகளை செய்வதை விடுத்து எமக்குள் போட்டி போடுவது முறையன்று.

## ரணங்களை ஆற்றும் மருந்து

சின்ன மீனைப் போட்டாற்றான் பெரிய மீனைப் பிடிக்கலாம், சில்லறையை விட்டாற்றான் பெருந்தொகையை எடுக்கலாம் என்று பழைய சினிமாப்பாடல் வரியொன்றுண்டு. அதன் உள்ளார்த்தமே இன்றைய உலகில் பெரும்பாலும் பிரதி பயன் கருதாது எவரும் எந்த விடயத்திலும் ஈடுபடுவதில்லை என்பதுதான். இன்றைய நிலையில் அப்படித்தான் தப்பித்தவறி எந்தவித பிரதிபயனும் கருதாது பொதுநல நோக்கில் ஒருவர் ஒரு காரியத்தில் தமது பணத்தை, நேரத்தைச் செலவிடுவாரானால், அவர் நிச்சயமாக சமூகத்தின் பார்வையில் பிழைக்கத் தெரியாதவர் என கணிக்கப்படுவார் என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

அந்த வகையில் விளம்பரயுகம் என அடையாளப்படுத்தப்படும் இன்றைய காலகட்டத்தில், எமது சமூகத்தில் சுயவிளம்பரம் தேடிக்கொள்ளும் மனப்போக்கு, வசதி வாய்ப்புக்கள் தேவைக்கு மேலதிகமாகக் கிட்டியுள்ள நிலையிலும் சமூகத்தில் தத்தமது பெருமையை நிலைநாட்டிக் கொள்ளும் முனைப்பில் பலர் நன்கொடைகளை வாரி வழங்குவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

எவராயினும் சரி, பெரிதோ சிறிதோ, கூடியதோ குறைந்ததோ, வழங்கப்படும் நன்கொடை, வெகுமதி, அன்பளிப்பு என்பவற்றால் குறிப்பிட்ட ஒரு சிலர் பயன்பெறாது, ஒட்டுமொத்தச் சமூகமும் பயனடையுமானால் அத்தகைய செயற்பாடு சமூகத்தின் நன்மதிப்பையும் ஆண்டவனது அனுக்கிரகத்தையும் சம்பந்தப்பட்ட கொடையாளிகளுக்கு ஈட்டிக் கொடுக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.

மற்றொரு புறத்தில், தமதோ அன்றேல் தமது குடும்பத்தினரதோ பெருமையைப் பறைசாற்றிக் கொள்ளும் நோக்கில் கோயில் மகோற்சவங்களில் உபயகாரர்களில் ஒரு சிலர் பெருமளவு நிதியை எத்தகைய பிரயோசனமுமின்றி ஆடம்பரத்துக்காகச் செலவு செய்து, தத்தமது விலாசத்தை உயர்த்திக் கொள்ள முயல்வதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஏழையின் சிரிப்பில் தான் இறைவனைக் காணலாம் என்ற எமது முன்னோர்களது வாக்கு மேற்குறிப்பிட்ட தரப்பினர்களது மனங்களில் ஆழவேரூன்றிப் பதிந்தால் அனாவசிய டாம்பீகச் செலவினங்கள் குறைவடைய வாய்ப்பு ஏற்படும் என நம்பலாம்.

அந்த வகையில் மிக அண்மையில், மின்னாமல் முழங்காமல், ஒரு நற்பணி, சமூகப் பயன்தரு திட்டம், வீட் டுத்திட்டமாக நிறைவேறி இருப்பது குறித்து உதயன் பத்திரிகை வாயிலாக தெரிந்து கொண்டு மனம் மகிழ்ந் தேன். நேரில் தெரிந்திராத போதிலும், இத்தகு பெரும் சமூகப் பணியொன்றை 15 வீடுகைளைக் கொண்ட வீட்டுத்திட்டமொன்றைத் தமது சொந்தச் செலவில் உருவாக்கி இனங்காணப்பட்ட பயனாளிகளுக்கு வறு மைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கிவைத்த கோண்டாவிலைச் சேர்ந்த இ.குவேந்திரநாதனது அரும்பணி காலத்தால் கௌரவம் பெறுமொன்று. இத்தகைய நன்மனத்தோர்களது கருணை மனப்பாங்கே எல்லா வழிகளிலும், இழப்புக்களையும் தோல்விகளையும் சந்தித்து நிற்கும் எமது மக்களது ரணங்களை ஆற்றவல்ல நன்மருந்தாக அமையுமெனக் கொள்ளலாம்.

சரவண–ராஜன், உரும்பிராய்

## மூத்த குடிமக்களின் புலம்பல்

மூத்த குடிமக்களது சிரமங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டியது ஒரு நாட்டு அரசின் தட்டிக் கழிக்க முடியாத கடமையும் பொறுப்பும் ஆகும்.

அந்த வகையில் 55 வயதுக்கு மேற்பட்ட சீனியர் சிற்றிசன்ஸ்க்கு ஒருவருட நிரந்தர வைப்பிற்கு 11 வீதவட்டி தருவதாக எஸ்.எம்.எஸ் ஊடாக வங்கிகளால் தெரிவிக்கப்படுகின்றது. அதுவும் அதனை விட கூடவும் வழங்கி உதவ வேண்டியது அரசின் தார்மீகக் கடமை.

இதேவேளை பல மூத்த குடிமக்கள் சில வங்கிகளில் தமது ஓய்வூதியத்தை அடகுவைத்தது போல வைத்துக் கடன் எடுத்துத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையிலும் உள்ளனர். வறுமை காரணமாக இத்தகைய கடன் பெறும்போது வட்டி 20 வீதம் அறவிடப்படுகின்றது. இதனால் தவணைக் கட்டணத்துக்கு நிகரான தொகையளவில் வட்டியாகச் செலுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர். மூத்தகுடிமக்களது வைப்புக்குப் 11 வீதம் வட்டி வழங்கினால், இத்தகைய கடன்களுக்கு அதனை விட இரண்டு அல்லது மூன்று வீதம் அதிகமாக அறவிடலாம். அதனை விடுத்து 9 வீதம் அதிகமாக அறவிடுவது உண்மையில் கஷ்டப்பட்ட வயோதிப ஓய்வூதியரை வதைக்கும் செயலாகவே பார்க்கப்பட வேண்டும். தமது வரையறையற்ற நிகர இலாபம் பற்றிப் பீற்றித்திரியும் தரப்பினர் இவ்விடயத்தில் ஓரளவு கருணை காட்டமுடியாதா? என்பதே எமது ஆதங்கமாக உள்ளது.

ஒரு வாசகன்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். [illegible] குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவத்துக்குச் சென்றவருக்கு ஆடையால் ஏற்பட்டது ஆபத்து

வொஷிங்டன், ஜூலை 5
அமெரிக்காவின் ஒகியோ மாநிலத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் வீதியில் மடக்கிப் பிடிக்கப்பட்டு தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அவர் அணிந்திருந்த உடை மற்றும் அவரது, நடவடிக்கை என்பவற்றில் ஏற்பட்ட சந்தேகத்தால் இந்த நிலமை ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து வெளிநாடுகளுக்குச் செல்லும் தமது பிரஜைகள் கலாசார உடையை அணிய வேண்டாம் என்று ஐக்கிய அரபு இராச்சிய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

41 வயதான அஹமட் அல் மென்ஹாலி என்ற வர்த்தகர் மருத்துவ தேவைக்காக அமெரிக்கா சென்றுள்ளார். அவர் தங்கியிருந்த விடுதியின் பணிப் பெண்ணுக்கு அவர் மீது சந்தேகம் வந்துள்ளது.

லொபி உடை அணிந்த ஒருவர் பல கைத்தொலைபேசிகளுடன் தங்கியுள்ளார் என்று அவசர பொலிஸ் குழுவுக்கு அவர் தகவல் வழங்கியுள்ளார்.

வீதியில் சென்று கொண்டிருந்த அஹமட் பொலிஸாரால் திடீரென மறிக்கப்பட்டார். சோதனைக்கு உட்படுத்தப்பட்டார். நிலத்தில் மண்டியிட வைக்கப்பட்டு கைவிலங்கிடப்பட்டு விசாரிக்கப்பட்டார். அவரது உடைமைகள் அனைத்தும் சோதனையிடப்பட்டன.

இந்தத் திடீர் நடவடிக்கைகளால் அஹமட்டுக்கு வலிப்பு ஏற்பட்டது. உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். விசாரணைகளில் அவர் மருத்துவ தேவைக்காக வந்தவர் என்பது உறுதியானது.

ஐக்கிய அரபு இராச்சிய வெளிவிவகார அமைச்சு வெளிநாடுகளுக்கு செல்லும் தமது நாட்டுப் பிரஜைகள் அந்த நாட்டு சட்ட திட்டங்களுக்கு இசைவாக நடத்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. கலாசார ஆடைகளை அணிவதைத் தவிர்க்குமாறும், பெண்கள் முகத்திரை அணிவதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தியுள்ளது.

(ற-ரி4)

# சிலைக்குள் வைத்து நூதனமாக கடத்தப்பட்ட போதைப்பொருள்

## நியூஸிலாந்து பொலிஸிடம் மாட்டியது

வில்லிங்டன், ஜூலை 5
நியூஸிலாந்தில் பெருந்தொகைப் போதைப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை மெக்சிக்கோவில் இருந்து கடத்தப்பட்டவையாகும். 1 கிலோ எடையுடைய 35 போதைப் பொருள் பைக்கற்றுக்கள் 400 கிலோ எடையுடைய சிலை ஒன்றுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளன. நியூஸிலாந்தில் பெருந்தொகைப் போதைப் பொருள் மீட்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.

குதிரைச் சிலைக்குள் வைத்து போதைப் பொருள் கடத்தப்பட்டுள்ளது. முதலில் 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மற்றொருவர் கைது செய்யப்பட்டார். விசாரணைகள் தொடர்கின்றன – என்று பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

(ற-ரி4)



முதலாம் உலகப் போரை நினைவு கூரும் நிகழ்வு கடந்த வாரம் லண்டனில் ந
இடத்தில் கூடி மக்களின் கவனத்தை ஈர்த்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...னில் நடைபெற்றது. நடிகர்கள் பலர் முதலாம் உலகப் போர்ப் படையினரின் சீருடைகளை அணிந்து, பொது (ற-ரி4)

# தன்னைக் காதலிக்க மறுத்த பெண்ணின் கழுத்தை அறுத்துக் கொன்ற இளைஞன்

## தெலுங்கானாவிலும் கொடூரச் சம்பவம்

புதுடில்லி, ஜூன் 5

சென்னையில் இளம் பெண் பொறியியலாளர் இளைஞரொருவரைக் காதலிக்க மறுத்ததால் கழுத்து வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியிருந்தது. அது அடங்குவதற்குள் அவ்வாறான சம்பவம் ஒன்று தெலுங்கானா மாநிலத்திலும் நடந்துள்ளது. 19 வயதான பொறியியல் மாணவி ஒருவர் இளைஞர் ஒருவரால் கழுத்து வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அகிலாபாத் மாவட்டத்தைச் சேர்ந்த 19 வயதுப் பெண் ஒருவரே கொல்லப்பட்டார்.

அவரது அயல் வீட்டைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே இந்தக் கொலையைச் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இளைஞர் அந்தப் பெண்ணை ஒருதலையாகக் காதலித்துள்ளார். அவரைப் பின்தொடர்ந்து தொல்லை கொடுத்துள்ளார். அது குறித்து தனது பெற்றோர் ஊடாக அந்தப் பெண் பொலிஸில் கடந்த ஆண்டு முறையிட்டார். பொலிஸார் இளைஞரைக் கைது செய்து கண்டித்து அறிவுரை கூறியுள்ளனர்.

இதனால் குறித்த இளைஞர் பெண்ணின் மீதும் அவரது குடும்பத்தின் மீதும் கோபம் கொண்டிருந்தார். அந்தப் பெண்ணுக்கு தற் போது பெற்றோர் திருமணம் நிச்சயித்திருந்தனர். குறித்த இளைஞர் நிச்சயதார்த்தத்திலும் தகராறு செய்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை குறித்த பெண் பொருள்கள் வாங்க கடைக்குச் சென்றுள்ளார். அவரைப் பின்தொடர்ந்த இளைஞர் பெண்ணின் கழுத்தை அறுத்துள்ளார். சம்பவ இடத்திலேயே பெண் உயிரிழந்தார். இளைஞன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ரி4)

# அமெரிக்கத் தூதரகத்துக்கு அண்மையில் தாக்குதல்

## இருவர் சாவு; சவூதியில் சம்பவம்

ரியாத், ஜூலை 5

சவூதி அரேபியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகக் கட்டடத்துக்கு அண்மையில் நேற்று மனிதக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதில் இருவர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர். முதலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களில் குண்டுகள் வெடித்துள்ளன. ஒரு மணி நேரம் கழித்து 3 குண்டு வெடிப்புக்கள் நடந்துள்ளன. வெளிநாட்டவர்களை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதி போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. தேடுதல் நடத்தப்பட்டது.

தாக்குதலுக்குஇதுவரைஎந்தஅமைப்புகளும் உரிமை கோரவில்லை. இந்தத் தாக்குதல் எமக்கு எச்சரிக்கையை வழங்கியுள்ளது. தாக்குதல் தொடர்பான மேலதிக விவரங்களை எதிர்பார்க்கின்றோம்.– என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற-ரி4)



# ஆப்கனில் அமெரிக்காவின் தலையீட்டை நிறுத்தவேண்டும்

## தலிபான் அமைப்பு எச்சரிக்கை

காபூல், ஜூலை 5

ஆப்கனில் இயங்கும் தலிபான் அமைப்பு அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆப்கனில் அமெரிக்காவின் தலையீட்டை உடன் நிறுத்த வேண்டும் என்று அந்த அமைப்பின் தலைவரான அகுன்சடா தெரிவித்துள்ளார். யாதார்த்தங்களைப் புரிந்து கொள்ளுங்கள். எங்களுக்கு வீரம் காட்டுவதை நிறுத்துங்கள். இந்தச் செய்தி அமெரிக்காவுக்கும், அமெரிக்கர்களுக்கும் அதன் நட்பு நாடுகளுக்குமானது. உங்கள் படைகளுக்கு ஆப்கனியர்கள் அஞ்சப் போவதில்லை. நீங்கள் ஒரு குழுவுக்கு எதிராகப் போரிடவில்லை. ஒரு தேசியத்துக்கு எதிராகப் போரிடுகிறீர்கள். நீங்கள் வெற்றியடையப் போவதில்லை. எமது போராளிகள் தியாக உணர்வு மிக்கவர்கள். அவர்களது வாழ்வின் இலக்கு எமது உரிமைகளைப் பெறுவதே- என்று அவர் தெரிவித்துள்ளார்.

15 ஆண்டுகளாக ஆப்கனில் அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதுவரையில் அமெரிக்கா ஆப்கனில் நடத்திய தாக்குதல்களில் ஆயிரத்து 500 தொடக்கம் 2 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். அவர்களில் சுமார் 100க்கும் மேற்பட்ட பொதுமக்களும் அடக்கம். (ற-ரி4)



# ஓரினச் சேர்க்கைத் திருமணத்துக்கு ஆசியாவிலும் விரைவில் அங்கீகாரம்!

தாய்பெய், ஜூலை 5

ஆசிய நாடான தாய்வானில் ஓரினச் சேர்க்கைத் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இது குறித்து அந்த நாட்டு நாடாளுமன்றில் விவாதிக்கப்படவுள்ளது.

ஓரினச் சேர்க்கையாளர் தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது. தாய்வானில் நடைபெற்ற நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான ஓரினச் சேர்க்கையாளர்கள் கலந்து கொண்டனர். அதன்மூலம் ஆசியாவில் அதிக எண்ணிக்கையில் ஓரினச் சேர்க்கையாளர்களைக் கொண்ட நாடு என்று தாய்வான் இனங்காணப்பட்டுள்ளது. தற்போது ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு சட்ட ரீதியான அங்கீகாரத்தை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தாய்வான் ஜனாதிபதியாக அண்மையில் பதவியேற்ற சாய் இங்வின் பாலினச் சமத்துவம், ஓரினச் சேர்க்கை ஆகியனவற்றுக்கு ஆதரவு வழங்கியுள்ளார். 2012ஆம் ஆண்டு இங்வின் ஓரினச் சேர்க்கையாளர் தொடர்பான மனு ஒன்றை சமர்த்திருந்தார். தாம் அது தொடர்பில் மீண்டும் முயற்சி எடுக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தாய்வானின் பழைமைவாதிகள், கிறிஸ்தவர்களிடம் இருந்து ஓரினச் சேர்க்கையாளர் விவகாரத்துக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. (ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் பலன்கள் 9

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 9 குறித்த விவரங்களின்நேற்றைய தொடர்ச்சி கீழே பிரசுரமாகின்றது.)

இவர்கள் தங்களது தொழிலைப் பெருகச் செய்வது எப்படி என்பதைப் பற்றிய எண்ணத்திலேயே இருப்பார்கள். பலருக்கு அரச பணியிலும், காவல் துறையிலும், இராணு வத்திலும் மிகவும் ஈடுபாடு உண்டு.

**அதிர்ஷ்ட நாள்கள்**

ஒவ்வொரு மாதமும் 9, 18, 27 ஆகிய நாள்களும், 6, 15, 24 ஆகிய நாள்களும் மிகவும் சிறப்பானவை! எனவே கூட்டு எண்கள் 6 மற்றும் 9 வரும் நாள்களும் இவர்களுக்கு மிகவும் சாதனமானவையே.

1, 10, 19, 28 மற்றும் கூட்டுஎண் 1 வரும் நாள்களும் நடுத்தரமான பலன்களையே கொடுக்கும்.

ஒவ்வொரு மாதத்திலும் 2, 11, 20, 29 நாள்களும் கூட்டு எண் 2 வரும் நாள்களும் துரதிர்ஷ்டமானவை! எந்தச் செயலும் தொடங்கக் கூடாது.

**அதிர்ஷ்ட நிறங்கள்**

இவர்களுக்கு கருஞ்சிவப்பு, நீலம், சிவப்பு ஆகிய நிறங்கள் மிகவும் ஏற்றவை! ஆனால் கரும்பச்சை, கறுப்பு மற்றும் வெள்ளை நிறங்கள் துரதிர்ஷ்டமானவை.

**9 ஆம் திகதி பிறந்தவர்கள்**

வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டு முன்னேறுபவர்கள். எளிதில் உணர்ச்சி வசப்படுவார்கள். சுதந்திரமான எண்ணங்கள் நிறைந்தவர்கள். புதிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்ற ஆதங்கம் உடையவர்கள். மற்றவர்களை அடக்கி ஆள விரும்புவார்கள்! உற்றார், உறவினர்களிடம் கூட அடிக்கடி சண்டை போடும் குணமும் உண்டு.

**18 ஆம் திகதி பிறந்தவர்கள்**

போராட்டமே இவர்களது வாழ்க்கையாக இருக்கும். எதையும் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரவே முற்படுவார்கள். பேச்சுத்திறமை அதிகம் உண்டு. கட்டைப் பஞ்சாய்த்து செய்து வைக்கும் குணத்தவர்கள்.

அவசரம், பிடிவாதம், சுயநலம் ஆகியவற்றை விட்டுவிட்டால், இவர்கள் பெரும் சாதனைகளைப் படைக்கலாம். காதலிலும் அதிகாரம் காட்டி, அதன் மூலம் பிரச்சினைகளை உண்டு பண்ணிக் கொள்வார்கள். எப்போதும் உணர்ச்சி வசப்பட்டவர்கள், மன அமைதியை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

**27 ஆம் திகதி பிறந்தவர்கள்**

அறிவும், ஆற்றலும் நிறைந்தவர்கள். பலர் இராஜதந்திரிகளாகவும் விளங்குவார்கள். சமூகத்தில் இவர்களுக்கு நல்ல செல்வாக்கு நிச்சயம் கிடைக்கும். இரவு நேரத்தில் வேலை செய்வது இவர்களுக்குப் பிடிக்கும். இவர்களது திட்டங்கள் எல்லாம் நிச்சயம் வெற்றி அடையும். மனம் தளராமல் உழைப்பவர்கள். மற்ற இரு திகதிகளில் பிறந்த அன்பர்களை விட அமைதியானவர்கள். செயலில் நம்பிக்கை உடையவர் கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு உண்டாகும். நல்ல செயல்களின் மூலம் பேரும், புகழும் அடைவார்கள். சுதந்திர மனப்பான்மை உண்டு. நிதானமாக, அவசரப்படாமல் (சீரான திட்டத்துடன்) செயற்பட்டு வெற்றியைச் சீக்கிரம் அடைவார்கள். ஒருதடவைக்கு இரண்டு தடவை யோசித்தே காரியங்களில் ஈடுபடுவார்கள்.

**எண் 9 இற்கான தொழில்கள்**

இவர்கள் நிர்வாகச் சக்தி மிகுந்தவர்கள்! ஆயுதம் தாங்கிச் செய்யும் அனைத்துத் தொழிலிலும்வெற்றிபெறுவார்கள். இராணுவம், காவல்துறை, அறுவை மருத்துவர்கள் போன்றவைகளில் பிரகாசிப்பார்கள். கார், ரயில், விமானம், ஓட்டுவதில் நாட்டம் உள்ளவர்கள். வேகமாகச் செல்வது இவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.

பொறுமை இவர்களுக்குப் பிடிக்காத விடயம். தீயுடனும், வெப்பத்துடனும் சேர்ந்த எந்தத் திட்டங்களிலும் வெற்றி பெறுவார் கள். சிலர் கோபக்காரர்களாக மாறித் தீய செயல்களைச் செய்யவும் தயங்கவும் மாட்டார்கள். பொறியியல் தொடர்பான பெரிய பொறுப்புகளை தைரியமாக ஏற்று வெற்றி பெறுவார்கள். கட்டடத் துறை, மின்சாரத் துறை, விளையாட்டுத் துறை, வாழை, மொச்சை, சிவப்புத் தானியம் போன்றவை உற்பத்தி, உரம் சம்பந்தப்பட்ட தொழில்கள், தச்சு வேலை, போன்ற தொழில்கள் அனைத்தும் வெற்றி தரும். விளையாட்டு வீரர்கள். மலையேறும் வல்லுநர்கள் போன்றவர்களும் இந்த எண்ணின் கீழ் அமையின் அவர்களுக்கு வெற்றியைத் தரும். ஆன்மிகத்திலும் சிலர் தீவிரமாக, முழுமையான மனதுடன் ஈடுபடுவார்கள். சிலர் தொண்டு நிறுவனங்களையும் தொடங்கி, நன்கு நிர்வகிப்பார்கள்.

(முற்றும்)

# தமிழர் அடிமையானது ஏன்?

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

கௌதம புத்தரின் கருத்துரைகள் இந்தியா, இலங்கை, சீனா, ஜப்பான் ஆகிய தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பரவின. உலகில் பௌத்த மக்கள் தொகை 372, 974, 000 பேர் ஆகும். கன்ஃபூசியசின் கருத்துரைகள் சீனாவில் பரவி அரச அங்கீகாரம் பெற்றது. 1948 இல் சீனா விடுதலை பெறும் வரை இந்த நிலைப்பாடே அங்கு நிலவியது. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன், ஜப்பான் மொழிகளில் இது பரிவர்த்தனம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் இயேசுவின் கருத்துக்கள் பலஸ்தீனத்திலிருந்து உலகெங்கும் பரவின, மற்றும் முகமது நபியின் கருத்துக்கள் அரேபியா, ஆபிரிக்கா, ஆசியாக் கண்டங்களில் பரவின. மேற்படி மூன்று போதனைகளும் உலகில் பரவலாகப் பின்பற்றப்படும் கருத்துக்களாகப் பரிணமித்துள்ளன. இதற்கு அரசுகளும், சீடர்களும், ஆதிக்கம் செலுத்தி, பிற நாடுகளைக் கைப்பற்றியமையே சான்று. தமிழர்கள் தாம் அறிந்த நுட்பங்களைக் கோட்பாடாக்கிச் சந்தைப்படுத்தியதும் இல்லை, வணிகப்படுத்தியதும் இல்லை. விளம்பரப்படுத்தியதும் இல்லை. எமது திருவள்ளுவத்துக்கும் இது வாய்க்காமை வெளிப்படை. ஆனால் இன்று திருவள்ளுவர் சிலைகள் அன்பளிப்பாக வழங்கப்படுகின்றமை காலம் கடந்த ஞானம். அறம், பொருள், இன்பம் தமிழரின் மரபுப் பண்புகள். சர்வலோக சமய மாநாட்டில், சிக்காகோவில் வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் சக்தி வாய்ந்த பேருரை மட்டுமே இந்து சமயத்தின் எழுச்சிக்கு வித்திட்டது. சித்தர்கள், கடவுள், சமயம், மருத்துவம் பற்றிய கருத்துக்களை இரகசியமாகவே வைத்தனர். மக்கள் இருக்கும் இடம் தேடியும், நாடியும் எடுத்துச் சென்றதில்லை. தாம் சொல்ல விரும்பும் கருத்துக்களைப் பதிவு செய்து பத்திரப்படுத்தினர். தன்னடக்கத்துடன் ஒதுங்கினர். திருவள்ளுவமும் அமைதிப் பணியே. உணர்ந்ததையும், அறிந்ததையும் தாமே பரப்பாமை தமிழர் மரபாக இருந்தது. தமிழர் மரபில் விசேடமானது விருந்தோம்பல், பதிலுக்கு எதுவும் பெறுதல் கூடாது. திண்ணைகள் அமைக்கப்பட்டு தமிழர் உணவளிப்பது, தங்க வைப்பது ஆகியவை இலவசமாகச் செய்யப்பட்டு வந்தன. அயலார்க்கு, பிற நாட்டார்க்கு இடம் அளித்தமை காலப் போக்கில் ஆளும் எசமானர் ஆக்கிற்று. தமிழரை அடிமை ஆக்கிற்று.



அன்று குரு சீடர் கல்வி இலவசமே. இவற்றை வணிகமாகவோ, தொழிலாகவோ செய்யவில்லை [illegible] மக்களை நாடி நெருங்கினோர். சந் [illegible] மறைந்த குன்றக் குடி அடிகளாரே. திருக்குறளைத் தமிழரசர்கள் எவருமே முன்னிலைப் படுத்தவில்லை. மாறாக ஆரிய வேதங்கள், சமஸ்கிருத இதிகாசங்கள் போற்றப்பட்டன. விளைவாக அறக்கருத்துகள் மக்களைச் சென்று சேரவே இல்லை. அயல் நாட்டார் படையெடுத்தபோது எளிதாக அந்த ஆட்சிக்கு உட்பட்டுத் தமிழர்கள் குடி மக்களாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பேச்சை விடுத்து முயற்சித்தால் எமது வாழ்க்கையில் வெற்றி

அன்ரனி பீற்றர்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருமே தாம் சிறப்பாக வாழ வேண்டுமென்று ஆசைப்படுவர். அந்த ஆசை வெறுமனே எண்ணத்தில் மட்டும் இருந்தால், அவர் ஆசை நிறைவேறாது. அந்த ஆசையை நிறைவேற்ற அல்லது அடைந்துகொள்ள, சில வழிமுறைகளை மேற்கொண்டு செய்யும்போதே அதில் வெற்றி கிடைக்கிறது. எமது வாழ்வின் எந்தச் செயற்பாடாக இருந்தாலும் எண்ணத்துடன் கூடிய திட்டமிட்ட விடாமுயற்சியுடைய செயற்பாடாக அமையும்போது, எமது வெற்றியை எவராலும் தடுக்கமுடியாது. சிலர் இப்படிச்செய்ய வேண்டும், அப்படிச்செய்ய வேண்டும் என்று வாய் வெட்டிப் பேச்சுக்காரராக இருப்பார்கள். இறுதியில் அவர்களின் செயற்பாடுகளில் தோல்வியே மிஞ்சி நிற்கும். இவர்களை பேச்சுப் பல்லக்கு, தம்பி கால்நடை என்று கூறுவார்கள்.

நாமும் கூட, திட்டமிட்டு விடாமுயற்சி செய்யாத காரணத்தால் வெற்றியடையவில்லை என்பதை எமது அனுபவத்திலே சந்தித்திருக்கின்றோம். இன்னுமொன்று, ஒருமுறை எமது செயற்பாட்டில் வெற்றிஏற்படவில்லை என்றால், அத்துடன் அதிலிருந்து பின்வாங்கிக்கொண்டு விடுகின்றோம். விடாமுயற்சியுடன் தொடர் செயற்பாட்டை முன்னெடுத்தவர்களே இன்று உலகம் வாழ, பல அரிய கண்டுபிடிப்புக்களைத் தந்திருக்கிறார்கள். தலைவர்களாகவும் புகழ் பெற்றிருக்கின்றார்கள். உதாரணத்துக்கு மின் விளக்கைத் தந்த தோமஸ் அல்வா எடிசன், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் முயற்சிக்கும், வெற்றிக்கும் உதாரண புருஷர்கள் என்பதை எடுத்துக் காட்டலாம்.

எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்று கிராமங்களில் பழமொழியாகச் சொல்வார்கள். எம்மில் கற்று உணர்பவர்களும், அனுபவத்தால் உணர்பவர்களும் இருக்கின்றார்கள். எந்தச் செயற்பாட்டையும் பொறுப்புணர்வோடு, கண்ணும் கருத்துமாக ஆர்வமாகச் செய்தால் தோல்வியோ பிழையோ ஏற்பட வாய்ப்பில்லை. அந்தச் செயற்பாடுகள் அனுபவத்தை எமக்குத் தரும் ஒரு செயற்பாட்டின் அனுபவம், ஏனைய செயற்பாட்டைச் சரியாகவும், முறையாகவும், நெறியாகவும் செய்திட முனைப்பைத் தரும்.

வாய்ப்பேச்சில் வீரர்கள், வரலாற்றில், சாதனையாளர்களானதில்லை. காரணம் முயற்சி இல்லாத வெறும் சபைப்பேச்சு காற்றிலே சென்று விடும் . முயலும், ஆமையும் என்ற கதையிலே தன்னைப் பற்றி அதிக தம்பட்டம் அடிக்காது அமைதியாக விடாமுயற்சி செய்த ஆமை போட்டியில் வென்றது என்று படிக்கின்றோம், அதற்காக ஆமைபோன்ற வேகத்தில்தான் எதுவும் வேண்டும் என்று தவறாக எண்ணக்கூடாது. செய்வன திருத்தமுறச் செய்யும்போது, பதற்றமுறத் தேவையில்லை. அதிகம்பேசி எமது ஆற்றலை வீணடிக்காது அளவோடு கதைத்து காரியத்திலே கண்ணாயிருந்தால் சிக்கல் நிறைந்தவையையும் இலகுவாகச் செய்யக் கூடியதாக இருக்கும். ஆயிரம் பேர் கதைத்தும் ஆனது ஒன்றுமில்லை என்பார்கள். வெட்டிப் பேச்சுக்கள் வெள்ளநீர்போல், மழை விட்டதும் ஓடிச்சென்று விடும். எறும்பு, தேனீ, சிலந்திப்பூச்சிகளைஅவதானித்தால் அவைகளிடமிருந்து நிறைய நாம் கற்றுக்கொள்ளலாம். இவை ஓயாமல் உழைத்துகொண்டிருக்கும் பிராணிகள். இந்தப் பிராணிகளைக் கலைத்துத் துரத்தினாலும், அவை வேறொரு இடத்தில் தமது முயற்சிகளைத் தொடர்ந்து கொண்டே இருக்கும். மனி தர்கள் களைப்பு, சோர்வு, சோம்பல் என்று நீண்ட ஓய்வெடுக்கின்றார்கள். மனிதர்கள் போட்டி, பொறாமை, தற்பெருமை இவைகளால் சக மனிதரைத் தோற்கடித்து வெற்றி காண்பதிலே குறியாக இருக்கின்றார்கள். பிராணிகள் மனிதர்களைப் போல வீண் பேச்சுப் பேசிக் காலம் கழிப்பதில்லை.



எமது கிராமங்களில் புதிய முயற்சியொன்றைத் தொடங்கி, ஒருவர் நல்ல பயனைப் பெற்று, அதனாலே நிறைவருமானமும் பெற்றுக் கொள்கின்றார் என்றால், அவரைப்பின்பற்றி அந்த முயற்சியையோ அல்லது அந்தத் தொழிலையோ நாமும் செய்து அவரைப் போல பயனடையலாம். ஆனால், அப்படி மற்றவர்களும் செய்யத்துணிவதைவிட அவருடைய முயற்சியைத் தடுத்து தாம் முன்னுக்கு வரும் வழிகளைச் செய்வதால் எம்மிடையே ஒற்றுமையும் முன்னேற்றமும் தடைப்படுகிறது. போட்டிகள் ஆரோக்கியமானவை, பொறாமைப்படுவது, அடுத்தவர்க்கு ஆப்பு வைப்பது போன்றது. இறுதியில் தானே அதில் விழுவார்.



உலகிலே சிறப்பாகக் கூறப்படும் பின்லாந்துக் கல்வி முறையிலே ஓர் ஆசிரியரை உரு வாக்க ஏழு ஆண்டுகள் செலவிடப்படுகின்றன. இவர்களின் வழிகாட்டலிலே வரும் மாணவர்களிடம் வன்முறையற்ற, முயற்சியுடைய , நாட்டுக்காக உழைக்கும் நன்மனப்பாங்கை வளர்த்துவிட முடிகின்றது. எம் பிரதேசங்களின் நிலையையும் எண்ணிப் பார்ப்போம்: நல்லது சொல்லப்படும்போதும், நல்லதைச் செய்கின்றபோதும் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கை எம்மிடையே வளர்த்துக் கொள்ளவில்லை. அது வளர்க்கப்பட வேண்டும்.

இன்றைய காலத்தில் இளையவர்களும் பெரியவர்களும்கூட அலைபேசியில் வெட்டிப்பேச்சுக்களிலே ஈடுபட்டும், காதுகளிலே போட்ட வண்ணம் பாடல்களைக் கேட்டும், தேவையற்ற அசையும் படக்காட்சிகளைப் பார்த்துக்கொண்டும் காலத்தை வீணடிக்கின்றார்கள். சிந்திக்க இவர்களுக்கு நேரமில்லை, எதையும்செய்வதென்றாலும் சோம்பல், முயற்சி, செய்ய விரும்பவில்லை. வீட்டுப் பணிகளைக்கூடச் செய்யாமல் வியர்க்க வேண்டும் என்பதற்காக, வீதி வலம் வருகின்றார்கள். அலைபேசிகள் செயலிழந்தால் அனேகம் பேருக்குப் பைத்தியம் பிடித்துவிடும். சேமித்துப் பழகிய எம்மவர்கள் பல தேவையற்ற செலவுகளைச் செய்யப் பழகிவிட்டார்கள். தேவைகளைப் பெருக்கி நிம்மதியை அடைவு வைத்ததனால் அமைதி தேடி அலையும் நிலைதான் உருவாகியுள்ளது.


இளைஞர்கள் தமது பெற்றோர்களின் தொழில்துறைகளை முற்றாகக் கைவிட்டு, உழைப்பையும் கைவிட்டு, வெளிநாட்டுப் பண உதவிகளினால் சொந்த முயற்சியின்றி வெட்டிப்பேச்சுடன் காலம் கழித்து வருகின்றனர். முயற்சியில்லாச் சமூகமாக வருங்கால இளைஞர்கள் மாறிக் கொண்டு வருகிறார்கள். கற்று உயர்ந்தவர்கள் பதவிகள் பெற, அங்கும் இல்லாமல் இங்குமில்லாமல் அவலப்படு வது ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்காது. பெற்றோரும் மற்றோரும் இவர்களை வழிப்படுத்தல் மட்டுமே பயனுள்ள எதிர்காலம் உருவாகும்.

> "எமது வாழ்வின் எந்த செயற்பாடாக இருந்தாலும், எண்ணத்துடன் கூடிய திட்டமிட்ட விடா முயற்சியுடைய செயற்பாடாக அமையும் போது எமது வெற்றியை எவராலும் தடுக்கமுடியாது. சிலர் இப்படிச்செய்ய வேண்டும், அப்படிச்செய்ய வேண்டும் என்று வாய் வெட்டிப் பேச்சுக்காரராக இருப்பார்கள். இறுதியில் அவர்களின் செயற்பாடுகளில் தோல்வியே மிஞ்சி நிற்கும். இவர்களை பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்று கூறுவார்கள்."

*கட்டுரையாளர்:*
*ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# வரலாற்றில் இன்றைய தினம்

1802 - நியூயோர்க் மேற்கு முனையில் அமெரிக்காவின் இராணுவக் கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டது.

1827 - நியூயோர்க் மாநிலத்தில் அடிமைத்தனம் இல்லாமற் செய்யப்பட்டது.

1886 - பிரான்ஸ் மக்களால் அமெரிக்க மக்களுக்கு சுதந்திரச் சிலை வழங்கப்பட்டது.

1903 - பிலிப்பைன்ஸ் - அமெரிக்கப் போர் உத்தியோக பூர்வமாக முடிவுக்கு வந்தது.

1910 - ஆபிரிக்க அமெரிக்க குத்துச் சண்டை வீரர் ஜாக் ஜோன்சன் வெள்ளையரான அதிபார குத்துச் சண்டை வீரர் ஜிம் ஜெபரீஸை அதிபார குத்துச் சண்டைப் போட்டியில் வீழ்த்தியதையடுத்து அமெரிக்காவில் இன வன்முறை வெடித்தது.

1911 - அமெரிக்க வடகிழக்குப் பகுதியை வெப்ப அலை தாக்கியதில் 380 பேர் 11 நாள்களில் உயிர் இழந்ததுடன் பல நகரங்களிலும் வெப்ப நிலையில் உயர்ச்சி பதிவாகியது.

1927 - லொக்ஹீட் வெகா விமானத்தின் முதலாவது பறப்பு மேற்கொள்ளப்பட்டது.

1934 - அணுகுண்டின் சங்கிலித்தொடர் விளைவு வடிவமைப்பின் காப்புரிமத்தை லியோ ஷிலார்ட் பதிவு செய்தார்.

1941 - போலந்து விஞ்ஞானிகளையும் எழுத்தாளர்களையும் நாஸி துருப்பினர் உக்ரைன் நாட்டின் லிவிங் நகரில் படுகொலை செய்தனர்.

1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியர் நிலை கொண்ட லித்வியா, றிகா நகரிலிருந்த 300 யூதர்கள் அவர்களது தங்குமிடத்தில் பூட்டிவைத்து எரியூட்டப்பட்டனர்.

1943 - இரண்டாம் உலகப் போர்: குர்ஸ்க் போர் வரலாற்றில் பெரியளவிலானதும் அதிகளவில் தாங்கிகள் பங்குகொண்டதுமான போர் புறோக்கொறோங்கா கிராமத்தில் தொடங்கியது.

1946 - 381 ஆண்டுகால பல்வேறு நாடுகளின் காலனித்துவ ஆட்சியிலிருந்த பிலிப்பைன்ஸ் அமெரிக்காவிடமிருந்து சுதந்திரம் பெற்றது.

1966 - அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் பி.ஜோன்சனால் தகவலறியும் சட்ட மூலத்துக்கு ஒப்பமிடப்பட்டது. அடுத்த ஆண்டிலிருந்து இது நடைமுறைக்கு வந்தது.

1982 - லெபனானில் 4 ஈரானிய ராஜதந்திரிகள் லெபனான் இராணுவத்தினரால் கடத்தப்பட்டனர்.

1986 - ஜனாதிபதி ஜே.ஆர். டிக்ஸிற் சந்திப்பு.

1997 - நாசாவின் பாத்பைண்டர் விண்ஓடம் செவ்வாயில் தரையிறங்கியது.

2002 - ஈழத் தமிழர் சரித்திரம் குறித்த அணுகுமுறை மாறவேண்டும் என வரலாற்றுப் பேராசிரியர் சி.பத்மநாதன் தெரிவிப்பு.

# அணு விஞ்ஞானி அப்துல் கலாம்



*(கடந்த செவ்வாய் வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

அணு விஞ்ஞானி அப்துல் கலாம் ,இந்தியாவில் தயாரிக்கப்பட்ட உள்நாட்டுப் பொருள்களைக் கொண்டு சிறந்த விஞ்ஞானிகள் பலரையும் பக்க பலமாகக் கொண்டு, தயாரிக்கப்பட்ட ஏவுகணைகளை வடிவமைத்து வெற்றி பல கண்டவர். வெற்றிச் சிகரத்தை எட்டிப் பிடிப்பதற்குள் அவர் பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் வெளிநாட்டிலிருந்தும் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்து சாதனைகள் பலவற்றை இந்தியாவுக்கு அர்ப்பணித்தவர். ஐந்து பெரும் ஏவுகணைகளைத் தயாரித்து தேசத்தின் பெருமையையும் விஞ்ஞானத்தின் அபார வளர்ச்சியையும் உலக நாடுகளுக்குப் பறை சாற்றினார். முயற்சி திருவினையாக்கும் என்ற சொல்லை மெய்ப்பித்தார்.

இந்திய தேசம் ஒரு கால கட்டத்தில் போதிய ஆயுதமின்றி தவித்த காலமுண்டு. அத்தகைய சமயங்களில் இந்தியா அந்நிய நாடுகளையே பெரிதும் நம்பியிருந்தது. அப்போதைய சூழ்நிலைகளில் அந்நிய நாடுகள் இந்தியா மீது தாக்குதல் தொடுத்தால் பழங்காலத் துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் சார்ந்திருக்காமல் நவீன ஏவுகணைகளையும் ராக்கெட்டுகளையும் செலுத்தி மாபெரும் வெற்றியை அடைய முடியும் என்ற நம்பிக்கைய இந்த நாட்டுக்கு ஊட்டியவர் கலாம்.

மேலும் மக்கள் தொகையில் இரண்டாவது பெரிய நாடு பாரதத் திருநாடு. விஞ்ஞான வளர்ச்சியிலும் நாட்டின் பாதுகாப்புத்துறையிலும் அதிக கவனம் செலுத்தி, மேலை நாடுகளுக்கு ஈடாக இந்திய நாடு பெரிதும் வளர துணை புரிந்தவர் டாக்டர் கலாம் என்பது வரலாற்று உண்மையாகும்.

ஒரு மனிதனை அவனுடைய நடை, உடை பாவனைகளிலிருந்து துல்லியமாக எடை போட்டுவிடலாம் என்று முன்னோர்கள் கூறுவர். அதுபோலவே விஞ்ஞானி கலாம் தோற்றத்தில் எளிமையாகவே காணப்படுவார். பதவிக்குரிய படாடோபம் எதுவுமின்றிக் காண்போர் மதிக்கத்தக்க தோற்றத்துடன் பிறரை மதிக்கத் தகுந்த பண்பாளராகவும் இருந்து வந்தார்.

*(அடுத்த செவ்வாய் தொடரும்)*

# அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு!

■ தெல்லியூர்த்தேவி

ஓர் ஊரில் பெரிய செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் பகவான் சிங். அவருக்கு மூன்று மகன்மார் இருந்தார்கள். மூத்தவன் பெயர் கண்ணன், இரண்டாமவன் பெயர் விண்ணன், மூன்றாமவன் பெயர் கலியுகன்.

தந்தையாருக்கு வயதாகி விட்டதால் தனது பொறுப்புக்களை பிள்ளைகள் மூவரிடமும் ஒப்படைத்தார். கண்ணன் நிலங்களைப் பொறுப்பாகப் பார்த்துக் கொண்டான், விண்ணன் கணக்குகளையும், கலியுகன் விற்பனையையும் கவனித்துக் கொண்டனர். மூவருமே தங்கள் பொறுப்புக்களை சரியாகப் பார்த்துக் கொண்டதால் தந்தை மிகவும் மகிழ்ச்சியுடன் வயோதிப காலத்தில் வாழ்ந்து வந்தார். இவர்கள் தனக்குப் பின்னரும் இன்று போல ஒற்றுமையுடன் செயற்பட்டு, தனது குடும்பக் கௌரவத்தை நிலை நாட்டுவர் என்று நினைத்து பெருமிதம் கொண்டார். காலங்கள் ஓடின. தந்தையார் நோய்வாய்ப் பட்டு படுக்கையில் வீழ்ந்தார். எவ்வளவோ சிகிச்சை அளித்தும் பயன் கிட்டவில்லை. தான் இனிப் பிழைக்க மாட்டேன் என்பதை உணர்ந்து கொண்ட தந்தை, தனது மரணத் தறுவாயில் மூன்று மகன்மாரையும் அழைத்தார். அவர்களைப் பார்த்து எனதருமைப் புதல்வர்களே! இனி நான் பிழைக்க மாட்டேன். எனக்குப் பின்பும் நீங்கள் மூவரும் இதே பொறுப்புணர்வுடனும், சகோதர ஒற்றுமையுடனும் வாழ்ந்து எங்கள் குலப் பெருமையை நிலைநாட்ட வேண்டுமென்றும், சகோதரர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒற்றுமையாக வாழவேண்டும் என்றும் கூறினார். பின்னர் எங்கள் வீட்டுத் தோட்டத்தில் உங்கள் மூன்று பேருக்காகவும் மூன்று பானைகள் நிறைய தங்கத்தை நிரப்பிப் புதைத்து வைத்துள்ளேன். எனக்குப் பின்பு ஆளுக்கொரு தங்கப் புதையற் பானையை எடுத்து வளமுடனும் சகோதர ஒற்றுமையுடனும் வாழுங்கள் என்று வாழ்த்தி தோட்டத்தில் தங்கப்பானைகள் உள்ள இடத்தையும் கூறி இறந்து விட்டார்.

அதன் பிறகு தான் "யார் எந்தப் பானையை எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று தந்தையார் சொல்லவில்லையே என்ற யோசனை தொட்டது. தந்தை நினைத்தது போல மூவருக்கும் இடையில் ஒற்றுமை நிலவவில்லை. சில காலமாகவே அவர்களுக்குள் சிறுசிறு மனஸ்தாபங்கள் இருந்து வந்தாலும் தந்தை முன் அவர்கள் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

தந்தை இறந்த பின்பு தங்கப் பானைகள் விடயத்தில் அவர்களது உட்பூசல் மேலும் விரிவடைந்தது.தங்கம் உள்ள பானைகள் சிறிதும் பெரிதுமாக இருந்து விட்டால் பெரிய பானை யாருக்கு? சிறிய பானை யாருக்கு? என்ற உட்பூசல் மேலும் விரிவடைய நான்கு பேருக்கு தெரியுமளவுக்கு வெளிப்படையாகியது.

சகோதரர்கள் மூவரும் பெரிய பானை தத்தமக்கே என ஒவ்வொரு காரணங்களைக் கூறி வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு இறுதியில் கைகலப்பு ஏற்பட்டு ஆளுக்கொரு கம்பு எடுத்து ஆக்ரோசத்துடன் ஒருவரோடொருவர் மோதிக் கொண்டனர். எவரும் இடையில் சென்று விலக்க முடியாத அளவுக்கு சண்டை முற்றியது.

அப்பொழுது தங்கள் அருகே தந்தையின் ஆருயிர் நண்பரான சிவானந் கவலை தோய்ந்த முகத்துடன் இருப்பதைக் கண்டனர். "படிப்பும், உலக அனுபவமும் திறமையும் அதிகம் உள்ள உங்களுக்கு ஏன் புத்தி இவ்வளவு கீழ்த்தனமாகி விட்டது? உங்கள் தந்தை உங்கள் மூவரையும் வெவ்வேறு காலங்களில் தான் பெற்றெடுத்தாரே தவிர உங்கள் மூவரையும் எதுவித ஏற்றத்தாழ்வுமின்றி ஒரேமாதிரித் தானே வளர்த்தெடுத்தார். நீங்கள் மூத்தவ னாக, இளையவனாக இருந்தாலும் அவரைப் பொறுத்த வரையில் மூவரும் அவருக்குப் பிள்ளைகள் என்பதைக் கடைசி வரை காப்பாற்றி வளர்த்தவர்.

இங்ஙனம் எதுவித ஏற்றத் தாழ்வுமின்றி சமனாக வளர்த்த தந்தை இந்தத் தங்கப் பானை விடயத்தில் பெரியது சிறியது என்று பாரபட்சமாக வைத்திருப்பாரா? என்று ஏன் உங்களுக்குச் சிந்திக்கத் தோன்றவில்லை. உங்களை அவர் புரிந்து



கொண்ட அளவில் கால்வாசி கூட நீங்கள் அவரைப் புரிந்து கொள்ளவில்லையே.

மூவரையும் சரிசமமாக வளர்த்தும், சகோதரர்களுக்குள் இந்தச் சண்டை தேவைதானா இப்பொழுது. உங்களைப் பார்த்து ஊரே சிரிக்கின்றதே" என வருத்தத்துடன் கூறினார் சிவானந்.

அப்பொழுதுதான் சிவானந் கூறிய வார்த்தைகளில் இருந்த உண்மையும் நியாயமும் அவர்களுக்குப் புரிந்தது. சிவானந் உடனே தனது முன்னிலையில் தங்கப் புதையலைத் தோண்டி எடுக்கச் சொன்னார். தோண்டி எடுக்கப்பட்ட பானைகள் மூன்றுமே ஒரே அளவானவை என்பதுடன் அவை மூன்றும் நிரம்பியே காணப்பட்டன. சிவான்ந் அர்த்தபுஷ்டியுடன் அந்த மூன்று சகோதரர் களையும் பார்க்க அவர்கள் வெட்கித் தலைகுனிந்து நின்றனர். அன்புச்சிறார்களே! எனதருமைச் செல்வங்களே! வருங்காலத் தலைவர்களே! மேதைகளே! ஒற்றுமையான சகோதரர்களாக வாழக்கற்றுக் கொள்ளுங்கள்.விட்டுக் கொடுத்து வாழப் பழகிக் கொள்ளுங்கள். ஊரே உங்களைப் பார்த்துப் பெருமைப்படும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தர்ப்பங்களைச் சரி செய்யுங்கள்..! தமிழ் மக்களுக்கு நன்மை செய்யும் நல்லெண்ணம் பெறுங்கள்..!

இலங்கைத்தீவிலே நல்லாட்சியின் ஓராண்டுத் திருவிழா முடிவடைந்து காலங்கள் உருண்டோடி இரண்டாவது ஆண்டின் திருவிழாக்காலம் இடம்பெற்று வருகிறது. ஆரம்பநிலையில் இருந்து வந்த அலங்காரங்கள் அப்படியே இந்த ஆண்டும் ஒப்பனை செய்கின்றன. நல்லிணக்கம், சமத்துவம், இனப்பிரச்சினைத் தீர்வு என்பதான அழகான சாத்துப்படிகள் கண்களைக் கவர்கின்றன. ஓராண்டுத் திருவிழாவின் ஆரம்பத்தில் விசேட உபயமாக வருகை தந்த பன்னாட்டவர்கள் அரசுக்குத் தீபங்காட்டி வார்த்தைகளில் நற்தூபமிட்டு அனுசரணை வழங்கினர். அவர்களுக்குச் சாதகமாய் சொற்பொழிவுகளை நற்சிந்தனையின் பெயரில் ஆற்றிச் சென்றனர். கடைகளை விரித்து தங்களின் நலன் சார்ந்த இராஜதந்திர வியாபாரத்தை இலாபமீட்டலாகச் செய்து முடித்தனர். தங்கள் இடம் நோக்கிப் பறந்தனர்.

தற்போது இரண்டாவது ஆண்டின் திருவிழா கோலாகலமாக இடம்பெறுகிறது. எதிர்பார்த்தது போன்று எந்தவிதமான சுவாரஸ்யங்களும் இடம்பெறவில்லை. இவைதவிர வழக்கமான இராஜதந்திர வியாபாரங்களும் இலாபமீட்டல்களும் சிறப்பாகவே இடம்பெற்றுள்ளன. இந்த நிலையிலே இந்தத் திருவிழாவின் பிரதான உபயகாரர்களான, கதாநாயகர்களான நல்லாட்சி அரச தரப்பினர் குழப்பம் விளைவிக்கத் தொடங்கியுள்ளனர். தமிழர்கள் விடாப்பிடியாக நின்றால் உள்ளக விசாரணையும் கிடையாது என்று எச்சரித்திருக்கின்றனர். குறிப்பாக விசாரணைப் பொறிமுறையினுள் பன்னாட்டு நீதிபதிகளின் பிரசன்னம் இருக்க வேண்டும் எனத் தமிழர் பிரதிநிதித்துவங்கள் கோர முடியாது. இவர்கள் உட்பட அனைவரும் யதார்த்தமாகவும் மதிநுட்பமாகவும் செயற்பட வேண்டும் எனச் சத்தமிட்டுக் கத்தியிருக்கின்றனர்.

உண்மையிலேயே அரச தரப்பாக மேற்போந்த எச்சரிக்கைகளையும் மிரட்டல்களையும் தூர விலக்கி வைத்துவிட்டு நல்வழிப்பட வேண்டும். ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். கடந்த கால அனுபவங்களைப் பட்டறிவாக்கி இரைமீட்டி நற்சிந்தனை பெற வேண்டும். தங்களுள் ஒற்றுமைப்பட்டு தர்க்கங்களைக் களைந்து, கிடைக்கும் சந்தர்ப்பங்களைச் சரி செய்ய முன்வர வேண்டும்...! தமிழ் மக்களுக்கு நன்மை செய்யும் நல்லெண்ணங்களை உள்வாங்கிக் கொள்ள முன்வர வேண்டும். தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு இதுதான் என்பதான அறிவுரைகளை அரசாக புரிந்து கொள்ள தலைப்பட வேண்டும்..!

ராக்ஃபெல்லர் உலகில் புகழ் பெற்ற பெரிய பணக்காரர்களில் ஒருவராக விளங்கினார். விவேகானந்தரைச் சந்திக்க வேண்டும் என்ற சிந்தனையின் மேலீடு ராக்ஃபெல்லருக்கு ஏற்பட்டது. விவேகானந்தரைச் சந்திக்க அவர் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்றார். வீட்டின் கதவுகளை வேலைக்காரன் திறந்தான். வேலைக்காரனைப் பிடித்துத் தள்ளிவிட்ட ராக்ஃபெல்லர் முன்அனுமதிகூடப் பெறாமல் விவேகானந்தர் இருந்த அறைக்குள் நுழைந்தார். விவேகானந்தர் அந்த சமயம் நிலத்தில் அமர்ந்திருந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். வந்திருப்பது யார் என்பதைக் கூட அவதானிக்கவில்லை. சிறிது நேரம் செல்ல அதே நிலையில் இருந்தவாறே ராக்ஃபெல்லர் மட்டுமே அறிந்திருந்த அவருடைய கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

இறுதியாக உங்களிடம் இருக்கும் பணம் உண்மையில் உங்களுடையது அல்ல. உலகுக்கு நன்மை செய்வதற்காகவே இறைவன் அந்தப் பணத்தை உங்களிடம் கொடுத்து வைத்திருக்கின்றார்.

உலகுக்கு நன்மை செய்வதற்கான நல்லதொரு வாய்ப்பை இறைவன் உங்களுக்குக்கெனக் கொடுத்திருக்கிறார். அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்..! எனவே நீங்கள் உங்களிடம் இருக்கும் பணத்தை உலக நன்மைக்காகச் செலவு செய்யுங்கள் என்று கூறினார். விவேகானந்தர் இப்படி அறிவுரை கூறியது ராக்ஃபெல்லருக்குப் பிடிக்கவில்லை. நான் என்ன செய்ய வேண்டும் என்பதை இன்னொருவர் எனக்குச் சொல்வதா..? என்று கோபமுற்றவர் தான் புறப்படுவதாகக் கூடச்சொல்லாமல் வேகமாக திரும்பி அறையைவிட்டு வெளியேறினார்.

ஆனால் விவேகானந்தரின் ஆன்மிகசக்தி உண்மையில் வேலை செய்தது. ஒரு வாரம் கழிந்திருக்கும். ராக்ஃபெல்லர், பொதுத்தொண்டு நிறுவனம் ஒன்றுக்குப் பெரிய ஒரு தொகையை நன்கொடை அளிக்க வேண்டும் என்று முடிவுக்கு வந்திருந்ததார்.

விவேகானந்தரிடம் மீண்டும் சென்ற ராக்ஃபெல்லர் தான் செய்ய விருக்கும் நன்கொடை தொடர்பான விப ரம் அடங்கிய காகிதத்தை அவர் முன்பு வேகமாக வீசினார். 'இதோ..! இதைப் படித்துப் பாருங்கள்..! இப்போது உங்களுக்குத் திருப்திதானே..! நீங்கள் இப்போது எனக்கு நன்றி சொல்ல வேண்டும்' என்று கூறினார்.

விவேகானந்தர் அமைதியாக காகிதத்தில் எழுதியிருந்த அனைத்தையும் படித்து முடித்தார். பின்னர் நான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் தான் எனக்கு நன்றி சொல்ல வேண்டும் என்றார் விவேகானந்தர்.




தனது அறியாமையை உணர்ந்து கொண்டார் ராக்ஃபெல்லர். உண்மைகளையும் புரிந்து கொண்டார். நல்வழிப்பட்டார். சிந்தனைகளில் மாற்றங் கண்டு கொண்டு விவேகானந்தரின் அறிவுரைகளை ஏற்றுக் கொண்டார்.



# திருமுறைத் தொகுப்பு

இ. சாமந்தி

சைவ சமயத்தவரது பெருஞ் சொத்தாக விளங்குவது திருமுறைகளாகும். திருமுறைகளைத் திரு+முறை எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். திரு என்பது அழகு, மேன்மை, செல்வம், தெய்வீகம் என்றும் முறை என்பது ஒழுக்கம், ஒழுங்கு, வரிசை, உறவு, தரம் என்றும் பொருள் தரும். அதாவது தெய்வீக உணர்வையும் சமய ஒழுக்கத்தையும்பேணும் நோக்குடன் தொகுக்கப்பட்ட நூல்களின் தொகுதியே திரு முறைகளாகும். தமிழ்மறை, தமிழ் வேதம் என்றும் திருமுறைகளைப் போற்றிக் கூறுவர்.

திருமுறைகள் தில்லைச் சிதம்பரத்தில் கண்டெடுக்கப்பட்டன. இதனாலேயே தேவாரம் பாடமுன்பும் பாடியபின்பும் திருச்சிற்றம்பலம் கூறுகின்றோம். இராஜராஜ் சோழன் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு திருமுறைகளைத் தொகுப்பித்தார். நம்பியினால் தொகுக்கப்பட்ட பன்னிரு திருமுறைகளையே நாம் இன்று பயின்று வருகின்றோம். அந்தவகையில் திருமுறைகளின் தொகுப்பைப் பற்றிக் கூற விழைகின்றேன்.

முதல் மூன்று திருமுறைகளும் சம்பந்தருக்குரியவை. நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறை நாவுக்கரசருக்குரியவை. ஏழாம் திருமுறை சுந்தரரின் பாடல்களை உள்ளடக்கியவை. இந்த ஏழு திருமுறைகளும் பொதுவாகத் திருமுறைகள் என்று அழைக்கப்படுகின்றன. ஏனெனில் தேவாரமுதலிகள் மூவரின் பாடலை உள்ளடக்கியமையால் அவ்வாறு சிறப்புப் பெறுகிறது. எட்டாம் திருமுறையான திருவாசகம், திருக்கோவையார் மாணிக்கவாசகரால் பாடப்பட்டவை. திருவாசகம் தேன் எனப்படும். திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது முதுமொழி. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறைக்குள் அடங்குகின்றன. திருமாளிகைத் தேவர் தொடக்கம் சேதிராயர் வரையான ஒன்பது நாயன்மார்கள் இதனை அருளியுள்ளனர். இதில் திருப்பல்லாண்டு சிறப்புக்குரியது. ஏனெனில் இது கடவுளை வாழ்த்திப் பாடப்பட்ட பாடல் ஆகும்.

**திருமுறைகளை வீட்டிலும், பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் ஓதுவது சிறப்பானதாகும். திருமுறைப் பதிகங்களை நன்கு பண்ணோடு பிழையறப் பாராயணம் செய்து தினமும் இறை சந்நிதானத்தில் ஓதி வருவோமாயின் எமது பாரங்கள் அனைத்தும் அகலும்.**

அடுத்து திருமந்திரம் திருமூலராலேயே இயற்றப்பட்டு பத்தாம் திருமுறைக்குள் அடங்குகின்றது. திருமந்திரத்திலே கூறப்படும் கருத்துக்கள் அனைத்தும் மானிடர்க்கு மருந்தாக விளங்குபவை. 11 ஆம் திருமுறை 40 பிரபந்தங்களை உள்ளடக்கியது. திருவாலவாயுடையார் தொடக்கம் நம்பியாண்டார் நம்பி வரையான பன்னிரு நாயன்மார் இதனை அருளியுள்ளனர். இதில் மொத்தம் 1835 குறள்கள் உள்ளடங்குகின்றன.

திருமுறைகளை வீட்டிலும், பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் ஓதுவது சிறப்பானதாகும். திருமுறைப்பதிகங்களை நன்கு பண்ணோடு பிழையறப் பாராயணம் செய்து தினமும் இறை சந்நிதானத்தில் ஓதி வருவோமாயின் எமது பாரங்கள் அனைத்தும் அகலும். துன்பம் மறையும், இறைசிந்தனையும் கருணையும் ஏற்படும். இறையருள் கூடிக் களிப்பு உண்டாகும். எமது உள்ளார்ந்த ஆத்மாவை தூய்மைப்படுத்துவதற்கு திருமுறைகள் உதவுகின்றன.

**சொற்கோவும் தோணிபுரத்
தோன்றலும் நம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர் தேசிகனும்
முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே ? மாமறை
நூல்தான் எங்கே
எந்தை பிரான் ஐந்தெழுத்தெங்கே**

என்று திருமுறைகளைத்தந்த நாயன்மார்களின் முக்கியத்துவத்தை எடுத்து அனவரத விநாயகம்பிள்ளை சிவானந்த மாலை வெண்பாவில் அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

**மந்திரமாவது நீறு** என்றார் சம்பந்தர்.

தினமும் திருமுறைகளை ஓதிடுவோம். இறைவனின் கமலப்பாதம் பணிந்து இந்துவாக வாழ்வோம்.

கட்டுரையாளர் மாணவி,
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,
தரம்– 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓ! இது தான் family Bike கா?



ரிங்கா ரிங்கா ரோசஸ்...
இடது கையில்
ஒரு தோழனையும்
வலது கையில்
ஒரு தோழியையும்
பிடித்துக் கொண்டு
வட்டமடித்து வேகமாய்
சுற்றிவந்து விளையாடி
மகிழ்ந்த நாள்களையெல்லாம்
நினைத்துப் பார்க்கக்கூட
விடாமல்செய்கிறது
இந்த அவசர வாழ்க்கை

-நிலாரசிகன்.





## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம் :** இஷ்ட தெய்வ அருளால் நன்மை உண்டாகும். கடந்த காலத்தில் அவமதித்து பேசிய வரும் அன்பு பாராட்டுவர். தொழிலில் உருவான மந்தநிலை உருவாகும். ஆரோக் கியம் பலம் பெறும்.

**இடபம் :** ஒருமுகத் தன்மையுடன் பணியாற்று வது அவசியம். தொழில், வியாபாரத்தில் திட்ட மிட்ட இலக்கு நிறைவேற, கால அவகாசம் தேவைப்படும். சேமிப்புப் பணம் அத்தியா வசியச் செலவுக்குப் பயன்படும்.

**மிதுனம் :** பிறர் வியக்கும் விதத்தில் பணிகளை மேற்கொள்வீர்கள். தொழிலில் இலாபம் திருப்தி கரமான அளவில் இருக்கும். உபரி வருமான மும் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம் :** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க, கூடுதல் உழைப்புத் தேவைப்படும். வருமானம் சுமார். பண விடயத்தில் பாதுகாப்பு நடைமுறை பின்பற்றவும்.

**சிங்கம் :** விடாமுயற்சியால் வெற்றி காண் பீர்கள். தொழிலில் தாராள அளவில் வருமா னம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடய மாக வெளியூர் செல்வர். மனைவியின் விருப் பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி :** நண்பரிடம் மனம் விட்டுப் பேசி மகிழ் வீர்கள். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை ஏற் படும். தொழிலில் இலாபம் திருப்திகரமாக இருக் கும். பணியாளர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து வெகுமதி பெறுவீர்கள்.

**துலாம் :** மற்றவர் சொல்லும் குறைகளை பொருட்படுத்த வேண்டாம். கூடுதல் உழைப் பால், தொழில் வியாபாரத்தில் இலாபத்தைத் தக்க வைப்பீர்கள். சொத்து ஆவணம், பிறர் பொறுப்பில் கொடுக்கக் கூடாது.

**விருச்சிகம் :** பணி நிறைவேற கூடுதல் கவன மும், உழைப்பும் அவசியம். தொழிலில் உரு வாகிற இடையூறைச் சரி செய்வீர்கள். மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் பணம், நகை இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**தனுசு :** மனதில் அன்பும், கருணையும் நிலைத் திருக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால், இலாபம் பன்மடங்கு உயரும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மகரம் :** பெருமித உணர்வுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அபரிமிதமான வளர்ச்சி பெறும். பணவரவு அதிகரிக்கும். பெண்கள் புத்தாடை, ஆபரணம் வாங்க அனுகூலம் உண்டு.

**கும்பம் :** வீண் பேச்சில் இருந்து விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செல வுக்காக, கடன் வாங்க நேரிடும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**மீனம் :** குடும்பத்தினரின் ஆதரவு கண்டு மகிழ் வீர்கள். தொழில் வியாபாரத்தில் பொறுப்பு அதி கரிக்கும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

## ஒரே நாளில் வெளியாகும் 2.0, பாகுபலி 2

அதிக முதலீட்டில் தயாரிக்கப்பட்ட படங்களான 'பாகுபலி 2'வும் ரஜினிகாந் நடிக்கும் '2.0' படமும் ஒரே நாளில் வெளியாகவுள்ளன. எஸ்.எஸ்.ராஜமௌலி இயக்கத் தில் பிரபாஸ், ராணா, அனுஷ்கா, தமன்னா நடிக்கும் படம் 'பாகுபலி 2'. அதிக முதலீட்டில் உருவாகும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு தற் போது நடந்து வருகிறது. இந்தப் படம் இந்த ஆண்டு இறுதியில் வெளிவர இருந்தது. படத்தின் இறு திக் காட்சிகளின் படப்பிடிப்பு மற் றும் கிராபிக்ஸ் வேலைகள் இன் னும் இருப்பதால், அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிட முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதேபோல் ஷங்கர் இயக்கத்தில் ரஜினிகாந், அக்ஷயகுமார், எமி ஜாக்சன் நடிக்கும் படம், '2.0'. லைக்கா புரொடக்ஷன்ஸ் தயாரிக் கும் இந்தப் படம் அதிக முதலீட் டில் உருவாகிறது. இந்தப் படமும் அடுத்த வருடம் வெளியாகவுள் ளது. இந்த இரண்டு படங்களும் ஒரே நாளில் வெளியாக இருப்ப தாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

WhatsApp

படித்ததில் பிடித்தது

பரீட்சைக்கும்
விஷப் பரீட்சைக்கும்
என்ன வித்தியாசம்?
என்கிட்டே கேட்காதே... சாதாரண
பரீட்சையே எனக்கு ஒரு விஷப்
பரீட்சைதான்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 9 | 8 | | |
| | 2 | | | | 3 | | 5 | 1 |
| 8 | | | | | | | 9 | 4 |
| | | | 4 | | | | | |
| 1 | 3 | | 9 | | | | | |
| | 9 | 8 | | | 1 | | | 2 |
| | 6 | | | | | 7 | 8 | |
| | 7 | 5 | | | | | | |
| | | | 2 | | | 3 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3x3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றைப் பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 1 | 4 | 7 | 2 | 8 | 9 | 6 |
| 4 | 8 | 7 | 6 | 3 | 9 | 5 | 2 | 1 |
| 6 | 2 | 9 | 1 | 8 | 5 | 7 | 4 | 3 |
| 9 | 7 | 3 | 2 | 6 | 4 | 1 | 5 | 8 |
| 1 | 4 | 5 | 8 | 9 | 3 | 2 | 6 | 7 |
| 2 | 6 | 8 | 5 | 1 | 7 | 9 | 3 | 4 |
| 5 | 9 | 6 | 7 | 4 | 8 | 3 | 1 | 2 |
| 8 | 1 | 2 | 3 | 5 | 6 | 4 | 7 | 9 |
| 7 | 3 | 4 | 9 | 2 | 1 | 6 | 8 | 5 |

## பனித்துளி @mymindvoice

எதற்காகவும் அடி பணியாதொரு,
சமரசம் செய்து கொள்ளாதொரு,
எவரது உதவியும் நாடாதொரு வாழ்வு
வாழ்ந்து விடுவதே அனைவரின் ஆழ்மன
ஆசையாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை

**ஆனி-22**

புதன்கிழமை - 06.07.2016
திதி: துதியை பி.ப.03.38 வரை
நட்சத்திரம்: பூசம் மு.இ.07.40 வரை
ராகுகாலம்: 11.58-01.28 வரை
சுபநேரம்:04.28-05.58 வரை



# ரஸ்க் உருண்டை

### செய்முறை

ரஸ்கின் ஓரத்தில் உள்ள பகுதியை மட்டும் நீக்கி விடவும். ஏலக்காயைப் பொடி செய்து கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் சீனி, தேங்காய்த் துருவல் போட்டுப் பொடி செய்த ஏலக்காயைப் போட்டு கலந்து 10 நிமிடம் வைக்கவும். சட்டியில் நெய் ஊற்றிக் காய்ந்ததும் முந்திரி போட்டு வறுத்து எடுத்துக் கொள்ளவும். அதைக் கலந்து வைத்திருக்கும் தேங்காய்க் கலவையுடன் சேர்த்து கலந்து கொள்ளவும். உடைத்த நடுப்பகுதியை மட்டும் எடுத்து மிக்ஸியில் போட்டுப் பொடி செய்து கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் பொடி செய்த ரஸ்கைப் போட்டு அதனுடன் தேங்காய்க் கலவையைப் போட் டுப் பிசையவும். பின்னர் சிறு சிறு உருண்டைகளாகப் பிடித்து வைக்கவும். சுவையான, எளிமையாகச் செய்யக்கூடிய ரஸ்க் உருண்டையைச் செய்யும் முறை இதுதான்.

### தேவையானவை

ரஸ்க் - 10
சீனி - ஒரு மேசைக்கரண்டி
ஏலக்காய் - 4
முந்திரி - 4
நெய் - 2 தேக்கரண்டி
தேங்காய்த் துருவல் - கால் கப்



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 1000 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 500 | 200 | 600 |
| கணவாய் | 800 | 600 | 500 | 500 | 700 | – | – |
| பாரை | 550 | 500 | 500 | 650 | 600 | 700 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | – | 700 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 500 | 500 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 450 | 600 | – |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 600 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | – | 300 | 300 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 350 | 400 | – | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | – | 300 | 50 | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | – | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | – | 300 | – | 200 |

## சுவையான சமையலுக்கு....

- பாலைக் காய்ச்சுவதற்கு முன்னர், அந்தப் பாத்திரத்தை நன்கு தண்ணீரால் சுத்தம் செய்த பின்னர் காய்ச்சினால், பால் பாத்திரத்தில் அடிப் பிடிப்பதைத் தவிர்க் கலாம்.
- பால் புளிக்காமல் இருப்பதற்கு, ஏலக்காயை பால் காய்ச்சும்போதே அதனுடன் சேர்க்கவும். அவ்வாறு செய்தால் நீண்ட நேரத்துக்குப் பால் புளிக்காமல் இருக்கும்.
- தோல் உரித்த உருளைக் கிழங்குகளைக் கெடாமல் வைப்பதற்கு சில துளிகள் வினிகரைத் தெளித்து குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும்.
- எண்ணெய்க் கறையை அழிப்பதற்கு, எலுமிச்சம் பழத்தை இரண்டு துண்டாக வெட்டி அதை உப்பில் வைக்கவும். பின்னர் அந்தத் துண்டுகளை வைத்துத் தேய்க்கவும்.




## இது புதுசு

அலங்காரத்துக்குப் பயன்படும் துணிகள் அறிமுகமாகியுள்ளன. திருமணம், ஏனைய வைபவங்கள், மண்டப அலங்காரம், வாகன அலங்காரம் எனப் பிரத்தியேகமான துணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. பல வர்ணங்களில், கண்கவர் அலங்காரத்துடன் இவை காட்சியளிக்கின்றன. இவற்றின் விலை, 1 மீற்றர் துணி 400 ரூபா தொடக்கம் 600 ரூபா வரை ஆகும்.

### அலங்காரத் துணிகள்



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | – | 80 | 160 | 80 | 120 | – | 60 |
| கத்தரி | 80 | 80 | 80–120 | 100 | 90 | 120 | – | 60 |
| கரட் | 250 | 240 | 280 | 240 | 220 | 240 | – | 210 |
| மரவள்ளி | 100 | 200 | 80 | 100 | 80 | 100 | – | 50 |
| பயிற்றை | 90 | 80 | 100 | 100 | 100 | 100 | – | 80 |
| பாகல் | 200 | 180 | 320 | 240 | 200 | 240 | – | 200 |
| கருணைக்கிழங்கு | 150 | – | 120 | – | 120 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 90 | 100 | 90 | 80 | 90 | – | 90 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 160 | 140 | 160 | – | 100 |
| பூசணி | 70 | 100 | 140 | 140 | 120 | 140 | – | 100 |
| தக்காளி | 200 | 240 | 240 | 260 | 200 | 250 | – | 150 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 140 | 120 | 140 | – | 40 |
| கீரை | 20 | 15 | 20 | 20 | 20 | 20 | – | 15 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 35 | – | 10 |
| பச்சை மிளகாய் | 500 | 600 | 600 | 700 | 600 | 600 | – | 650 |
| புடோல் | 70 | 80 | 80 | 80 | 60 | 100 | – | 60 |
| கோவா | 160 | 140 | 160 | 240 | 140 | 100 | – | 130 |
| வெண்டி | 120 | 100 | 120 | 240 | 100 | 120 | – | 60 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 240 | 200 | 240 | – | 180 |
| லீக்ஸ் | 150 | 160 | 120 | 240 | 160 | 240 | – | 130 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 28–30 | 30 | 28– 30 | – | 22 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 110–120 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 140 | 200 | 150 | 200 | – | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10– 15 | 15 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 100 | 200 | 240 | 340 | 240 | – | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 280 | – | 180 | – | 120 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 300 | 300 | 280 | – | 300 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதி சேவைகளை அதிகரிக்கும் செயலமர்வு




கைத்தொழில் வர்த்தக அமைச்சின் கீழ் "இலங்கைக்கான ஏற்றுமதி சேவைகளை எவ்வாறு அதிகரிப்பது?" என்ற கருப்பொருளிலான செயலமர்வு, வணிகத் திணைக்களத்தினால் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 27 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு செயலமர்வை ஆரம்பித்து வைத்ததுடன், அங்குரார்ப்பண உரையையும் நிகழ்த்தினார்.

இந்தச் செயலமர்வுக்கான ஒத்துழைப்பை பண்டாரநாயக்கா சர்வதேச கற்கைகள் மையம் வழங்கியுள்ளது. இந்த நிகழ்வில் ஜெனிவாவில் இயங்கும் உலக வணிக அமைப்பின் வர்த்தக சேவைகள் பணிப்பாளர் ஹமித் மம்தொஹ் மற்றும் வைத்தியர்கள், விரிவுரையாளர்கள், பொறியியலாளர்கள் உட்பட பல உயர் துறைகளைச் சார்ந்த நிபுணர்கள் பங்கேற்றனர். (த)

## தேயிலை வர்த்தகம் வீழ்ச்சி

இலங்கைக்கு அதிக அளவிலான அந்நியசெலாவணியை ஈட்டித் தந்த தேயிலை ஏற்றுமதி, தற்போது பெரும் வீழ்ச்சியை எதிர்நோக்கியுள்ளதாக வர்த்தகத் தரப்பினர் தெரிவித்தனர்.

கடந்த 1977ஆம் ஆண்டளவில் அந்நியசெலாவணியை ஈட்டித் தரும் முதல் இடத்தில் தேயிலை ஏற்றுமதி இருந்தது. அண்மையில் இடம்பெற்ற கொழும்பு தேயிலை வர்த்தக சங்கத்தின் 122ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தேயிலை ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி தொடர்பான பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. குறிப்பாக கடந்த 2 அல்லது 3 வருடங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி குறித்து தகவல்கள் பரிமாறப்பட்டன. முன்னர் சர்வதேச ரீதியாக தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில், இலங்கை 23 சதவீதமான ஏற்றுமதியைக் கொண்டிருந்தது. எனினும் தற்போது சீனா, இந்தியா, கென்யா போன்ற நாடுகளினால் ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையை விட இலங்கை பின்தங்கியுள்ளது.

கொழும்பு தேயிலைச் சங்கத்தின் வர்த்தகத் தலைவர் அன்செலம் பேரேரா, வீழ்ச்சி தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்:

சர்வதேச ரீதியாக தேயிலைக்கான உரிய பெறுமதி கிடைப்பதில்லை எனத் தெரிவித்தார். எண்ணெய் சந்தையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக பாரசீகக் குடாநாடுகள் தேயிலை இறக்குமதியில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளன. இது தவிர, இலங்கை தேயிலையினை அதிக அளவில் இறக்குமதி செய்யும் ரஷ்யாவும் தற்போது போராட்டத்தில் ஈடுபட்டு வருவதினால் தேயிலையினைக் கொள்முதல் செய்வதில் அதிக கவனம் செலுத்துவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (த)

**வணிகம்**

## சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு

இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையானது அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 20 சதவீத அதிகரிப்பைக் காட்டுவதாக குறிப்பிடப்பட்டது.

இவ்வாறு வருகை தந்தவர்களில் 53.1 சதவீதமானவர்கள் இந்தியா, சீனா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவ்வாறு சுற்றுலாப் பயணிகளின் வருகையின் மூலம் 1195.3 அமெரிக்க டொலர்கள் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அமைச்சு குறிப்பிட்டது. (த)

# இதுவரை பதிவு செய்யப்படாத பயண நிறுவனங்களால் பாதிப்பு

பதிவு செய்யப்படாத பயண ஏற்பாட்டு நிறுவனங்களால் துறைக்கும், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கும் பெருமளவு பாதிப்பை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக முன்னணி பயண ஒழுங்குபடுத்தும் நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


கொழும்பில் மட்டும் சுமார் 350க்கும் அதிகமான பதிவு செய்யப்படாத பயண ஏற்பாட்டு நிறுவனங்கள் காணப்படுவதுடன், சுமார் 145 பதிவு செய்யப்பட்ட பயண ஒழுங்கு நிறுவனங்கள் மட்டுமே காணப்படுகின்றன. இவற்றினால் பயணிகளுக்கும், பயண முகவர்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

பதிவு செய்யப்படாத நிறுவனங்களில் அனுபவமில்லாத ஊழியர்கள் பணியாற்றுவதுடன், அவர்கள் எவ்வித மான வரிகளையும் செலுத்துவதில்லை. இதன் காரணமாக, பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில், அந்நிறுவனங்கள் அதிகளவு இலாபமீட்டுகின்றன. இது பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

மாதந்தம் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுகிறது. விமானப் பயணச் சீட்டுகள் மற்றும் ஹோட்டல் பக்கேஜ்கள் போன்றன சுமார் 2.8 மில்லியன் ரூபாவாக அமைந்துள்ளன. இதில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் ஆகியன அடங்கியுள்ளன. ஆனாலும் இந்தப் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் வரி செலுத்தாமையால் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது எனவும் குறிப்பிட்டார். (த)

CSE COLOMBO STOCK EXCHANGE

| | | | |
|---|---|---|---|
| | | 4/7/2016 | |
| | | www.cse.lk | |
| ASPI | -32.32 | 6,254.77 | 6,287.09 |
| S&P SL20 | -12.18 | 3,290.33 | 3,302.51 |
| வியாபாரப்புரள்வு | | 227,260,461 | 707,206,711 |
| உள்நாடு- கொள்வனவு | | 209,284,992 | 255,260,542 |
| விற்பனை | | 150,548,064 | 126,585,519 |
| வெளிநாடு- கொள்வனவு | | 17,975,380 | 451,946,169 |
| விற்பனை | | 76,712,296 | 580,621,192 |



பங்குச் சந்தை தகவல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஷெவ்றோன் லூப்ரிக்கன் | LLUB.N | 150 | 458,446 | 68,822,124 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 136 | 441,688 | 59,657,892 |
| செலான் வங்கி | SEYB.N | 90 | 157,494 | 14,174,256 |
| ஸ்விஸ்டேக் | PARQ.N | 62 | 131,004 | 8,122,258 |
| ரிச்சர்ட் பீரிஸ் எஸ்போர்ட்ஸ் | REXP.N | 235 | 25,100 | 5,898,800 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.W | 1.7 | 2,090,033 | 5,268,969 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 120.1 | 39,434 | 4,771,813 |
| லங்கா ஐ.ஓ.சி. | LIOC.N | 34.7 | 119,321 | 4,139,132 |
| சம்பத் வங்கி | SAMP.N | 229 | 15,693 | 3,578,477 |
| ரெக்ஸ்பேட் வெர்னீ | TJL.N | 35.5 | 94,150 | 3,342,675 |


அறிவித்தல்கள் -

பங்குலாபம்
லங்கா மில்க் பூட்ஸ் (LMF) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.25
சென்ரல் இன்டஸ்ரீஸ் (CIND) - பங்கு ஒன்றிற்கு Rs. 5.50

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| பரிமாற்றத்தில் | 207 |
| விலை உழைப்பு | 12.9 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விளைவு | 3.1 |

## நுட்பம்

### வியாழன் கிரகத்தின் காந்த புலத்துக்குள் 'ஜூனோ'



நாசா விண்வெளி ஆய்வு நிறுவனம் அனுப்பி வைத்த ஜூனோ விண்கலம் 5 வருடகால பயணத்துக்கு பின் வியாழன் கிரகத்தின் காந்தபுலத்துக்குள் நுழைந்தது. விண்கலம் அந்தக் கிரகத்தின் வட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்படும் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

வியாழன் கிரகத்தைப் பற்றி ஆய்வு செய்வதற்காக நாசா விஞ்ஞானிகள் 'ஜூனோ' எனப்படும் விண்கலத்தை, புளோரிடா மாகாணத்தில் உள்ள கேப் கனாவெரல் விண்வெளி மையத்தில் இருந்து 2011ஆம் ஆண்டு ஒகஸ்ட் 5ஆம் திகதி விண்ணில் செலுத்தியது.

தொடர்ந்து 5 வருடங்களாகப் பயணித்த அது, தற்பொழுது சுமார் 290 கோடி கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து வியாழன் கிரகத்தை நெருங்கியுள்ளது.

அந்தக் கிரகத்தின் காந்தபுலத்துக்குள் ஜூனோ விண்கலம் வெற்றிகரமாக நுழைந்து விட்டதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்தனர். கிரகத்தின் வட்டப்பாதையில் அவ் விண்கலம் நிலை நிறுத்தப்பட்டு, அதன் மேற்பரப்பு மற்றும் உள் பரப்பை ஆராயும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து வியாழன் கிரக ஆய்வாளர் ஸ்காட் பொல்டன் வெளியிட்ட அறிக்கையில், வியாழன் கிரகத்தின் எல்லைப் பகுதியை வெற்றிகரமாகக் கடந்து விட்டோம். அந்தக் கிரகத்துக்குள் விண்கலம் வேகமாக நுழைந்து வருகிறது - என்று குறிப்பிட்டார்.

### முகப்புத்தகத்தில் மாற்றம்




முன்னணி சமூக வலைத்தளமான முகப்புத்தகத்தில் செய்திப் பறிமாற்றத்துக்கு உள்ள நியூஸ் பீட் வசதியில் தற்போது அதிரடி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று பேஸ்புக் நிறுவனம் தெரிவித்தது.

நியூஸ் பீட் வசதியின் ஊடாகச் செய்திகளைப் பதிந்து அதனை நண்பர்கள், உறவினர்களுக்கும் பகிரக் கூடியதாக இருக்கும். இந்த வசதியை அதிகளவில் பல்வேறு வியாபார நிறுவனங்களும் பயன்படுத்தி வருகின்றன. இது அந்த நிறுவனங்களின் செய்திகளையும் பரப்புவதற்குச் சிறந்த வசதியாக உள்ளது.

தற்போது கொண்டுவரப்பட்டுள்ள புதிய மாற்றத்தின்படி நியூஸ் பீட் நண்பர்கள் ஊடாக பகிரப்படும் செய்திகளை அதிகப்படுத்திக் காட்டும் அதேவேளை, நிறுவனங்களின் செய்திகளை குறைத்துக் காட்டும் விதத்தில் அமையவுள்ளது.

இதன் மூலம் நண்பர்கள், உறவினர்களின் பிணைப்பை மேம்படுத்த முடிவதுடன், புதிய பயனர்களையும் பேஸ்புக்கில் உள்வாங்க முடியும் என்று முகப்புத்தக நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 ஆண்டுகளாகின்றன கரும்புலி தாக்குதல் நடந்து

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதலாவது கரும்புலித்தாக்குதல் நடத்தப்பட்டு 30 ஆண்டுகள் ஆகின்றன.

1987ஆம் ஆண்டு 'ஒப்பரேசன் லிபரேசன்' எனப்பெயரிட்ட இராணுவ நடவடிக்கை வடமராட்சியில் நடத்தப்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கைக்காக வடமராட்சி நெல்லியடியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு அவர்களால் அங்கு படைமுகாம் ஒன்றும் அமைக்கப்பட்டது. அந்த இராணுவ நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வல்லிபுரம் வசந்தன் எனும் மில்லர் முதற் கரும்புலியாகத் தாக்குதல் நடத்தினார்.1985 ஜூலை 5ஆம் திகதி இரவு 7.00மணியளவில் மில்லர் வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனத்தை படையினரின் முகாமிற்குள் சென்று வெடித்து முகாமை தரைமட்டமாக்கினார். இந்தத்தாக்குதல் சம்பவத்தில் மில்லர் தன்னுடைய உயிரை ஈகம் செய்தார். இந்தத்தாக்குதலை அடுத்து அங்கு நிலைகொள்வதற்கு அஞ்சிய மீதி இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறினர்.இதனால் 'ஒப்பரேசன் லிபரேசன்' எனும் இராணுவ நடவடிக்கை கைவிடப்பட்டது. மில்லரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கரும்புலித் தாக்குதலின் பின்னர் அவர் உயிர் நீத்த நாளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கரும்புலிகள் நாளாக பிரகடனப்படுத்தியது. இந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளாலும், இலங்கைத் தமிழர்களாலும் சிறப்பாக கடைப்பிடிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புலம்பெயர் நாடுகளில் மட்டுமே இடம்பெற்று வருகின்றது. (உ-5-21)

## கடவுளர்களும்

யாழ். போதனா வைத்தியசாலை உள்ளிட்ட வடக்கு மருத்துவமனைகளிலும் இந்தப் போராட்டம் நடந்தது. இதனால் சிகிச்சைக்காக நோயாளர்கள் அவதிப்பட்டனர்.

'எட்கா' தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் மருத்துவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்தப் பணிப்புறக்கணிப்பு நேற்றுக் காலை 8 மணிக்கு ஆரம்பித்து நண்பகல் 12 மணிவரை நீடித்தது.

வடக்கில் யாழ். போதனா வைத்தியசாலை மட்டுமன்றி மாகாண வைத்தியசாலைகளான -யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் நோயாளர்கள் மருத்துவர்களுடைய வருகைக்காகக் காத்திருந்தனர்.

"நாங்கள் சிகிச்சை பெறுவதற்காக அதிகாலையிலேயே வைத்தியசாலைக்கு வந்து வரிசையில் காந்திருந்தோம். ஆனால், மருத்துவர்கள் 12 மணிக்கு பின்னர்தான் நோயாளர்களை பார்வையிட வருவார்கள், 12 மணிக்குப் பின்னர் வாருங்கள் என்று தாதியர்கள் சொன்னார்கள்" – என்று காத்திருந்த நோயாளர்கள் தெரிவித்தனர்.

"கடவுளும் வைத்தியரும் ஒன்று என்றுதான் கூறுகின்றார்கள். கடவுளிடம் வைத்திருக்கும் நம்பிக்கையிலும் மேலாக இவர்களிடம் (மருத்துவர்களிடம்) நம்பிக்கை வைத்திருக்கிறோம். அதனாலேயே மருத்துவர்கள் இந்தத் திகதிக்கு வாருங்கள் என்று சொல்லி பதிந்துதரும் திகதிகளுக்கு நம்பி வருகின்றோம். பிணியில் இருந்து எங்களை மீட்பார்கள் என்று நம்புகின்றோம். அப்படிப்பட்ட கடவுளர்களே பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டால் மக்களாகிய எங்களது நிலை அதோ கதிதான்"– என்று சிகிச்சைக்காக அமர்ந்திருந்த நோயாளர்கள் தெரிவித்தனர்.

மருத்துவர்கள் போராட்டத்தால் சுமார் 200 கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது. வழமைபோன்று கஷ்டப்பட்டு – ஓட்டோ உள்ளிட்ட வாகனங்களுக்குப் பணம் செலுத்தி அவர்கள் வந்திருந்தனர். நேற்று திங்கட்கிழமை கர்ப்பிணித்தாய்மார்களுக்கான சிகிச்சைக்காக வைத்தியர்களால் திகதி ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது.

ஒரு தாதிக்கும் ஒரு மருத்துவருக்கும் இடையிலான முறுகலால் யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் கடந்த திங்கட்கிழமையும் ஜூன் 27 ஆம் திகதியும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் இதனாலும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்படவில்லை. நேற்றையதினமும் சிகிச்சைகள் வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் மிகவும் பாதிப்படைந்தனர். "அலைந்து திரிய வேண்டிய நிலையாகவே இருக்கிறது. வேறென்ன செய்ய முடியும் எங்களால்?" – என்று வாகனத்தில் வந்திருந்த ஒரு கர்ப்பிணி கேள்வியெழுப்பினார்.

அனைத்து மாவட்டங்களிலும் வெளிநோயாளர் பிரிவுகளுக்கு மாத்திரை பெற்றுக் கொள்வதற்காக வந்த நோயாளர்கள் நீண்ட நேரத்தின் பின்னர் திரும்பிச் சென்றனர். (உ-4-21)

## ஓ.எல்.சவ

இது நம்முடைய துரதிர்ஷ்டம்.

2010ஆம் ஆண்டும் சரி இன்றும் சரி அதே நிலமையே காணப்படுகின்றது. பல விடயங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். எனினும் எதுவும் மாறவில்லை.

இந்த நாட்டில் உள்ள ஒரு பகுதியினர் இலங்கையில் எந்தவொரு உயர்கல்வி நிலையங்களிலும் கற்காமல் தங்களது உறவினர்கள் கற்பிக்கும், ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்ட ஓர் அங்கீகரிக்கப்படாத இடத்தில் சென்று தங்களது உறவினர்களின் உதவியுடன் பரீட்சைக்கு தோற்றி, தங்களுக்குத் தேவையான பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டு, அரசியல்வாதிகளின் பிள்ளைகளுடன் இணைந்து தங்களை வைத்தியர்களாக அங்கீரிக்குமாறு கோருகின்றனர்.

சாதாரண தரத்தில்கூடச் சித்தி பெறாதவர்களை நாடாளுமன்றுக்கு அனுப்பியதோடு அவர்களைச் சுகாதாரம், உயர்கல்வி உள்ளிட்ட அமைச்சர்களாக மாற்றியமையே மக்கள் செய்த மிகப்பெரிய தவறு. அந்த அமைச்சர்கள் என்ன வேண்டுமோ செய்து தங்களது பிள்ளைகளை வைத்தியர்களாக்குகின்றனர். நோயாளர்கள் இனி தாங்கள் சிகிச்சைபெறச் செல்லும் வைத்தியர்களை தகுதியானவர்களா என ஆய்வு செய்யவேண்டிய சூழல் ஏற்படும். உங்கள் உறவினர்கள் அரசியல்வாதி என்பதால் நீங்கள் வைத்தியரானீரா என நோயாளர்கள் கேள்வி எழுப்ப வேண்டிவரும்.

நாட்டு மக்களைக் கொலை செய்வதற்கு நாம் இடமளிக்கப்போவது இல்லை. பொதுமக்களைக் கொலை செய்தாலும் பரவாயில்லையென்று தங்களது பிள்ளைகளை வைத்தியர்களாக்க அரசியல்வாதிகள் முயல்வார்களாயின் அதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இடமளிக்காது – என்றார். (த-5)

## லஞ்ச ஊழல்

பல்வேறு பொருள்கள் கொள்வனவுகளுக்குரிய விவரங்களுடன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கடந்த வாரம், யாழ்.மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளருக்கு இந்த அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டது. (5)


## நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு | 16ஆம் ஆண்டு




இ.பரராஜசிங்கம்
மலர்வு :- 06.10.1927 உதிர்வு :- 16.07.2015
திதி: 05.07.2016 (பிரதமை)

ப.மகேஸ்வரி
மலர்வு :- 10.09.1936 உதிர்வு :- 21.03.2000
திதி: 24.03.2016

கால அலைகள் அள்ளிச்சென்ற
உங்கள் சுவடுகளின் ஈரம் விழிகளில் கசிகிறது
பாசச் சிலிர்ப்பினை நல்கிய
உங்கள் சிறகுகளின் கதகதப்பு இதயத்தில் கனக்கிறது
யுகம் பல கடந்தாலும் நகக் கண்களும்
பார்க்க ஏங்கும் உங்கள் வசீகர வதனத்தை...
நீர்க்குமிழித்தனமான நிமிடங்களில்
நினைவுகள் கரையாத நிழல் தந்த பாச விருட்சங்களே!
உங்கள் ஆசீர் வாதத்தினாலேதான்
ஒவ்வொரு கணமும் அர்த்தப்படுகிறது
ஊழியிலும் அழியாத ஞாபகங்களைச் சுமந்து
எங்கள் குல விளக்குகளை
தெய்வமெனத் துதித்து, தீராத நினைவைப் பதிக்கின்றோம்...
[illegible]

ச.லோகசிவம்,
82/1,செட்டித்தெரு, நல்லூர்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மகிமைக்குள் பிரவேசித்துள்ளார்

### அருணாசலம் சின்னத்துரை

பிறப்பு 08 . 05 . 1928



தேவனின் பாதம் 01 . 07 . 2016

இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சின்னத்துரை (01.07.2016) வெள்ளிக்கிழமை மகிமைக்குள் பிரவேசித்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி ரூத் சின்னத்துரையின் அன்பு கணவரும் வசந்தலீலா, குணசீலன்( N.L.M திருச்சபையின் பிரதான போதகர்), Rev ஜெனி, றஞ்சனலீலா, போதகர் தேவசீலன், கருணசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சச்சிதானந்தம், அருந்ததி, மகாலிங்கம், அனோமா, புஸ்பமாலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை நாளை (06.07.2016) புதன்கிழமை மு.ப 9.30 மணிக்கு இருபாலை கிழக்கு New liveing Flame சபையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(எக்ஸ்பிரஸ் ரியுட்டரி அருகில்)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பரமசிவம்



காரைநகர், ஆயிலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பரமசிவம் நேற்று (04.07.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் கணவரும், தவராணி, தவராசா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - காரைநகர்), நந்தகுமார்,சிவராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகேஸ்வரனின் அன்பு மாமனாரும், துவாகரனின் அன்புப் பேரனும், இராசலட்சுமி, காலஞ்சென்ற உருத்திரர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2016) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(J/2644)
(11,17)


தகவல்: குடும்பத்தினர்.

077 433 9915, 077 343 7418


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### தனபாலசிங்கம் தர்சிகா (சிந்து)



பிறப்பு 01 . 06 . 1990

இறப்பு 04 . 07 . 2016

மண்கும்பான் 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புது வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் தர்சிகா (சிந்து) நேற்று (04.07.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் மகேஸ்வரி காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் செல்லப்பாக்கியம் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் தனபாலசிங்கம் வளர்மதி தம்பதியரின் அன்பு மகளும் சுஜீவன், திவ்வியா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகலிங்கம் - வனஜா, சுந்தரலிங்கம், சிவலிங்கம் - விஜிதா காலஞ்சென்ற ராதா கிருஸ்ணன் ஆகியோரின் பெறாமகளும் தயாபரன் - அருட்செல்வியின் மருமகளும் அபிஷா, விதுஷன், பவிஷன் ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் கஜாலினியின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புது வீதி, கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**



### திருமதி இராஜமணி நாகராஜா

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜமணி நாகராஜா நேற்று (04.07.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-நீலாம்பிகை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன், புண்ணியசீலன், அமிர்தாம்பிகை, கமலாம்பிகை, காலஞ்சென்ற ராதா ரஞ்சிதம், சுந்தராம்பிகை ஆகியோரின் சகோதரியும், தயானந்தன் (கனடா), கமலராணி (கொழும்பு), அருளாம்பிகை (நெதர்லாந்து), பரமானந்தன் (கனடா), மோகனாம்பிகை (கனடா), பத்மராணி (நந்தினி-யாழ்ப்பாணம்), மனோகரன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும், தயாரட்ணம், ஸ்ரீரஞ்சனி, வாசுகி குணராசா, காலஞ்சென்ற சிவபாதசுந்தரம், நாகேஸ்வரன், ஆஷா ஆகியோரின் அன்பு மாமியும், நவீனா, ஜெகதா, பைரவி, பிரவீன், ஆரவி, ஜெயகாந், அருண்காந், அருண்ராஜ், தனுஷன், திவ்யா லாவண்யா, தர்ஷிகா, அபிஷன், மிதுன்இ சோபிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அட்ஷராவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.07.2016) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**17/1, சபாபதி லேன்,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில் .**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**நந்தினி - 0774698172,**
**மனோ (பாபு) - 0757963154**



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது பாடசாலை அதிபர்
**திரு.பிரான்சிஸ் தோமஸ் எடிசன்**
(BA,PGDE,B.Ed, Spl.Trd Christianity)
அவர்கள் இலங்கை அதிபர் சேவை
வகுப்பு - III இற்கு
பதவி உயர்வு பெற்றதைப் பாராட்டுவதுடன்
அவர் மேலும் உயர் பதவிகள் பெற்று
உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிசங்கம்,
யா/மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை.

அமைச்சர்களை (முதலாம் பக்கத் தொடர்ச்சி)திரிபால சிறிசேன வேடிக்கையாக அடைத்துவைத்தார். ஒவ்வொருவரையும் ஜனாதிபதி கூண்டுக்குள் தள்ளியபோதும், அமைச்சர் சுஜீவ சேனசிங்க மட்டும் நழுவிக் கொண்டார். (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி துளசிமலர் இரவீந்திரன்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், பலாலிவீதி, 3ஆம் ஒழுங்கை, உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி துளசிமலர் இரவீந்திரன் நேற்று (04.07.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இரவீந்திரனின் (பாடசாலை வான் சேவை) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராச ரத்தினம் - நாகரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும், ஹனீஸ்குமார் (மேற் பார்வையாளர் - Ruhlins pvt Ltd ), கேதீஸ்குமார் ( மேற் பார்வையாளர் - Sierra telecom Ltd ) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஷர்மிலாவின் அன்பு மாமியாரும், திருமதி விஜயலக்சுமி - துரைராசசிங்கத்தின் அன்புச் சகோதரியும், சற்குணநாதன் - சுமித்திரா, திகழ்மதி - சற்குணநாதன், குணசிங்கம் - சிவனேஸ்வரி, அகிலன் - தயாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாதுலன் - நீலா, சாந்தீபா - ராம்குமார், சாமரன் - ஹம்சிகா, குகாயினி, இரட்சகன் ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும், கௌசல்யா - சுதர்சன், கஜீபன் - வினோதா, பிருந்தா - தனேஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், றொசாந்தன், அனோஜன், அருள் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், சுவரன், ரதீரன், சந்தோஷ், சைலேஷ், சானுஜா, அனன்யா, கவின்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பலாலி வீதி, 3ஆம் ஒழுங்கை,**
**உரும்பிராய் மேற்கு.**

(J/2649)
(11,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 223 1210, 077 651 0128, 077 139 5328**

## மரண அறிவித்தல்

# செல்லையா யோகராசா

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்)



சாவகச்சேரி கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு ஞானவைரவர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா யோகராசா (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்) நேற்று (04.07.2016) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், சுப்பையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அம்பிகாதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், ஆதித்தனின் (Ceybomk Regional Centre, Jaffna) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் துரைராசா (கனடா), பாக்கியலீலா (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சித்திராதேவி, காலஞ்சென்ற நவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவபாதம் (Rtd Regional Manager People's Bank), காலஞ் சென்றவர்களான நவரட்ணம், சின்னத்துரை மற்றும் சிவகுமார் (சுவிஸ்), இராமச்சந்திரன் (ஜேர்மனி), முபின், முருகரத்தினம் (ஜேர்மனி), சற்குணசிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, சந்திரமணி, சறோ ஜாதேவி மற்றும் சிவகாமி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சிவனேஸ்வரி (ஜேர்மனி), மல்லிகாதேவி (ஜேர்மனி), கமலாதேவி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.07.2016) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 115 6594, 071 066 2060**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாரணைகளை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரணகம ஆணைக்குழுவின் பதவிக் காலம் எதிர்வரும் 15ஆம் திகதி நிறைவடையவுள்ளது. எனினும், பணிகள் முழுமையடையாத காரணத்தால் கால அவகாசம் கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளுள் சுமார் 8 ஆயிரம் வரையிலான முறைப்பாடுகள் குறித்து இன்னும் விசாரணைகளை ஆரம்பிக்கவேயில்லை. பல முறைப்பாடுகள் தொடர்பில் இரு தரப்பு வாக்குமூலப் பதிவும் இடம்பெறவில்லை. ஒரு தரப்பினர் மாத்திரமே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய தரப்பின் கருத்துக் கோரப்படவில்லை. இந்த நிலையில் இறுதி அறிக்கையைக் கையளித்தால் அது பக்கச்சார்புடையதாக இருக்கும். உரிய விவரங்களை உள்ளடக்க முடியாது என்பதாலேயே மேலும் அவகாசம் கோரப்படுகின்றது" என்று ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5)

## இராணுவம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது சட்டத்துக்கு மாறானதல்ல" என்றார் அவர்.

இறுதிப் போரில் கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன என்று அண்மையில் கார்டியன் பத்திரிகை ஆதாரங்களுடன் செய்தி வெளியிட்டது. அதைத் தொடர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன், கொத்துக் குண்டின் பயன்பாடு குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். இலங்கை தொடர்பான வாய் மூல அறிக்கையை ஜெனிவாவில் வெளிப்படுத்திய போது அவர் இதனை வலியுறுத்தினார்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வு நடந்துகொண்டிருக்கும் போது இந்த விடயம் அளவுக்கு அதிகமாக பிரபலப்படுத்தப்பட்டது என்று பரணகம தெரிவித்தார்.

எனினும் போரில் கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன என்ற குற்றச்சாட்டை இலங்கை இராணுவம் மறுத்திருந்தது. போர் முடிந்து 7 ஆண்டுகள் கடந்து இப்போது ஏன் இந்தப் பிரச்சினை கிளப்பப்படுகிறது? இதற்கு என்ன நம்பத்தகுந்த ஆதாரம்? என்று பாதுகாப்புச் செயலர் கேள்வி எழுப்பியிருந்தார். (உ-5)

## மத்திய வங்கி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நியமனம் பெற்றார்.

"இந்த நியமனத்தின் மூலம் தேசிய பொருளாதாரத்துக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவாகச் செயற்பட்டு அமெரிக்காவில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ராஜ் ராஜரத்தினத்துக்குச் சொந்தமான நிறுவனத்தில் இந்திரஜித் குமாரசுவாமி ஆலோசகராகப் பணி புரிந்தவர். அவரை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டதைக் கண்டிக்கின்றேன்" என்று விமல் வீரவன்ச தெரிவித்தார்.

"பிரிவினைவாதிகளுடன் இணைந்து செயற்பட்ட ஒரு நபரிடம் தேசிய பொருளாதாரத்தின் கேந்திரஸ்தானமாகக் கருதப்படும் மத்திய வங்கியைக் கையளிப்பதை அனுமதிக்க முடியாது. இதன்மூலம்தேசியபொருளாதாரத்துக்கு மட்டுமல்ல, தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படும்.

இந்திரஜித் குமாரசுவாமி இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே மேற்கொள்ளப்படவுள்ள பொருளாதார ஒப்பந்தத்தை உருவாக்கும் முக்கிய பணிகளை மேற்கொள்ளும் ஒரு நபர். இந்த நியமனத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரம், மேலும் ஆபத்தைச் சந்திக்கும்" என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பிலவும் தெரிவித்தார். (த-5)

SUPER BALL
சுபர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 519
சீட்டிழுப்பு திகதி 2016.07.04
வெற்றி இலக்கங்கள்
09 18 62 72 T
அடுத்த வியாழக்கிழமைக்கான கப்போட்
ரூ. 62,359,100/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

### கண்ணீர் அஞ்சலி



எமது கழக அங்கத்தவரான
**இ.கேதீஸ்குமாரின்**
அன்புத் தாயார்
**திருமதி துளசிமலர் இரவீந்திரன்**
அவரின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வளர்மதி முன்னேற்றக்கழகம்**
**சம்பியன் லேன், கொக்குவில்.**

### கண்ணீர் அஞ்சலி

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் **இயன்மருத்துவ உதவியாளரும் தரவுப் பதியுனருமாகிய**
திரு. க. அகிலகுமார் அவர்களின் அன்புத் தந்தை
***வல்லிபுரம் கதிரவேலு***
அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**முகாமைத்துவக்குழுவினரும், பணியாளர்களும்**
**யாழ் ஜெய்ப்பூர் நிறுவனம்**
(J 1972)(12.18)

### கண்ணீர் அஞ்சலி

**திருமதி துளசிமலர் ரவீந்திரன்**



எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொருளாளராக அரும்பணி ஆற்றிய துளசிமலர் அவர்களின் பிரிவு ஈடுசெய்ய முடியாத ஓர் இழப்பாகும். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய கற்பக விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பழைய மாணவர் சங்கம் -
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

தோற்றம் 08.03.1962 — மறைவு 04.07.2016

### நீங்காத நினைவில் 20ஆம் ஆண்டு

தோற்றம் 29 . 04 . 1976



மறைவு 04 . 07 . 1996

**அமரர் சுகந்தன் எட்வேட் நவரட்ணசிங்கம்**
(சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன்)

என்றும் சுகந்தம் வீசும் மலரே சுகந்தன்
நீ சென்று இருபது ஆண்டுகள் ஆனதடா
கால்பந்து வீரனாய், தோழனாய், தொண்டனாய்
தங்கையர் இருவரதும் மெய்க்காவலனாய்
நாம் தவமிருந்து பெற்ற அன்புத் தலைமகனே
இறைவன் உன்னை அழைத்தானோ இளவயதில்
மனம் தற்ற மறுத்தும் தற்றுக்கொண்டோம் இறைசித்தம் பாசமலரே
சுகந்தன்! இன்றும் நீ வாழ்கின்றாய்
எம் இல்லத்தில், மழலைவடிவில்

இரங்கல் திருப்பலிகள் இளவாலை போயிட்டி லூர்து அன்னை ஆலயத்திலும், Australia Liverpool All Saints Catholic Church இலும் ஆடி மாதம் 2ஆம் திகதி மாலை சனிக்கிழமை ஒப்புக்கொடுக்கப்பட்டன.

11,Tobruk Avenue
Liverpool NSW 2170,
Australia.

பெற்றோர்: நவரட்ணசிங்கம், குணசீலி
சகோதரிகள்: சுகிர்தா ஜோய் யேசுதாஸ்,
சுகன்யா அமலசீலன்

### மரண அறிவித்தல்

**கனகரட்ணம் ஞானப்பிரகாசம்**
(ஓய்வுபெற்ற குடியேற்ற அதிகாரி)



சிங்கவாசம், ஆலங்குழாய், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் ஞானப்பிரகாசம் நேற்று (04.07.2016) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம்சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மீனலோஜினியின் அன்புக் கணவரும், ஞான லோஜினி (மலேசியா), ஞானேஸ்வரன், காலஞ்சென்ற சௌபாக்கியலட்சுமி மற் றும் சறோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், தளையசிங்கம், இரட்ணசோதி ஆகியோரின் அன்பு மாமனும், சாமினியின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, பாக்கியம், அன்னலட்சுமி, மகேஸ்வரி, சிவயோகமலர் மற்றும் குமாரகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07. 2016) செவ் வாக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ஞானேஸ்வரன் (மகன்).**

### ஓராம் ஆண்டு நினைவு

**கட்டயன் சின்னத்தம்பி**

மண்ணகம் 06.05.1931 — விண்ணகம் 17.06.2015




அகல் விளக்காய் ஒளிதந்து
ஆலமரம் போல் தழைத்தோங்கி
இகமதில் செழிப்புடன் வாழ்வதற்கு
அன்பின் வழிகாட்டிய எம் தெய்வத்திற்கு
ஓராண்டு நிறைவதனில் அஞ்சலிகள் பல

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 05 . 1963



மறைவு 16 . 07 . 2015

**இராசலிங்கம் நந்தகுமார்**
திதி: பிரதமை

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
ஓராண்டாய் சென்று விட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான்-நாங்களோ
எது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

### ஓராண்டு நினைவலைகள்

**அமரர் சதாசிவம்**
**கணேஸ்வரன்**
- நயினாதீவு
(BA, Dip.In.EDU,MED,SLPS-III)
(முன்னாள் அதிபர் - யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்)



மண்ணகம் 16.10.1964 — விண்ணகம் 16.07.2015

திதி: பூர்பபக்க பிரதமை

கத்துகடல் நயினையிலே முத்தெனவே விளைந்தவனே
கணேசவெனும் பெயரோடு கல்வியிலே உயர்ந்தவனே
உத்தமனே உனையிழந்து ஓராண்டு போயிற்றா?
உள்ளம் உள்ளவரை உன்நாமம் நிலைத்திருக்கும்
வாழும் வயதினிலே வரலாறு ஆகிவிட்டாய்
நாளும் பொழுதெல்லாம் நாமிங்கே நடைபிணமாய்.
ஆளும் நயினையம்மன் அடியிணைக்கீழ் அமைதியுற
நீள நினைந்திருப்போம் நெஞ்சமுள்ள நாள்வரையும்
ஓம்! சாந்தி சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும்...
**குடும்பத்தினர்.**

இல.47, ஸ்ரேசன் அவனியூ,
வெள்ளவத்தை,கொழும்பு 06
(Col/2654)(11.47)
011 259 0142

### 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 30 . 06 . 1930



இறப்பு 28 . 06 . 2014

**மயில்வாகனம் இராசரத்தினம்**
திதி: பிரதமை (05.07.2016)

கண்ணிமைத்து விழிக்கவில்லை
இரண்டு ஆண்டுகள் சென்றுவிட்டதையா
ஒரு நொடிப்பொழுதும் அழியவில்லை
உங்கள் அன்பான உள்ளம் எம்மைவிட்டு....

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (05.07.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

இல.94/5,தபால்கந்தோர் லேன்,
வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம்.


குடும்பத்தினர்
சுபி (சுவிஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்.பி.டபிள்யு. விதிகளில் மாற்றம் செய்கிறது ஐ.சி.சி.

சர்வதேச கிரிக்கெட் சபை எல்.பி.டபிள்யு. விதிமுறைகளில் மாற்றம் செய்ய முடிவெடுத்துள்ளதாக அறிய வருகிறது.

மீள்பரிசீலனை கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில் துடுப்பாட்ட வீரர்களுக்குப் பாதகமாகவும் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாகவுமே இந்த மாற்றம் செய்யப் படவுள்ளது. தற்போதிருக்கும் விதிமுறைப்படி நடுவர் ஆட்டமிழப்பு என வழங்கிய தீர்ப்பை மாற்ற வேண்டுமாயின், இரு புறங்களிலும் காணப்படும் இலக்கின் நடுப் பகுதியில், பந்தின் அரைவாசிக்கும் அதிகமான பகுதி தாக்கவேண்டும். ஆனால், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விதியின்படி, பந்தின் அரைவாசி தாக்க வேண்டிய பகுதியாக விக்கெட்டின் ஓரம் மாற்றப்பட்டுள்ளது. இதனால், அதிகளவிலான ஆட்டமிழப்புக் கோரிக்கைகள் பந்துவீச்சாளர்களுக்குச் சாதகமாக வழங்கப்படும் நிலை உருவாகியுள்ளது. இந்த மாற்றம் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் அல்லது அதற்குச் சற்று முன்னர் ஆரம்பிக்கும் தொடர்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஐ.சி.சி. நேற்றுமுன்தினம் அறிவித்தது. (ம)






# நடையைக்கட்டினார் நடப்புச் சம்பியன்

விம்பிள்டன் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டார் நடப்புச் சம்பியனும் உலகின் முதல் நிலை வீரருமான ஜோகோவிக்.

நேற்று நடைபெற்ற மூன்றாவது சுற்று ஆட்டத்தில் ஜோகோவிக்கை எதிர்த்து மோதினார் 28 ஆவது இடத்திலுள்ள அமெரிக்க வீரர் சாம் குயரி. ஆட்டத்தின் ஆரம்பம் முதலே குயரி, ஜோகோவிக்குக்கு கடும் சவாலை வழங்கினார். 7:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் செற் குயரியின் வசமானது. முதல் செற்றில் இருந்த விறுவிறுப்புத் தன்மை இரண்டாவது செற்றில் இல்லை. 6:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவில் கைப்பற்றினார் குயரி. மூன்றாவது செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற் தோல்வியிலிருந்து தப்பினார் ஜோகோவிக். நான்காவது செற் 7:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் குயரியின் வசமாக முடிவில் அவர் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். ஜோகோவிக் கலன்டர் கிரான்டஸ்லாம் (ஒரு வருடத்தில் நடைபெறும் அத்தனை கிரான்ட்ஸ்லாம் கிண்ணங்களையும் கைப்பற்றுதல் கலன்டர் கிரான்ட்ஸ்லாம் எனப்படும்) படைப்பேன் என்று அறிக்கைவிட்டிருந்த நிலையில் அவரது கனவு நேற்றுக் கலைக்கப்பட்டது. (ம)

# ஆஸ்திரியா பந்தயம்; ஹமில்டன் முதலிடம்

உலக கார்ப் பந்தயத் தொடரின் ஆஸ்திரியாச் சுற்றில் நடப்புச் சம்பியனான லூயிஸ் ஹமில்டன் முதலிடம் பிடித்தார்.

நடப்பு வருடத்துக்கான உலக கார்ப் பந்தயத் தொடர் 21 சுற்றுக்களாக நடைபெற்று வருகிறது.10ஆவது சுற்றான ஆஸ்திரியப் பந்தயம் நேற்று நடைபெற்றது. 191 மைல்கள் தூரமுடைய பந்தயத்தை வெறுமனே ஒரு மணி நேரம் 27 நிமிடங்கள் 38.107 வினாடிகளில் கடந்து முதலிடம் பிடித்தார் ஹமில்டன். மக்ஸ் வெஸ்டன் 5.719 வினாடிகள் பின்தங்கி 2ஆவது இடத்தையும் கிமி ராய்க் கோனன் 3 ஆவது இடத்தையும் தமதாக்கினர். (ம)

# செரீனாவுக்கு இலகு வெற்றி

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில், நான்காவது சுற்றுக்கு முன்னேறினார் செரீனா வில்லியம்ஸ்.

லண்டனில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற மூன்றாவது சுற்று ஆட்டத்தில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸை எதிர்த்து ஜேர்மனியின் அன்னிகா பெக் மோதினார். முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய செரீனாவில்லியம்ஸ் இரண்டாவது செற்றிலும் நீடித்து ஆதிக்கம் செலுத்தி, அந்த செற்றை 6:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார். இதனால் அவர் மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)

# மீண்டும் வரவேண்டும் மெஸ்ஸி வீதியில் இறங்கிய ரசிகர்கள்

பன்னாட்டு ஆட்டங்களில் இருந்து விடைபெற்றுள்ள மெஸ்ஸி மீண்டும் களமிறங்கவேண்டும் என்று அவரது ரசிகர்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

கோப்பா அமெரிக்கா கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சிலியிடம் கிண்ணத்தைப் பறிகொடுத்ததைத் தொடர்ந்து, பன்னாட்டு ஆட்டங்களில் இருந்து விடைபெற்றார் ஆர்ஜென்ரீனாவின் தலைவரான மெஸ்ஸி. ஆர்ஜென்ரீனாவின் தோல்வியைவிட மெஸ்ஸியின் ஓய்வையே பலராலும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மரடோனா, ஆர்ஜென்ரீனா ஜனாதிபதி போன்றோர்கூட மெஸ்ஸி மீண்டும் வரவேண்டும் என்று தெரிவித்திருந்தனர். தற்போது மெஸ்ஸியின் ரசிகர்கள் அவரது வருகையை வலியுறுத்தி வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆர்ஜென்ரீனாவின் தலைநகர் பியுனோஸில் நேற்றுமுன்தினமும் மிகப்பெரும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. (ம)




# அரையிறுதிக்குத் தகுதி பெற்றது பிரான்ஸ்

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் மிகமிக இலகுவாக அரையிறுதிக்குத் தகுதிபெற்றது பிரான்ஸ்.

நடப்பு வருட யூரோ கிண்ணத் தொடர் பிரான்ஸில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற நான்காவது காலிறுதி ஆட்டத்தில் பிரான்ஸ், ஐஸ்லாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் அணியின் கிரைவுட் தனது அணியின் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். 20 ஆவது, 43 ஆவது 45 ஆவது நிமிடங்களில் பிரான்ஸ் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதி 4:0 என்று பிரான்ஸுக்குச் சார்பாக முடிந்தது. கிட்டத்தட்ட வெற்றிபெற்றுவிட்ட நிலையில் பிரான்ஸ். 45 நிமிடங்களில் 4 கோல்களைப் பதிவுசெய்ய வேண்டிய நெருக்கடியில் ஐஸ்லாந்து. ஆரம்பமானது இரண்டாம் பாதி. 56 ஆவது நிமிடத்தில் ஐஸ்லாந்து அணியின் சிக்தோர்சன் தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 59 ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் ஐந்தாவது கோல் பதிவானது. ஐஸ்லாந்து சார்பாக மேலும் ஓர் ஆரவாரமற்ற கோல் பதிவாக, முடிவில் 5:2 என்ற கோல் கணக்கில் மிகமிக இலகுவாக ஐஸ்லாந்தை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது பிரான்ஸ். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

**யாழ். தாச்சித் தொடர்**

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை காந்தி சனசமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் தாவடி காளிஅம்பாள் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி மோதவுள்ளது.

**சரஸ்வதியின் கால்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து இளவாலைசென். லூட்ஸ்அணி மோதவுள்ளது. (ம-23)

# வென்றது வசந்தசிறி

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ். மாவட்டத் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வசந்தசிறி அணி வென்றது.

அரியாலை காந்தி சனசமூக நிலைய மைதானத்தில் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியை எதிர்த்து உடுவில் உதயசூரியன் அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி 12:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வென்றது. (ம-23)




# திக்கம் இளைஞரின் தொடர் சம்பியனானது சென். மேரிஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 5

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி சம்பியனானது.

திக்கம் இளைஞரின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது. ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் நிதர்சனின் உதவியுடன் முதல் கோலைப் பதிவு செய்தது சென். மேரிஸ். வேறெந்த மாற்றமும் இல்லாமல் 1:0 என்ற மேரிஸின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் பத்தாவது நிமிடத்தில் நிரோசன் மேரிஸின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். விண்மீனின் முயற்சிகள் எவையும் கைகூடவில்லை. இறுதிவரை பதிலடி கொடுக்கப்படாத நிலையில் 2:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது சென். மேரிஸ்.

மக்கள் மனம் கவர்ந்த வீரனாக சென். மேரிஸ் அணியின் மதிவதனும், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் சுதாவும், ஆட்டநாயகனாக நிரோசன், தொடராட்ட நாயகனாக நிதர்சன் ஆகியோர் தெரிவாகினர். அதிக கோல்களை அடித்த வீரனாக விண்மீன் அணியின் உதயதாஸ் தெரிவானார். நன்னடத்தை அணியாக மணற்காடு சென். அன்ரனிஸ் அணி தெரிவானது. (ம-23)

# சென்றலைட்ஸ் சொக்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 5

அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி சம்பியனானது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதியது. இதில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி 87:71 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

# முரசொலி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 5

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் அச்சுவேலி முரசொலி அணி சம்பியனானது.

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் அச்சுவேலி முரசொலி அணியை எதிர்த்து அச்சுவேலி கோல்ட் ஸ்ரார் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அச்சுவேலி கோல்ட் ஸ்ரார் அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரெனோசன் 16 ஓட்டங்களையும், பிறேம்குமார் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அச்சுவேலி முரசொலி அணியின் சார்பில் காந்தறூபன், நிதர்சன், சுபதாஸ் மூவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

88 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அச்சுவேலி முரசொலி அணி 5.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக காந்தறூபன் 30 ஓட்டங்களையும், நிதர்சன் 27 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-23)

# அரையிறுதியில் பாடும்மீன்

யாழ்ப்பாணம், ஜூலை 5

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் கால்பந்தாட்டத் தொடரில் பாடும்மீன் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் அணி மோதியது. இதில் குருநகர் பாடும்மீன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)



# அரியாலை வலைப்பந்து; வென்றது விக்ரோறியா

யாழ்ப்பாணம், ஜூலை 5

அரியாலை சனசமூக நிலையம் நடத்தும் வலைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் விக்ரோறியா அணி வெற்றிபெற்றது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அரியாலை வி.கழகத்தை எதிர்த்து விக்ரோறியா அணி மோதியது. இதில் விக்ரோறியா அணி 17:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# யூரோ அரையிறுதிகள்

யூரோக்கிண்ண காலிறுதிகள் முடிவடைந்து அரையிறுதி ஆட்டங்கள் நாளை மறுதினம் ஆரம்பமாகின்றன. இதன்படி நாளை மறுதினம் நடைபெறவுள்ள அரையிறுதியில் போர்த்துக்கல், வேல்ஸ் அணிகள் மோதுகின்றன. எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதியில் ஜேர்மனி, பிரான்ஸ் அணிகள் மோதவுள்ளன. ஆட்டங்கள் அனைத்தும் இலங்கை நேரப்படி அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறும். (ம)

# சங்கானை கிங்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 5

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்திய 7 வீரர்கள் பங்குபற்றும் 6 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் சங்கானை கிங்ஸ் அணி சம்பியனானது.

கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சங்கானை கிங்ஸ் அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 5 : 2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 16 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் சங்கானை கிங்ஸ் அணியின் சார்பில் சூரி 3 இலக்குகளை வீழ்த்தினார்.



17 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சங்கானை கிங்ஸ் அணி 4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. பந்து வீச்சில் கரவெட்டி ஞானம்ஸ் அணியின் சார்பில் சேந்திரன் 3 இலக்குகளை வீழ்த்தினார். ஆட்டநாயகனாகவும், தொடராட்ட நாயகனாகவும் சங்கானை கிங்ஸ் அணியின் சூரி தெரிவானார். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100% இருப்பு அகற்றல்
# மாபெரும் விற்பனை இரண்டு நாள்களில்
# உங்கள் யாழ். நகரில்

**யாழ்ப்பாணப் பெண்களுக்கு பொற்காலம் பிறந்திருக்கு இரண்டு நாள்களில் தங்கமுலாம் பூசப்பட்ட ஜெய்புரி குந்தன், மும்பாய் கிறிஸ்டல் ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கன் டயமன்ட் ஜுவலரிகளை நம்பமுடியாத விலைகளில் கொள்வனவு செய்ய பொன்னான வாய்ப்பு**

## 100/=, 200/=, 300/= வில்

**ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில் உங்களுக்கு பிடித்த டிசைன்களை தெரிவு செய்து**
**100/=, 200/=, 300/= ஐ செலுத்துங்கள்**

**இந்த விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.**

| | | | |
|---|---|---|---|
| • கொரியன் ஸ்டேன் ஸ்டட்ஸ் | ரூ.100/= Only | • கொரியன் ஸ்டோன் சாரி பின் | ரூ.300/= Only |
| • கோல்ட் கவரிங் செயின் பென்டன்ட் | ரூ.100/= Only | • ஆஸ்திரேலியன் டயமண்ட் நெக்லஸ் செட் | ரூ.300/= Only |
| • ஆஸ்திரேலிய டயமண்ட் மோதிரம் | ரூ.100/= Only | • கோல்ட் பிளேட் வலையல் செட் | ரூ.300/= Only |
| • வெஸ்டன் ஸ்டைல் இயரிங் | ரூ.100/= Only | • கோல்ட் பிளேட்ட் செயின் | ரூ.300/= Only |
| • அமெரிக்கன் டயமண்ட் காதனி | ரூ.100/= Only | • ஆஸ்திரேலியன் டயமண்ட் ஆண்கள் மோதிரம் | ரூ.300/= Only |
| • கோல்ட் கவரிங் ஆண்கள் மோதிரம் | ரூ.200/= Only | • ஆஸ்திரேலியன் டயமண்ட் பிரேஸ்லட் | ரூ.300/= Only |
| • ஆண்கள் லொக்கட் செயின் | ரூ.200/= Only | • சில்வர் பிளேட் கால் கொலுசு | ரூ.300/= Only |

**விசேட சலுகை: விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு ரூ.500/=, - ரூ.5000/= வரை விசேட ஆபரணங்கள்**

## இடம்: மயூரன் கல்யாண மண்டபம்
**(நல்லூர் கோயில் முன்பாக - தெற்கு வீதி, நல்லூர்)**

## காலம்: 5ஆம், 6ஆம் திகதி ஆடி 2016
**(செவ்வாய், புதன்கிழமைகளில்)**

## நேரம்: காலை 9.00 - இரவு 7.00 மணிவரை
**(மதிய உணவு இடைவேளை இல்லை)**

அனுமதி இலவசம்

தொ: 077 604 7788

விற்பனை பெண் பிரதிநிதிகள் தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.